

லயன் காமிக்ஸ்
'ஸ்பைடர்'
ரூ. 1001/-
பரிசுப் போட்டிகள்!
க்ரைம் க்விஸ்!
ரூ.2.00



# ஹாட்-லைன் - II

வாசக நண்பர்களே,

நன்றி - தைரியமாக ரூ. 20/- செலவழித்து இந்த புக்கை வாங்கியதற்குத்தான்! எங்கள் மீது நீங்கள் வை
திருக்கும் நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது என்று நினைக்கிறேன்...!

"சென்சுவரி ஸ்பெஷல்"க்கு விளம்பரப் படுத்தியிருந்த கதைகளுக்கும், இதழில் இடம் பெறும் கதைகளுக்
மிடையே கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்! டெக்ஸ் வில்லரின் "பலி கேட்ட புலிகள்" தயாரிப்பில் தாமதமா
தால் அதற்குப் பதிலாக "இரும்புக் குதிரையின் பாதையில்" எனும் மற்றொரு முழு நீள டெக்ஸ் வில்லர் த்ரில்
இடம் பெறுகிறது! "பலி கேட்ட புலிகள்" ஓரிரு மாதங்களில் ரூ. 6/- விலையில் வரும். அப்புறம் - "ஆர்ட்டிக்கி
ஆர்ச்சி" மினி சாகஸத்திற்குப் பதிலாக "விண்வெளி மோதல்" என்ற ஆர்ச்சி கதை வந்துள்ளது! ஜானி நீ
கதைக்குப் பதிலாக மாடஸ்டி பிளைஸி கதை வரயிருப்பதைப் பற்றி போன மாதத்து ஹாட்-லைனில் எ
யிருந்தேன்!

கதைகளைப் படித்து விட்டு உங்கள் எண்ணங்களை விரிவாக எழுதுங்களேன்! அது மட்டுமல்ல - ஆங்காங்
இடம்பெற்றுள்ள எல்லாப் போட்டிகளுக்கும் - கேள்விகளுக்கும் பதில் எழுதியனுப்பினால் மிகவும் சந்தோ
படுவேன்!

ஒரு முக்கியக் குறிப்பு: பக்கம் 245ல் வெளியாகியுள்ள க்ரைம் க்விஸ் - (10) இலங்கை வாசகர்களு
மட்டுமே! அந்தப் போட்டிக்கான விடைகளை உள்நாட்டு வாசகர்கள் எழுதிட வேண்டாமென கேட்டுக் கெ
கிறேன்! இலங்கை நண்பர்கள் விடை அனுப்பக் கடைசித் தேதி : 25-6-94.

அடுத்த மாதம் கேப்டன் பிரின்ஸ் குழுவினரின் 'ஒரு திகில் பயணம்" என்னும் த்ரில்லர் வருகிறது! அ
தொடர்ந்து நமது லயனின் 10வது ஆண்டு மலராக மின்னல் படையினர் தோன்றும் "மரண மண்ட
அட்டகாசமாக வரயிருக்கிறது!

ஆஸ்திரேலியாவிலிருந்து அருமையானதொரு காமிக்ஸ் தொடர் வரயிருப்பதாக போன மாதம்
யிருந்தது நினைவிருக்கலாம்! 'பீட்டர் பாலன்டைன்' என்ற காட்டிலாகா அதிகாரியின் முதல் சாகஸமா "ந
க...ல் நரகம்" எனும் த்ரில்லர் தயாராகி வருகிறது!

அப்புறம் இன்னொரு குட் நியூஸ்....!

காமெடி கௌ-பாய் லக்கி லூக்கின் முழுநீள - முழு வண்ண கார்டூன் சாகஸங்கள் அவ்வப்போது
மினி - லயனில் வந்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியுமென நினைக்கிறேன்! இனிமேற்கொண்டு
லூக் கதைகள் நமது லயனில் அட்டகாசமாக வரயிருக்கின்றன! முழு விபரங்கள் அடுத்த மாதம்...!

பக்கம் 331ல் ஹாட் லைன் II தொடருகிறது என்ற செய்தியோடு இந்தப் பகுதியை முடித்துக் கொள்கி
மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! அதுவரை - happy reading!





## ஹாட் - லைன் - 1

லயன் ரசிகர்களே, மே_1994.

இது நான் வழக்கமாக எழுதி வரும் பகுதிதான் என்ற போதிலும் - இம்முறையோ பேனாவைக் கையில் எடுத்தவுடன் ஒரு இனம் புரியாத த்ரில்!

நாம் அனைவருமே எதிர்பார்த்த லயனின் 100வது இதழ் இது...!

இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் 100 இதழ்கள் தயாரிப்பது என்பது பெரியதொரு சாதனையாக இல்லாமல் இருக்கலாம்! - ஆனால் -

Reading habit மிகவும் குறைந்து வரும் இந்தக் காலத்திலும்...

காமிக்ஸ் படிப்பது என்பது பரவலான பழக்கமாகாது இருந்து வரும் சூழ்நிலையிலும்....

பெரிய பத்திரிக்கைகளோடு விலையிலோ, விளம்பரத்திலோ, விற்பனை அமைப்பிலோ போட்டி போட இயலாத நிலையிலும்...

வாசகர்களாகிய உங்களிடம் எங்களுக்கென ஒரு soft corner ஐ தக்க வைத்திருப்பதே எங்களது சாதனை என்று நினைக்கிறேன்!

சதமடித்த சந்தோஷத்தில் முக்கிய விஷயத்தை மறந்து விடக்கூடாதென்பதால் - கடைசியில் சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லி விடுகிறேன்! நமது லயனின் வளர்ச்சிக்கு உதவியாக - உறுதுணையாக இருந்து வந்த அனைவருக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்! முக்கியமாக -

தயாரிப்பில் உதவிய எங்கள் பணியாளர்கள்...


விற்பனையில் உதவிட்ட ஏஜெண்ட் அன்பர்கள்...

நிறை/குறைகளை நிறைவாகச் சுட்டிக்காட்டி எனது பணியை ஒரு enjoyable experience ஆக்கிய வாசக நண்பர்கள்...

அனைவருக்கும் - a very very big 'thank you!'

காமிக்ஸ் எனும் பாலம் மூலம் உங்களை சந்தித்து வரும் இந்த அனுபவத்தை மிகவும் ரசிக்கிறோம்! புதுசாக 'தம்' பிடித்துக் கொண்டு அடுத்த சதத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டோம் - வழக்கம் போல் travel companion ஆக நீங்கள் இருப்பீர்களென்ற நம்பிக்கையோடு! கடவுள் துணையும், உங்கள் ஆதரவும் இருக்கும் வரை நமது காமிக்ஸ் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்!

அன்புடன்,



S. விஜயன்

ஆசிரியர்.

"லயன் காமிக்ஸ்" மாத இதழை வெளியிடுவோர்:

பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,


தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: (04560) 20649.

S. விஜயன். வெளியிடு நிர்: 100. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.


டெக்ஸ் வில்லர் தோன்றும்
இரும்புக் குதிரையின் பாதையில்!
நியூமெக்சிகோ மாநிலத்தின் போர்ட் சம்மரில் மண்டையைப் பிளக்கும் வெயில் அடித்த ஒருநாள் நண்பகலில்...
மிஸ்டர் வில்லர் என்பவர் வந்திருக் கிறார் சார்!
நல்ல காலம்..! அவரை உடனே அனுப்பி வை!


ஹலோ ப்ரெடி!
உன்னைச் சந்திப்பது மகிழ்ச்சியாக இருக்கு டெக்ஸ்!
''கர்னலாக'' பதவி உயர்வு பெற்றதற்கு வாழ்த்துக்கள்!
தேங்க்ஸ்!
உன்னுடைய பையன் எப்படி இருக்கிறான்?
பைன்! கர்சனுடன் சேர்ந்து இப்போது வேட்டைக்குப் போயிருக்கிறான்!
நானும் அவர்களுடன் செல்ல விருந்த போது தான், இங்கு விரைந்து வரும் படி உன்னுடைய தந்தி கிடைத்தது!
தந்தியில் காரணம் எதுவும் கூறப் பட்டிருந்ததா?
நோ, ஆனால் உன்னுடைய பெயரைப் பார்த்த உடன் என்னுடைய குதிரையில் ஏறி இந்தப் பக்கமாகத் தட்டி விட்டேன்!
பொறுப்பில்லாமல் ஹாயாகச் சுற்றித் திரிந்த தொரு லெப்டினன்ட் எப்படி கர்னலாக ப்ரமோஷன் ஆனான் என்ற கதையைக் கேட்டாக வேண்டாமா?
அட போப்பா!


வெட்கப்படாமல் சொல்லுப்பா! எத்தனை செவ்விந்தியத் தலைவர்கள் மண்ணைக் கவ்வ வைத்தாய் என்று இந்த பழைய நண்பனுன டெக்ஸிடமாவது சொல்லக் கூடாதா?
உனக்கு எப்போதுமே கிண்டல் தான்! உன் நலனுக்காக அருந்துவோம்!
உனக்காகவும்!
இப்பச் சொல்லு. எதற்காக என்னை வரவழைத்தாய்?
பெரிய பிரச்சனை!
எல் பாஸோவிலிருந்து கனடா ஆற்றுக்குச் செல்லும் கரடுமுரடான பாதை உனக்குத் தெரியுமா? அது அந்திரேயா மலைப்பகுதியையும் ஜுவாமெனிஸ் பகுதியையும் கடந்து செல்கிறதல்லவா?
எனக்கு அனுபவபூர்வமாகத் தெரியும்!
பாலைவனம் வழியாகச் செல்லும் நரகப்பாதை அது! தண்ணீர் கிணறுகள் எல்லாம் எப்போதும் காய்ந்து கிடைக்கும். அதன் வழியாகச் செல்பவர்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் செல்ல வேண்டும்!
இந்த நரகப் பாதையை யொட்டி ஒரு கம்பெனி ரயில் பாதை போடுகிறது.
என்னது?


எல்பாஸோவிற்கும் சாண்டா பீக்கும் ஏற்கனவே ரயில்பாதை இருக்கும் போது, இந்தப் புதிய பாதையால் என்ன பிரயோஜனம்?
எனக்குத் தெரியாது!
எனக்குத் தெரிந்த தெல்லாம், புதிய பாதை எல்பாஸோவையும் கன்சாஸ் நகரையும் இணைக்கப் போகிறது என்பதே! வரை படத்தில் அதைக் காட்டுகிறேன்!
?
சிறு சிறு கோடுகளாகப் போடப் பட்டுள்ளது தான் புதிய ரயில் பாதை
UTAH
COLORADO
KANSAS
MISSOURI
Kansas City
Trinidad
Wichita
ARIZONA
NEW MEXICO
OKLAHOMA
ARKANSAS
Amarillo
Phoenix
Fort Sumner
Oklahoma City
TEXAS
EL PASO
MEXICO
இந்த ரூட்டில் தண்டவாளம் அமைப்ப தென்றால் ஏராளமாய்ச் செலவாகும்! இரத்தமும் வியர்வையும் சிந்தினால் கூட பைசா லாபம் சம்பாதிக்க முடியாது...!
நீ சொல்வது முற்றி லும் சரியானதே!
உண்மையைச் சொல்வதானால், ஏற்கனவே இரத்தம் சிந்துவது துவங்கி விட்டது! ரயில் பாதை அமைத்தாக வேண்டுமென்ற வேகத்தில் கம்பெனியினர் யார் கிடைத்தாலும் வேலைக்கு அமர்த்தி வருகின்றனர்! வேலையாட்களின் பட்டியல் என் கைக்கு வந்துள்ளது! அதைப் படித்துப் பார்த்தால் இரத்தம் உறைந்துவிடும்!


இதைப்படி!
?
அதை வேகமாகப் படித்து முடித்த டெக்ஸ் திகைத்துப் போனார்...
ப்பூ! எல்லாமே அயோக்கிய சிகாமணிகள்!
தலைமை அலுவலகம் எனக்கு என்ன சொல்லி இருக்கிறது தெரியுமா?
நான் யூகிப்பது சரியா என ஒரு டாலர் பந்தயம் கட்டுவோமா?
அப்படியே செய்வோம்!
இந்தப் பகுதி உன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதி என்பதால் உதவிக்கு கூடுதலாகப் படையை அனுப்ப இயலாது. என்ன பிரச்சனை இருந்தாலும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையது என்று அவர்கள் சொல்லியிருப்பார்கள்!
பந்தயத்தில் ஜெயித்து விட்டாய் டெக்ஸ்!
எனவே ஒரு ரேஞ்சரை வரச்சொல்லி தந்தி அனுப்பினுயாக்கும்!
வேறு என்ன செய்ய முடியும்?
மெஸ்கெலரோ செவ்விந்தியர்களின் புரட்சி விவகாரத்தில் ஏராளமான ஆட்களை அங்கு அனுப்பி விட்டேன்.
எனவே ரயில் பாதையை போடும் முகாமுக்கு என்னால் ரோந்துப் பிரிவை அனுப்ப முடியவில்லை!
அந்த முகாம் எங்கு இருக்கு?


இப்போதைக்கு இங்கே அதாவது ஜுவாமெனிஸிலிருந்து கிழக்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது!
நீ அங்கு போக விரும்பினால், ரயில் பாதை அமைக்கும் பொறுப்பில் உள்ள எஞ்சினியர் டேடனுக்கு ஒரு கடிதம் தருகிறேன்...
அது தேவை இல்லை ப்ரெடி...!
இது போன்ற விவகாரங்களை நான் ஏற்கனவே சமாளித்துள்ளேன்! எப்போது என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்!
அதை நீயே பார்த்துக் கொள்..!
...ஆனால் இந்தப் பிரச்சனையை ஒற்றை ஆளாக உன்னால் தீர்த்து வைக்க முடியுமா என்பது சந்தேகமே...!
அது பற்றிக் கவலைப்படாதே...! என்னால் சமாளிக்க முடியாது என நான் நினைத்தால் உடனே உதவி கேட்டு இங்கு திரும்பி வந்து விடுவேன்!
இன்னும் ஒரு விஷயம் ப்ரெடி.... மெஸ்கெலரோ புரட்சி விவகாரத்திற்கும், புதிய ரயில் பாதை போடுவதற்கும் தொடர்பு இருக்கிறது என்று நீ நினைக்கிறாயா?
தொடர்பு இருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கு!
ரயில் பாதை இந்தப் பகுதிக்கு வந்து ஒரு மாதம் சென்ற பின்னர் தான் புரட்சி விவகாரம் தீவிரமானது...!
ஓ.கே.! வேலையைத் தொடங்குகிறேன்


இன்று இரவு சாப் பிட்டுவிட்டுப் போகலாமே?
தேங்க்ஸ்! ஆனால் ரயில்வே முகாமுக்கு விரைந்திட விரும்பு கிறேன்!
வெற்றிக்காக அருந்துவோம்!
குட் லக் டெக்ஸ்!
பத்து நிமிடங்களுக்குப் பின்னர் டெக்ஸ் வில்லர் போர்ட் சம்மரை விட்டு வெளியேறினார்...
FORT SUMMER
மோசமான விவகாரம்!
ரயில் பாதை அமைக்கும் பணி யென்றாலே தலைவலிதான்!
...அங்கே வேலை பார்க்கும் ஆசாமி களை முதலில் சமாளிக்க வேண்டும்!
மூன்று மணி நேரத்திற்குப் பின்னர்...
ரயில் பாதை! இதைத் தொடர்ந்து சென்றாலே முகாமை எளிதில் அடைந்து விடலாம்!


ஆனால் அப்போது வெடிகுண்டு ஒன்று வெடிக்கும் சப்தம் பயங்கரமாக கேட்டது!
டைனமைட்!
டொம்!
...அதைத் தொடர்ந்து துப்பாக்கிகளின் முழக்கமும் கேட்டது!
டுமீல் டுமீல் டுமீல் டுமீல்
ஏற்கனவே பிரச்சனை துவங்கிவிட்டது போல் தெரிகிறது!
டெக்ஸ் இருக்கும் இடத்திலிருந்து 2 மைல்களுக்கு அப்பால்...
டுமீல் டுமீல் டுமீல் டுமீல்
டுமீல் டுமீல் டுமீல்
கொள்ளையர்கள்! நாம் சம்பளம் போட பணம் கொண்டு செல்வது அவர்களுக்குத் தெரிந்திருக்கு!
வெளியில் ஏராளமான ஆட்கள் இருக்கிறார்கள் மிஸ்டர் மார்கன் நம் எல்லாரையும் கொன்று விடுவார்கள்!
வாயை மூ


நாம் பின்புறமாக வண்டியை ஓட்டிச் சென்றால்...?
பைத்தியம் போல் பேசாதே!
வண்டியைக் கிளப்பினால் அவர்கள் நம்மை சல்லடையாய் துளைத்து விடுவார்கள்! பேசாமல் இருந்தால் உயிர் பிழைக்க வாய்ப்புண்டு!
ஹலோ... உயிர் முக்கியம் என நினைத்தால் பேசாமல் பணத்தைத் தூக்கி வெளியே எறியுங்கள்!
நீ பெரிய தவறு செய்து விட்டாய் மிஸ்டர்! இந்த ரயிலில் பணம் எதுவும் இல்லை!
அப்படியானால் கையைத் தூக்கியபடி வெளியே வா! நீ உண்மையைச் சொல்லியிருந்தால் உனக்கு ஒன்றும் நேராது. ஆனால் நீ சொல்வது பொய்யானால், நாளை சூரியன் உதயமாவதைப் பார்க்க நீ உயிருடன் இருக்க மாட்டாய்!
நாசமாய் போ!
ரைட்! கடைசிப் பிரார்த்தனைகளைச் சொல்லிக் கொள்ள வேண்டியது தான்!
அதுவும் திருடர்கள் கும்பலிடம்!


இப்போது எல்லாம் தெளிவாகப் புரியுது..!
...முதலில் திருடன்களின் குதிரை களை இங்கிருந்து விரட்ட வேண்டும்!
அதன் பிறகு வின்செஸ்டர் ரைபிளை எப்படிக் கையாளுவது என்பது பற்றி அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்!
சில நிமிடங்களுக்குப் பின்னர்..
டுமீல் டுமீல்
ஹிஹிஹி
டுமீல் டுமீல்
ஹிஹிஹி
குதிரைகள் வெறித்து ஓடுகின்றன!


எந்தப் பிசாசு இப்படிச் செய்தது..?
?
அதோ! அந்தப் பாறைக்குப் பின்னால்!
டுமீல் டுமீல் டுமீல் டுமீல்
ரொம்ப அவசரப் படுகிறீர்கள் தம்பிகளா!
ஆ!
டுமீல் டுமீல்
சரியான கற்றுக் குட்டிகள்!
க்ராக்
அவனை வீழ்த்தி விட்டேன்!
கீழே சாய்ந்து விட்டான் போல் தெரியுது!
ஆனால் திடீரென்று கிளம்பிய தோட்டா மழை அவர்களுடைய நம்பிக்கையில் மண்ணைப் போட்டது!
டுமீல் டுமீல்


அங்கு என்னதான் நடக்கிறது?
இங்கேயே இருந்து ரயிலைக் கவனித்துக் கொள் - நானும் ஸ்டானும் அங்கு போய் என்னவென்று பார்க்கிறோம்!
டுமீல் டுமீல்
வாங்கடா... மாப்பிள்ளைகளா!
என் கண்ணில் யாரும் படலையே..!
கீழே படு!
டுமீல்!


டுமீல் டுமீல்
ஐயோ!
நாசமாய் போச்சு!
அக்கணத்தில் ரயிலில் இருந்த மூன்று காவலர்கள் கொள்ளையர்களை நோக்கி சரமாரியாகச் சுடத் துவங்கினர்.. சமாளிக்க முடியாத நிலை கொள்ளையர்களுக்கு ஏற்பட்டது...
டுமீல் டுமீல்
வசமாய் மாட்டிக் கிட்டேன்!
நாம் கொல்லப்படுவதற்கு முன்பு இங்கிருந்து ஓடி விடுவோம்!
டுமீல்
பொறு நண்பா, இவ்வளவு அவசரப் பட்டால் எப்படி?
டுமீல்


ஐயோ! ஜோ ஹெல்ப் மி!
தொல்லையாப் போச்சு!
டுமீல் டுமீல்
ஆ!
காயமடையாத ஒரு கொள்ளையன் தன் சகாக்கள் கீழே விழுவதைப் பார்த்தவுடன் ஓட்டமெடுத்தான்...
இந்த நரகத்தை விட்டு நான் ஓடி விட வேண்டும்!
குதிரை மீது தாவி வெறி பிடித்தவன் போல் விரட்டினான்...
யா! போ!
சுடும் எல்லையைத் தாண்டி விட்டான்!


ஹேய்! சுடுவதை நிறுத்துங்கள்!
ரயிலைக் காப்பாற்றிய ஆசாமி அவர்தான்!
நாம் போய் அவரைச் சந்திப் போம்!
யப்பாடி... தலை தப் பிச்சது தம்பிரான் புண்ணியம்!
என்னால் இன்னமும் நம்ப முடிய வில்லை...!
நண்பரே... உங்களுடைய உதவிக்கு ரொம்ப நன்றி! நீங்கள் இல்லா விட்டால் எங்களைத் தொலைத்துக் கட்டியிருப்பார்கள்!
நாம் அதிர்ஷ்டக் காரர்கள் தான்!



என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்கிறேன் - நான் தான் மார்கன் - சதர்ன் ரயில் பாதை நிறுவனத்தின் அக்கவுண்டண்ட்! இவர்கள் என்னுடைய பாதுகாவலர்கள்!
உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி! என் பெயர் டெக்ஸ் வில்லர்!
டெக்ஸ் வில்லர்? கேள்விப்பட்ட பெயர் போல் இருக்கிறதே..!
இருக்கலாம் மிஸ்டர் மார்கன்!
முதலில் யுத்த களத்தைப் பார்வை யிடுவோம்!
நீங்கள் சொல்வது சரிதான்!
இந்த மூவருமே க்ளோஸ்?
அவர்களுடைய முகமூடியை கழற்றி விட்டு அவர்களை நமக்குத் தெரியுமா எனப் பார்ப்போம்!
இறந்து கிடந்தவர்களின் முகமூடி நீக்கப்பட்டது. ஆனால்...
ஹ்ம்ம்ம்... இதற்கு முன் இவனை நான் பார்த்ததில்லை!
நானும் தான்!
ரயில் பாதைக்கு அந்தப் புறம் கிடக்கும் இரண்டு பேருக்கு காயம் மட்டும்தான்..!


குரங்குச் சேட்டை எதுவும் செய்ய நினைக்காதீர்கள்! துப்பாக்கியை கீழே போடுங்கள். இல்லையேல் இருவரும் செத்துப் போவீர்கள்!
ஆ!
உன்னைப் பழிவாங்காமல் விட மாட்டேன்!
வாயை மூடுடா ராஸ்கல்!
இனி உங்கள் அழகு முகரக் கட்டைகளைப் பார்ப்போம்!
போதுமா?
திருப்தியா?
இதைவிட அழகான குரங்குகளைப் பார்த்திருக்கிறேன்!
பெரிய ஜோக்!
இவர்களைத் தெரிகிறதா?
நோ. இருவரையுமே தெரியவில்லை மிஸ்டர் வில்லர்!



வில்லர்! டெக்ஸ் வில்லர்!
?
வெல், இவர்களையும் ரயிலில் ஏற்றிக் கொள்வோம். பின்னர் விசாரிப்போம்!
ரைட்!
காயமடைந்த கொள்ளையர்களுக்கு ரயிலில் சிகிச்சை தரப்பட்டு விசாரணை துவங்கியது... ஆனால் அவர்கள் வாய் திறக்க மறுத்து விட்டனர்...
பதில் சொல்லாமல் அடம் பிடித்தால் உங்களை ஷெரீபிடம் ஒப்படைக்க வேண்டியது தான்!
அருகில் உள்ள நகரமே சாண்டா ரோசாதான்! அதுவும் 40 மைல் தூரத்தில் உள்ளது! ஆனால் இப்போது நாம் திரும்பிப் போக முடியாது!
ஏன் முடியாது? முன்னால் இருக்கும் ரயில் பாதை தகர்க்கப்பட்டுள்ளது என்பதால் பின்னால் திரும்பிப் போவதுதான் ஒரே வழி!
உப்!
ஆனால்... இன்று மாலைக்குள் நாங்கள் தொழிலாளர்கள் முகாமை அடைய வேண்டுமே...
சம்பளப் பணம் தானே காரணம்?


யெஸ்! மாலைக்குள் இது அங்கே இருக் காவிட்டால் பெரிய ரகளையே ஏற்பட்டு விடும்!
அங்குவேலை பார்க்கும் ஆசாமிகள் அத்தனை பேரும் முரடன்கள் தான் என்ற போதிலும் அவர்களைச் சரிக் கட்டி விட முடியும்! ஆனால் தகராறு பண்ணுவதற்கென்றே ஒரு கும்பல் உள்ளே உள்ளது! பணம் உரிய நேரத்தில் போய்ச் சேராவிட்டால் பிரச்சனையைக் கிளப்பி விடுவார்கள்!
உங்களுடைய நிலைமை புரிகிறது. ஆனால் அங்கு எப்படிப் போய்ச் சேர் வீர்கள் என்பதுதான் தெரியவில்லை... அதாவது...
தொடர்ந்து சொல்லுங்கள்!
சரியான நேரத்தில் பணம் அங்கு போய்ச் சேர எந்த ஒரு 'ரிஸ்கும்' நான் எடுக்கத் தயார்!
வெல், நீங்கள் எடுக்க வேண்டிய ரிஸ்கே நான்தான்! மார்கன்!
இப்போதைக்கு இங்கே என்னிடம் மட்டுமே குதிரை உள்ளது!
?
?!
மலைக்குப் பின்னாலிருக்கும் என்னு டைய குதிரையை எடுத்துக் கொண்டு, ஒரு சில நிமிடங்களில் முகாமை நோக்கி நான் புறப்பட முடியும்!



மிஸ்டர் வில்லர், பணம் தொலைந்து விட்டால்.. பிரளயமே உருவாகிவிடும்!
பணம் தொலைய் ஒரே ஒரு வழிதான் இருக்கு...
அதாவது, நானே பணத்தை எடுத்துக் கொண்டு எல்லையைத் தாண்டி ஓடி விட வேண்டும்!
நோ! நான் அப்படி ஒரு போதும் நினைக்கவில்லை...
...எங்களுக்கு இவ்வளவு தூரம் உதவி செய்த பிறகு நான் உங்களை நம்பவில்லை என்றால் நான் மனுஷனே இல்லை! என் கவலையெல்லாம் இந்த வழிப்பறிக் கும்பலை நினைத்துத்தான்!
கும்பலில் எஞ்சியிருப்பது ஒருவன் தான்!
அவனும்.. துண்டைக் காணோம் - துணியைக் காணோம் என்று ஓடிவிட்டான்!
நீங்கள் சொல்வதும் சரிதான்!
யெஸ். நீங்கள் சொன்ன ஒரு வழிதான் நமக்கு இருக்கு - நீங்கள் போய் குதிரையுடன் வாருங்கள் மிஸ்டர் வில்லர்!
உங்கள் நம்பிக்கைக்கு நன்றி மார்கன்! உங்கள் திருப்திக்காக இதையும் காட்டுகிறேன்...!
?!
வாவ்! ரேஞ்சர்!


அதே சமயம் ரயில் பாதை போடும் தொழிலாளர் முகாமில்...
கம் ஆன் மென்! நமக்கு வர வேண் டிய சம்பளத்தை வாங்குவோம்!
முகாமுக்கு திரும்புங்கள்!
ஹேய்! வேலையை அப்படியே நிறுத்து! சம்பளப்பணம் கிடைக்கும் வரை யாரும் வேலை செய்யக் கூடாது!
சாம்! ஆட்கள் வேலையை நிறுத்தி விட்டு இங்கு வந்து கொண்டிருக்கின்றனர்! பிரச்சனை வரப் போகிறது என்று தெரிகிறது.
இப்ப என்ன வேண்டுமாம்?
மார்கன் சம்பளப் பணத்துடன் சீக்கிரத்தில் திரும்பி வருவார் என்பது அவர்களுக்குத் தெரியுமே!
அது என்னவோ தெரியாது! தகராறு பண்ண இங்கு வந்து கொண்டிருக் கின்றனர்!
நாசமாய் போகும் இந்த வேலைக்குச் சேர்ந்த நாள் முதல் தலைவலி தான்!
எங்கள் பணம் எங்களுக்கு வேண்டும்!
காத்திருந்து காத் திருந்து ஏமாந்து விட்டோம்!
பணத்தைக்கொடு!


அதே சமயம்-
ஆட்கள் கச்சிதமாக வேலையை முடித்து விட்டார்கள் பில்!
சரியான முட்டாள் நீ!
இன்று இரவுதான் ரகளையை துவக்க வேண்டும் என்று நமக்கு உத்தரவிடப் பட்டுள்ளது!
?
சில மணி நேரத்திற்கு முன்பே ரகளை துவங்கி விட்டதால் என்ன வித்தியாசம்?
மரமண்டை!
இன்னும் இரண்டு மணி நேரத்தில் இருட்டி விடும்! நமது திட்டத்தில் ஏதா வது கோளாறு ஆகி விட்டால் கூட பிரச்சனைக்கு யார் காரணம் என்பது அவர்களால் கண்டு பிடிக்க முடியாமல் போய்விடும்!
SALOON
ஆனால் -
வெளியே வா!
வெளியே வந்து மூஞ்சியைக் காட்டு!
எங்களுடைய பணத்தைக் கொடு!
க்ராஷ்


வெளியே வா!
க்ராஷ்
சீக்கிரம் சாம்! அவர்கள் நம்மை கொன்று விடுவார்கள்!
நோ!
முட்டாளே அங்கு திரும்பிப்போ! ரகளையை நிறுத்து!
இருட்டும் முன் எதுவும் நடந்து விடக் கூடாது! சீக்கிரம் ஓடு!
நான் போகிறேன்!
இதற்கிடையில் -
கூச்சலை நிறுத்துங்கள்! வேலையை நிறுத்தி விட்டதால் உங்களுக்கு என்ன லாபம்?
துப்பாக்கியை உள்ளே போடு டேடன்! இல்லையேல் விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல...!



பூச்சாண்டி காட்டுகிறாயா? வேலை பிடிக்கவில்லையென்றால் தாராளமாக முகாமை விட்டு வெளியே போகலாம்! ஆனால் வன்முறையை நான் அனு மதிக்க மாட்டேன்! உங்கள் சம்பளத்தைப் பொறுத்த வரை...
எங்களுடைய சம்பளம் என்னாச்சு?
இன்னும் கொஞ்ச நேரத்தில் சம்பளம் வந்து விடும்!
ரயில் இப்போது வந்து கொண்டிருக் கிறது! அதில் உங்களுடைய சம்பளப் பணம் இருக்கிறது!
அதை நிரூபித்துக் காட்டு!
வாயை மூடு!
இருட்டும் வரை ரகளை வேண்டாம்- இதை எல்லாருடைய காதிலும் போட்டு விடு!
?
ஆனால், நிலைமை கட்டுக் கடங்காமல் போய்க் கொண்டி ருந்தது... தொழிலாளர்கள் தங்கள் கோரிக் கையை வலி யுறுத்திக் கோபமாய் முன்னேறினர்...
வாக்குறுதியைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு!
பணத்தைக் கொடு!
திரும்பிப் போங்கள்!


டுமீல்
அப்பொழுது -
வாவ்! பெரிய ரகளை ஏற்படும் முன்பு சரியான நேரத்தில் நான் வந்து விட்டேன்!
டுமீல் டுமீல்
வழியை விட்டு நில்லுங்கள்! வழி விடுங்கள்!
உன்னோடு தொல்லையாப் போச்சு
உங்களுடைய சம்பளத்துடன் வந்திருக்கிறேன்!
அவன் சொல்வதைக் கேட்காதீர்கள்! இது நம்மை ஏமாற்றும் தந்திரம்...
ஆ!
என் வழியை விட்டு விலகிப் போங்கள்!
திரும்பிப் போங்கள்! உங்கள் பணம் எங்கேயும் போய் விடாது!
உங்களுக்குப் பணம் வேண்டு மென்றால் என்னை உள்ளே செல்ல அனுமதியுங்கள்!



அட ஆண்டவா! இது டெக்ஸ் அல்லவா!
அந்தப் பொய்யனை குதிரையிலிருந்து இழுத்துப் போடு!
அந்தப் பொய்யன்... உப்!
கும்!
என்னுடைய நண்பனை பொய்யன் என்று சொல்லாதே!
பொறுத்தது போதும்! அந்தத் தடிமாடை நொறுக்குங்கள்!
தடிமாடா? நானா?
ஆ!
கும்
இந்தா வாங்கிக் கொள்!
பேட் விட்ட ஒவ்வொரு குத்தும் இடி போல் இறங்கியது! பரபரப்படைந்த கும்பல் சண்டையில் இறங்கிட ஒரு பெரும் ரகளையே துவங்கியது...
ஆ! ஆ!
இது எப்படி இருக்கு?
உப்!
மடார்!


ஆ!
நான் போக வழி விடுங்கள்!
டுமீல் டுமீல்
சீக்கிரம் உள்ளே வாங்க!
மடையன்கள்! வெறி பிடித்த மடையன்கள்!
இந்தப் பார்சலை வெளியே விட்டு விட்டு உள்ளே வருவதா?
நிஜமாகவே சம்பளப் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா?
ஆமாம் - கை நிறையப் பணத்தை எடுத்து இந்த முட்டாள்களிடம் காட்டுங்கள்!
டுமீல்
சண்டையை நிறுத் துங்கள்! கொஞ்ச நேரம் அமைதியுடன் இருங்கள்!



பணத்திற்காகத் தான் சண்டை போடு கிறீர்கள் என்றால், சண்டையை நிறுத்தித் தொலையுங்கள்! ஏனெனில் பணம் இங்கேதான் இருக்கிறது!
???
இங்கே பாருங்கள்! எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய பணம் போதிய அளவில் இருக்கு!
இன்னும் சில நிமிடங்களில் பட்டுவாடா செய்யப்படும்!
ஆனால், கம்பெனிக்கு பிரச்சனையை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் யாரேனும் இருந்தால் முன்னே வரலாம்...!
...கணக்கை நான் தோட்டாக்களால் சரி செய்கிறேன்!
மிஸ்டர்.. அதெல்லாம் தேவை யில்லை! எங்களுக்குச் சேர வேண்டியதைத் தான் நாங்கள் கேட்கிறோம்!
அப்படியானால் வரிசையில் நில் லுங்கள். சம்பளம் போடுகிறேன்.
உள்ளே வாங்க! சம்பளம் போடும் போது என்ன நடந்தது என்பதை விபரமாய் சொல்லுங்கள்!



அந்தச் சமயத்தில்...
ஹேய் டெக்ஸ்! டெக்ஸ்!
டெக்ஸ்!
அட... அது நம்ம பேட்!
அவனை உங்களுக்குத் தெரியுமா?
ஏன் கேட்கிறீர்கள்! பெயர் பேட் ரையன்! மண்டையில் மூளையே கிடை யாது! ஆனால் இரும்பு மாதிரி உடம்பு!
வெல், வெல், டெக்ஸ் எப்படி இருக்கே?
எனக்கென்ன குறைச்சல் பேட்! நீ எப்படி இருக்கே?
பரவாயில்லை!
ஹ்ம்ம்ம்... இங்கு என்ன வேலை?
பெரிசா எதுவும் இல்லை. தினமும் கிடைக்கும் ஒரு சில டாலருக்காக ரயில் பாதை அமைக்கும் பணியில் இருக்கிறேன்.


சரி, இப்போதிலிருந்து ரயில் கம்பெனி நீ இல்லாமல் செயல்படும் - நீ எனக்காக வேலை செய்கிறாய்? ஓ.கே.?
ஓ... பிரமாதம்!
டெக்ஸும் பேட்டும் எஞ்சினியரின் அறைக்குள் நுழைந்தனர். டெக்ஸ் நடந்த சம்பவங்களைக் கூறினார்...
ஆண்டவனே! நான் உங்களுக்கு இரு முறை அல்லவா நன்றி சொல்லணும்! பணத்தைக் காப்பாற்றியதற்காக ஒரு முறையும், இந்த ஓநாய் கூட்டத்தை அமைதிப் படுத்தியதற்கு இரண்டாவது தடவையாகவும் நன்றி கூறுகிறேன் வில்லர்!
இதற்கிடையில்...
இப்ப என்ன? துப்பாக்கி சப்தத்தைக் கேட்டேனே...
அது எங்கள் வேலையல்ல... முகாமிற்கு புதிதாக ஒரு ஆசாமி வந்துள்ளான்!
யார் அது?
டெக்ஸ் வில்லர்!
நாசமாய் போச்சு - குறுக்கிட்டது அந்தப் பிசாசு தானா?
அவனே தான்! அவன் தான் சம்பளப் பணத்தையும் கொண்டு வந்தான். அப்படியானால் நமது நண்பர்கள் தோல்வி அடைந்து விட்டார்கள் என்று தானே...
வாயை மூடு!
SALOON


டெக்ஸ் வில்லர் இருக்கும் இடங்களில் சுவர்களுக்கு கூட காது முளைத்துவிடும்!
?
அந்த விஷப்பாம்பு முகாமில இருக் கிறான் - அப்படித்தானே? இனிமேல் நாம் ரொம்ப ஜாக்கிரதையாக செயல்பட வேண்டும்! தனியாக வந்துள்ளானு?
யா!
எதற்காக வீண் அலட்டல் - பரபரப்பு? அவனைப் பற்றி முன்னரே கேட்டிருக் கிறேன். ஆனுல் அவனைப் பார்த்தால் சாதாரண தீவட்டித் தடியன் போலத் . தான் எனக்குத் தெரியுது?
அப்படியா..? சுலபமாக அவனைத் தீர்த்துக் கட்டி விடலாம் என்று சொல்கிறாயாக்கும்?
ஆமாம்!
நீ என்ன நினைக் கிறாய் ரெட்?
நான் என்ன சொல்வது? ..ரிக் வேகமாக துப்பாக்கியைக் கையாள்வதில் கில்லாடிதான்!
அதை நிரூபிக்கும் வகையில்...
ஹேய்!
இங்கே பார்!


அந்த சைத்தானுக்கு இன்று இரவு சவ ஊர்வலம் நடத்துவார்கள் என்று 50 டாலர் பந்தயம் கட்டுவோமா?
ஹ்ம்ம்ம்... மனசு சபலப் படுகிறது?
நீ என்ன நினைக்கிறாய் ரெட்... அவ சொல்வதை செய்து விடுவானா?
யெஸ்!
ரைட்! அப்படியானால் அவன் காரியத்தை முடிக்கும் வரை பந்தயப் பணத்தை நீயே வைத்திரு... ஆனால் ஜாக்கிரதையாக இரு!
வேலையை முடித்து விட்டால், அப்படியே எங்காவது தலைமறைவாகி விடு; ஒருக்கால் இங்கு வில்லருக்கு யாராவது நண்பர்கள் இருந்தால் ஆபத்தாகி விடலாம்!
SALOON
ஓ.கே.! ரெட்டிடம் பணத்தைக் கொடுங்கள்!
ஜெப் கிளவர் 35 டாலர்!
அடுத்த ஆள்!
ஸ்டீவ் கிரே. எனக்கு 32 டாலர்கள் வர வேண்டியுள்ளது!
ஒரு மணி நேரம் சென்ற பின்..
சம்பளம் கொடுத்து பிரச்சனையை முடித்து விட்டேன்! அப்பாடி!
யா!


வில்லர், 'ஜிவ்வென்று' ஒரு கிளாஸ் ஊற்றட்டுமா?
அருமையான ஐடியா டேடன்!
உனக்கு பேட்?
நோ. தேங்க்ஸ்!
டுமீல் ஆ!
ரிக் ஆளைக் காலி செய்து விட்டான்!
ஆனால் ரிக் சுட்ட அதே நேரம், டேடனின் உதவியாளர் மதுவை எடுக்க எழுந்ததால், டெக்ஸை கொலைகாரத் தோட்டாவிலிருந்து கேடயமாகக் காப்பாற்றினார்...
டுமீல் டுமீல்
ஆ!
ஜன்னல் பக்கம் தான்!


கிழே படு டேடன்!
ஜோ!
டுமீல் டுமீல்
கோழை நாயே!
க்ராஷ்
மடேர்
நாம் இங்கிருந்து ஓடி விடுவோம்!
ரிக் தோற்று விட்டான்!


ஜாக்கிரதை டெக்ஸ்!
இவனைத் தவிர இங்கு வேறு ஒருவனையும் காணோமே!
எல்லாரும் ஓடிவிட்டனர். பேட், இங்கு வந்து இந்தப் பிணந்தின்னிக் கழுகைப் பாரேன்!
இதோ வருகிறேன்!
இங்கு ஏதோ துப்பாக்கி சப்தம் கேட்டதே!
அலட்டிக் கொள்ளா தீர்கள் நண்பர்களே!
என் நண்பன் டெக்ஸை யாரோ 'க்ளோஸ்' பண்ண முயன்றனர். ஆனால் அது நடக்க வில்லை!


அதன் பிறகு -
இவனைத் தெரியுமா?
பார்த்திருக்கிறேன்!
இவனது பெயர் ரிக் - பில் டோர்சேக்கு உதவ சில நண்பர்களுடன் இங்கு வந்தான்!
அது யார் - பில் டோர் சே?
முகாமிற்குள் நுழையும் போது பெரிய கூடாரம் ஒன்றை நீங்கள் பார்க்க வில்லையா?
அந்தக் கூடாரத்தில் ஒரு மதுக் கடையை டோர்சே நடத்துகிறான்!
சுவாரஸ்யமான விஷயம் தான்...!
மதுக் கடையில்...
பில் காட்டுக் கூச்சல் போடப் போகிறான்!


விஷயம் விவகாரமாகி விட்டது! ரிக்தான் நம் கும்பலிலேயே வேகமாக துப்பாக்கியை கையாள்பவன். அப்படி இருந்தும்...
உனக்கும் குளிர் ஜுரம் ஆரம்பித்து விட்டதா?
கிண்டலா?
அமைதியாய் இரு ரெட்! ஜிம் நீயும் வாயை மூடு!
என்ன ஆச்சு! போன காரியம் பூஜ்யம் தானே? இதை யூகிப்பதில் கஷ்டமில்லை!
நடந்ததை விபரமாக சொல்லவா?
நோ! நான் கொடுத்த பந்தயப் பணத்தை எனக்குத் திருப்பிக் கொடுத்தால் போதும் தம்பி!
நீ ரொம்ப கறாரான ஆசாமி பில்!
ரிக் இன்னும் நடுத் தெருவில் கிடக் கிறான்... அதற்குள்-
வாயை மூடு! தான் எடுத்துக் கொண்டது அபாயமான வேலை என்பது ரிக்கிற்குத் தெரியும்! எனவே அழவோ, கதறவோ தேவை இல்லை!
உன்னைப் பொறுத்தவரை, அமைதியாக இருக்க முடியா விட்டால் இங்கிருந்து ஓடிவிடு! வில்லர் உன்னை மோப்பம் பிடித்து வர ரொம்ப நேரம் ஆகாது !



அவனைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும் !
அவன் எக்கேடோ கெட்டு ஒழியட்டும்!
ரெட் சொல்வது சரிதான். எங்கள் மீது டெக்ஸ் வில்லர் சந்தேகப்பட வாய்ப்பில்லை..!
அது. உங்கள் பாடு! அட... இங்கே பாருங்கள்... அந்தச் சைத்தானைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது- அவனே ஆஜராகி விட்டான்!
ஹேய் இங்கே பாருங்கள்! யார் வந்திருக்கிறா ரென்று!
SALOON
நமக்கு சம்பளப் பணத்தை இவர் கொண்டு வந்ததால் தான் இன்று இரவு நமக்கு கவலைகள் ஓரளவு குறைந்துள்ளது!
எங்களுடன் வந்து உட்கார் மிஸ்டர்!
நன்றி, நண்பர்களே! செலவு முழுவதும் என்னது என்றால் உங்களோடு சேர்ந்து கொள்கிறேன்!
?
!
இங்கேயே இருங்கள்! என்னமும் செய்ய வேண்டாம்!
அவன் முகாமுக்கு வந்துள்ளது ஏதோ காரியமாகத்தான்! ஆனால் அவன் வந்த நோக்கமே இங்கு நிறை வேறாமல் போகலாம் - அதாவது உங்கள் இருவருக்கும் தலா 200 டாலர் சம்பாதிக்கும் ஆசையிருந்தால்!
நாங்கள் தயார்!


அப்படியானால் சரி! ஆனால் இந்தத் தடவையாவது மூளையைப் பயன் படுத்துங்கள்!
?!
கமான்!
ஹுர்ரே!
இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்... என்னை அடையாளம் கண்டு கொள் கிறானா எனப் பார்ப்போம்..!
'மடமட'வென்று ஊற்றிக் கொடு பில்! எல்லாரும் தாகத்தால் செத்துக் கொண்டிருக்கிறோம்!
ஆமாம்!
பொறுங்கள். முதலில் உங்களிடம் இருக்கும் பணத்தை நான் பார்க்க வேண்டும்!
அதற்கு அவசிய மில்லை. நான் பணம் தருகிறேன்!
ரொம்ப சந்தோஷம்! ஆனால் இதற்கு முன்பு உன்னைப் பார்த்திருப்பதாக ஞாபகம் இல்லை. எனவே முதலில் நீ பணத்தை எடு!


பேட், 'தொளா தொளா' சட்டை அணிந்திருக்கும் இந்த ஆசாமி தானே பில் டோர்சே?
யார்!
அதற்கு என்னவாம்?
ஒன்றுமில்லை.. உன்னுடைய முகத்தை இதற்கு முன் எங்கேயோ பார்த்திருப்பதாக ஞாபகம்! கன்சாஸ் நகரில் எப்போதாவது இருந்தாயா?
ஒருபோதும் இல்லை!
இப்ப உன்னுடைய சம்பளப் பணத்தைக் காட்டு!
ஒரு வினாடி பொறு!
இப்ப எனக்கு ஞாபகம் வருகிறது!
பணத்தை எடுத்து வை கிழவா!
காலிவன்! அபிலினில் வங்கியில் கொள்ளை யடித்தவன் தானே?
கண்டு பிடித்து விட்டானே சைத்தான்!
அதே கணத்தில் டோர்சேயின் ஆட்களே போலியானதொரு சண்டையைத் துவக்கினார்கள். அமளியின் போது டெக்ஸை "தவறுதலாக" சுட்டுவிட்டதாக கூற வாய்ப்புக் கிடைக்கும் என எண்ணினர்...


இதற்கு நீ பதில் சொல்லியே ஆகணும்!
துப்பாக்கியை எடுக்காதே!
டுமீல் டுமீல்
ஜாக்கிரதை!
SALOON
ரகளை ஆரம்பித்து விட்டது நண்பர்களே!
நாமும் போவோம்!
ஹேய், பார்த்துப் போடா!
வெல், என்னை மன்னித்துவிடு நண்பா!
உப்!
கும்
ஜாக்கிரதை பேட்!
சண்டை போடும் எல்லோருமே டோர்சேயின் ஆட்கள்தான்!
பொறு! வில்லர் பார் அருகில் அந்த தடி முட்டாளுக்கு அடுத்தபடியாக நிற்கிறான்... உன்னுடைய கையை நான் விடுவித்த உடனே திரும்பி அவனைச் சுட்டுவிடு!



திட்டமிட்டபடி, கட்டிப் புரண்டு சண்டை போடுவதாக பாவலா செய்து கொண்டே பார் நோக்கி வந்த போது அவர்களைச் சுற்றிலும் மோதல் நடந்து கொண்டிருந்தது...
...வாய்ப்புக் கிடைத்தபோது ரெட் உருண்டு போய் குறி பார்க்காமல் சுட்டான்...
டூமீல்!
முட்டாள்!
இதற்காகத்தான் நான் காத்திருந்தேன்!
ஆ!
துப்பாக்கியைக் கீழே போடுங்கள்! இல்லையேல் உங்களுடைய நாடகம் சோகத்தில் முடிந்துவிடும்!
இனி நாம் வேலையைக் காட்டுவோம் ஜிம்!
ரெட் சொதப்பி விட்டான்!
டுமீல்
டுமீல்



க்ராஷ்
டுமீல் டுமீல்
ஐயோ!
மீசை வைச்ச குரங்கே!
காப்பாற்றுங்கள்!
சட்டப்படி நடக்கும் வாடிக்கை யாளரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என பாடம் கற்பிக்கிறேன் பார்!
பேட், டோர்சேயை அலாக்காக தூக்கி வானில் வீசினான். அவன் விழுந்த டேபிளின் பின்னால் தான் மற்றொரு துப்பாக்கி ஆசாமி ஒளிந்திருந்தான்...!
க்ராஷ்!
ஐயோ!
டுமீல்!
க்ராஷ்


பேட் நாம் கிளம்பு வோம்! பார்ட்டி முடிந்து விட்டது!
என்னைப் பொறுத்த வரை இனிமேல் தான் ஆரம்பிக்கவே போகிறது! என் மண்டையை உடைத்த டோர்சே பன்றி அதற்காக இன்னும் அனுபவிக்க வேண்டும்!
பேட், என்ன செய்யப் போகிறாய்?
இந்தக் கூடாரத்தை தரை மட்டமாக்கப் போகிறேன்!
மைய ஊன்று கோலைத் தன் பலம் கொண்ட மட்டிற்கு அசைத்தான் பேட்!
பேட்டை முட்டாளாக்க நினைத்தால் என்ன நடக்கும் எனக் காட்டப் போகிறேன்!
க்ராஷ்



கூடாரம் சாய்கிறது!
எல்லோரும் வெளியே ஓடுங்கள்!
என்ன காரியம் செய்தாய் பேட்! கூடாரத்தில் தீப் பற்றினால் எல்லோரும் உயிருடன் ரோஸ்ட் ஆகிவிடுவார்கள்!
டெக்ஸ், நீ இங்கிருந்து வெளியேறி விடு! இந்தச் சனியன்களைப் பத்திரமாக வெளியே கொண்டு வர வழி பார்க்கிறேன்!
SALOON
தன்னந்தனியாக அதைச் செய்ய இப்போது நேரமில்லை பேட்! கூடாரத்தில் ஏற்கனவே தீப்பிடித்து விட்டது!
சீக்கிரம் பேட்! இன்னும் சில நிமிடத்தில் இந்த இடமே நரகமாகிவிடும்!
வாசலில் எனக்காக காத்திரு!
முட்டாள்தனமாக எதையாவது செய்து வைக்காதே பேட்! நீ செத்துப் போவாய்!


பதில் சொல் வதற்குப் பதில் பேட் செயலில் இறங்கினான் -
பேட்டின் ஸ்டைலே தனிதான்!
கூடாரத்தில் இருந்த அனைவரையும் வெளியேற்றிய சில விநாடிகளில் பேட் வெளியே வந்தான்! அவன் முகத்தில் சிரிப்பு ரேகைகள்..
தூள்!
எப்படி?
இவர்கள் அத்தனை பேருக்கும் வைத்தியம் பார்க்கப் போகும் டாக்டரின் முகத்தை நினைத்துப் பார் - இன்னும் வேடிக்கையாக இருக்கும்!
மனுஷன் அதற்குத் தானே ஃபீஸ் வாங்கு கிறான்!
அதை விட்டுத் தள்ளு. முதலில் இந்த ஆட்களை இங்கிருந்து அகற்ற வேண்டும்... ..வெப்பம் அதிகரித்துக் கொண்டே உள்ளது. இவர்களை அகற்றா விட்டால் கருகிச் செத்துப் போவார்கள்!


கீழே சாய்க்கப்பட்ட கூடாரத்தில் பற்றிய தீ முகாம் முழுவதும் பரவக்கூடிய அபாயத்தை ஏற்படுத்தியது..
இங்குள்ள மரவீடுகளிலும் தீப் பிடிக்கும் முன் விரைந்து செயல்படுங்கள்!
சீக்கிரம்! ஹ்ம்ம் சீக்கிரம்!
இந்தக் கயிறுகளைத் துண்டியுங்கள் - இதனால் கூடாரம் முழுசுமாய் சாய்ந்து விடும்!
அதிர்ஷ்டவசமாக காற்று அதிகம் இல்லாததால் முகாமை நோக்கித் தீ பரவவில்லை...
இப்போது பிரச்சனை இல்லை! தானுக எரிந்து சாம்பலாகட்டும்!
இங்கு என்னதான் நடந்தது?
அதை அப்புறம் சொல்கிறேன் டேடன் - இப்போது வேறு ஒரு வேலை பாக்கியுள்ளது!
அதென்னப்பா வேலை?
என்னுடன் வந்து நீயும் பார்!




அவர்கள் நேராக நோயாளிகள் இருந்த கட்டிடத்திற்கு வந்தனர். அங்கே தோளில் கட்டுடன் டோர்சே இருந்தான்...
உன்னைப் பழி வாங்காமல் விட மாட்டேன் வில்லர்!
வாயை மூடு திருட்டு ராஸ்கல்!
உன் வெற்றுச் சவடாலைக் கேட்க நான் இங்கு வர வில்லை! உனக்கு கொஞ்சம் அறிவுரை சொல்லவே வந்துள்ளேன்!
மரியாதையாக நீயும் உன் ஆட்களும் வண்டியில் ஏறி இங்கிருந்து போய் விடுங்கள்!
ஒரு நிமிடம்..
சொல்ல வந்ததை சொல்லி முடித்து விடுகிறேன்! நாளை சூரியன் உதிக்கும் போது நீயும் உனது ஆட்களும் இந்தப் பகுதியில் இருப்பதை நான் கண்டால், பூமியில் 6 அடி ஆழத்தில் நிரந்தரமாக ஓய்வெடுக்கச் செய்து விடுவேன்!
நான் சொல்வது புரிகிறதா?
புரிகிறது வில்லர்..
...ஆனால் இது இத்துடன் முடிந்து விட்டது எனக் கனவு காணாதே! நாம் மீண்டும் சந்திப்போம்!
அப்படி சந்தித்தோமானால் அதுவே உன் கடைசி நாளாக இருக்கும் என்பதை மறந்து விடாதே!



கட்டிடத்திற்கு வெளியே...
நான் போய் டேடனுடன் பேசிவிட்டுத் திரும்பும் வரை இவர்கள் மீது ஒரு கண் இருக்கட்டும்!
ஓ.கே.!
நடந்த எல்லாவற்றையும் டெக்ஸ் டேடனிடம் சொல்லி முடித்த பின்பு...
இன்னும் ஒரு விஷயம்...
சொல்லுங்கள் கேட்போம்!
இந்த முகாமில் ஒழுங்கை நிலை நாட்டும் வேலையை நான் ஏற்றுக் கொண்டால், சரிப்படுமா?
நல்ல யோசனை என்றே சொல்வேன்..!
ஆனால் அது அவ்வளவு எளிதான வேலையல்ல... அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை நீங்களே பார்த்து விட்டீர்கள்! கடினமான சூழ்நிலையில் வேலை செய்யும் இவர்கள் அடிக்கடி பிரச்சனைகளை உண்டாக்குவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை!
என்னால் சமாளிக்க முடியும் என நினைக் கிறேன் டேடன்!
இன்று உங்களுடைய செயல் வேகத்தைக் கண்ட பிறகு நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!
சம்பளம் அவ்வளவு அதிகமாக இருக்காது...
அது பற்றி எனக்கு கவலை இல்லை!


மேலிடத்து உத்தரவின்படி இங்கு வந்திருக்கிறேன்! மூன்றுவேளை உணவும் படுக்கையும் கொடுத்தால் போதும் - சமாளித்து விடுவேன்!
அப்படியானால் உங்களைப் பணியில் அமர்த்தி விட்டேன் வில்லர்! கொண்டாடுவோம்!
ஓ.கே.!
மறுநாள் சேதம் அடைந்த ரயில் பாதையை சீரமைக்கும் வேலையில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்...
அதே நேரம் சாண்டா ரோசாவில் உள்ள மெசா ஓட்டலில் இருவர் சந்தித்தனர்...
அவன் யார் என்பதை நீ பார்க்க வில்லையா?
நோ. அவன் ரொம்ப தூரத்தில் இருந்தான்.
அவன் துப்பாக்கியை கையாண்ட விதத்தைப் பார்த்த போது, அவனுடைய சகவாசமே சரிப்படாது என்ற எண்ணம் தான் வந்தது!
சரியான கோழைப் பயல்!
அந்த ரயிலில் 5 ஆயிரம் டாலர்கள் இருந்தது. அது நம்முடைய பாக்கெட்டுக்கு வந்திருக்க வேண்டும்! அந்த அந்நியனின் தலையீட்டால் பணம் போச்சு!


ஜெப், நாம் இழந்தது பணத்தைத்தான்! ஆனால் மற்றவர்கள் உயிரையே இழந்துள்ளனர் என்பதை மறக்க வேண்டாம்!
உப்!
உன்னை யாரும் பின் தொடரவில்லை என்பது உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?
நூறு சதவீதம் நிச்சயமாகத் தெரியும்! அதைச் சோதிப்பதற்கென்றே வழியில் மூன்று இடங்களில் நின்றேன். என்னை யாரும் பின் தொடரவில்லை!
குட்! அந்த ஆசாமி யார் என்பதை இனி கண்டு பிடிக்க வேண்டும்!
எனக்கும் அது தெரிய வேண்டும்!
பில்டோர்சேயிடம் கேட்டால் தெரிந்து விடும்! முகாமைச் சுற்றி நடக்கும் எல்லா விவகாரங்களும் அவனுக்கு அத்துப்படி! நீ சொல்லும் ஆளும் அங்குதான் போயிருப்பான் என்பது நிச்சயம்!
முகாமை நோக்கி அவர்கள் புறப் பட்டனர். ஆனால் மூன்று மணி நேரப் பயணத்திற்குப் பின்...
பில்! உனக்கு என்ன ஆச்சு?
உன்னைப் பார்ப்ப தற்கல்லவா நாங்கள் வந்து கொண்டிருக் கிறோம்!
என்ன நடந்தது என்று கேட்கிறீர்கள்? பெரிதாக ஒன்றுமில்லை! என் தோள்பட்டை எலும்பு முறிந்துள்ளது... என்னுடைய கூடாரமும் அதில் இருந்த சரக்குகளும் எரிந்து சாம்பலாகி விட்டது! வேறு ஒன்றுமில்லை!


வண்டியின் உள்ளே படுகாயமடைந்திருக்கும் என்னுடைய ஆட்களைப் பார்த்தால், நான் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டக்காரன் என்பது புரியும்!
நாசமாய் போச்சு! உனக்கு என்ன நடந்தது என்பதைச் சொல்?
சொல்கிறேன் ஜெப்...
நான் ஒரேயொரு பெயரைச் சொன்னாலே போதும் - என்ன நடந்திருக்கும் என்பது உனக்குப் புரிந்து விடும்! டெக்ஸ் வில்லர்!
வில்லர்!?
அந்தப் பாம்பு அங்குதான் இருக்கிறதா? ரயிலில் என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள இனி சிரமமில்லை!
யெஸ்!
நான் சொல்வதைக் கேள் ஜெப். அந்த முகாம் விவகாரத்தில் நாம் தலையிட வேண்டாம்! அரை நிமிடத்தில் என்னை அவன் அடையாளம் கண்டு கொண்டான். அவன் உன்னைப் பார்த்து விட்டால்...
பார்த்து விட்டால்...
அவன் எவ்வளவு பெரிய பிஸ்தாவாக இருந்தாலும் அது பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் அவனுடைய கணக்கை தீர்க்கும் முன்பு, அவன் என்னை நேரில் பார்க்க முடியாது!
சொல்வதை சொல்லி விட்டேன்! அப்புறம் உன்பாடு!


என்னைப் பொறுத்தவரை இந்த விவகாரத்தில் என் பங்கு முடிந்து விட்டது! துப்பாக்கியைக் கையாளுவதில் முன்பே மின்னலாக இருப்பான்! இப்போதோ அதைவிட வேகமாக இருக்கிறான்!
என்ன நடந்தது என்பதை மோர்டைமரிடம் சொல்லிவிடு! நான் சான்டா ரோசா போய் என்னுடைய ஆட்களைப் பத்திரமான இடத்தில் விட்டு விட்டு அபிலினிக்குச் செல்லப் போகிறேன்.
அங்கிருந்து எங்கும் நகரப் போவதில்லை! குட்பை... அண்ட் குட் லக் ஜெப்!
அம்மாடி....!
பேயறைந்தவன் போலிருக்கிறான்!
வில்லர் அவனை கசக்கிப் பிழிந்திருக்கிறான்! ஆனால் நான் சொல்வதை நம்பு. அது போன்ற நெருக்கடி நமக்கு வராது!
அவனை சுட்டுக் கொன்றுவிட முடியும் என நினைக்கிறீர்களா?
நோ. துப்பாக்கியை எடுக்கக் கூடாது. அவனுக்கு எதிராக மூளையைப் பயன் படுத்த வேண்டும்!
அவனைத் துப்பாக்கியால் வெல்ல முடியாது. அதைவிட சிறந்த ஆயுதம் எனக்கு வேண்டும் - அது அவனை நரகத்திற்கு அனுப்பி விடும்!


இரண்டு நாள் சென்ற பின்...
அதோ நிற்கிறான் வில்லர்! அந்தப் பிசாசு தொழிலாளர்கள் வேலை செய்வதைப் பார்க்க வந்துள்ளது! வா தம்பி வா... நரகத்திற்கான வழியைக் காட்டுகிறேன்!
ஹலோ டெக்ஸ்! வழக்கமான கண்காணிப்பு ரவுண்டா?
யெஸ். யாரோ புது ஆள் இந்தப் பகுதியில் நடமாடுகிறான் - நேற்று அவனது தடத்தைக் கண்டேன்...
டுமீல் டுமீல் டுமீல்
நிறையத் தோட்டாக்களுடன் அந்த மலைமேல் பதுங்கியிருக்கிறான் டெக்ஸ்!
இப்பகுதியில் சுற்றித் திரியும் அதே ஆசாமியாகத் தான் இருக்க வேண்டும்!


நானும் உன் கூட வருகிறேன் டெக்ஸ்!
நோ! நீ இங்குள்ள ஆட்களுடன் இருந்து, தாக்குதல் தொடர்ந்தால் சண்டையிட ஆட்களைத் தயார் செய்!
அவர் சொன்னதை கேட்டீர்கள் அல்லவா - துப்பாக்கிகள் ரயிலில் உள்ளது...
நான் சண்டையிட மாட்டேன்!
நாங்கள் இங்கு வேலை செய்யத் தான் வந்திருக் கிறோம். எங்களுடைய உயிருக்கு அபாயம் ஏற்படுவதை விரும்பவில்லை!
சொறி நாயே!
உன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடப் பயப்படுகிறாய். உன்னை எச்சரிக்கிறேன்...
...அடுத்த முறை ஆளுக்கு முந்தி நீ பேசினால், உன் தோலை உரித்துத் தொங்க விட்டு விடுவேன்! அப்புறம் உன்னைப் பெற்ற அம்மாவாலேயே உன்னை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது!


இதற்கிடையில்...
அருமையான வாய்ப்பு! வசமாக வலையில் விழப் போகிறான்!
டெக்ஸ் வந்த திசையை நோக்கி மேலும் சில தோட்டாக்களை வீணாக்கினான் அவன்..
டுமீல் டுமீல்
அதன் பிறகு மலைச் சரிவில் வேகமாக இறங்கி குதிரையில் தாவி ஏறினான்.
நாம் போவோம்!
நண்பா, நீ புயலென சீறிப்பாய்ந்து ஓடணும்! இப்பீ!
அதோ போகிறான்! தலை தெறிக்கும் வேகத்தில் ஓடுகிறானே..! ஆனால் இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது! அதனால் அந்த மலை முகட்டை நெருங்கிச் செல்வது விவேகமல்ல...!


என்னை மடக்க ஏற்பாடு செய்திருப்பான் என்பது நிச்சயம்!
அவனுடைய துப்பாக்கி எல்லையைத் தாண்டி நான் இருப்பதை அறிந்தும் தோட்டாக்களை வீண டித்தான்! அவனை விரட்டிநான் வரவேண்டு மென்பதற்கான யுக்தி அது!
எனக்கும் அவனுக்கும் இடையே உள்ள தூரத்தை அப்படியே வைத்துக் கொண்டு வருகிரு ன்! பயல் திறமைசாலிதான்!
மலை மேலே வேறு சிலர் இருக்கலாம் - அவர்கள் திடீர் தாக்குதல் நடத்தலாம் என்றும் நினைக்கிறேன்!
ஆனல் எதிர்பார்க்காத நேரத்தில் என் பொறியில் ப்யல் சிக்கப் போகிறான்!
குதிரையை டுலா ஆற்றை நோக்கியல்லவா விரட்டுகிறான்.. ஹம்ம்ம்!


என்னை நோக்கி இரண்டொரு தடவை வேடிக்கையாக சுட்டுவிட்டு பயந்து ஓடும் குழந்தையாக அவன் இருக்க வேண்டும் அல்லது நூதன மான பொறியில் என்னை மாட்டி வைக்க திட்டமிட்டிருக்க வேண்டும்!
எப்படி இருந்தாலும் சரி! அவனைத் தப்ப விட மாட்டேன்!
டெக்ஸ் தன் குதிரையை முடுக்கி விட்டார்! தப்பி ஓடும் ஆசாமியை தன்னுடைய தோட்டா பதம் பார்க்கும் எல்லையை அடைந்த உடன்...
டுமீல் டுமீல்
அடச்சே! அருகில் வந்து விட்டானே!
ம்ம்ம்... இன்னும் கொஞ்ச நேரம்தான்!
டுமீல் டுமீல்


கொஞ்சம் அசந்தால் அம்பேல்!
குதிரையின் வேகத்தை அதிகரிக்க ஜெப் மூர்க்கத்தனமாய் அதை அடித்து விரட்டினான்...
ஹி - ஹி
போ, சனியனே சீக்கிரம் போ
டுலா ஆற்றைக் கடக்கும் அந்தப் பாலத்தில்...
அதோ வந்து கொண்டிருக்கிறான் ஜெப்! வில்லரும் அவனை நெருங்கி விட்டானே!
இருவருக்குமிடையே 400 அடிக்கு குறைவான தூரமே இருக்கும்! இப்போது திரியைப் பற்ற வைக்க வேண்டியதுதான்!
திரி இவ்வளவு நீளமிருந்தால் போதும்! குட் பை வில்லர்!
பாலம் வந்து விட்டது! தொடர்ந்து போ!


இதோ வெடி குண்டு திரிக்கு நெருப்பு வைத்து விட்டேன்!
வெடி குண்டுத்திரிக்கு தீ பற்ற வைத்த பின் பாலத்திலிருந்து விலகிச் செல்ல கரை புரண்டு ஓடும் ஆற்றில் அதன் போக்கில் அவனும் சென்றான்...
நரகத்தில் உன்னைச் சந்திக்கிறேன் வில்லர்!
டுமீல்!


இன்னும் சில அடி தூரம் தான்! அப்புறம் நீ இளைப்பாறலாம்!
பயலை நெருங்கி விட்டேன்!
?
அந்த நிமிடத்தில் டெக்ஸின் கழுகுக் கண்களில் பாலத்தின் அடியில் வைக்கப் பட்டிருந்த வெடி குண்டின் திரியி லிருந்து எழுந்த புகை தென்பட்டது! நொடிப் பொழுதில் புதியதொரு முடிவை எடுத்தார்...!
குதிரையை நிறுத் தினால் வெடியின் உக்கிரம் என்னைப் பலிகொண்டு விடும்!
குதிரையுடன் ஆற்றுக்குள் பாய்வதுதான் நல்லது!
தொபுக்!
டமாாால்!


ஹி..ஹி..
சரியான நேரத்தில் குதித்து விட்டேன்! ஒரு வினாடி தாமதித்திருந்தால் என் கதை முடிந்திருக்கும்!
அதே நேரம் ஜெப்..
சே! பயனில்லாமல் போச்சே! அவன் தப்பி விட்டானே!
இதில் நான் தோற்று இருக்கலாம் - ஆனால் இன்னமும் அவன் கணக்கை முடிக்க வாய்ப்புள்ளது..!
...அதாவது அவன் ஆற்று நீரில் மூழ்கி யிருக்காத பட்சத்தில்! நோ! அதோ இருக்கிறான் அவன்!
டுமீல் டுமீல்


வாவ்! அந்த ஆசாமி என்னைப் பரலோகத்திற்கு அனுப்புவதில் முனைப்பாக இருக்கிறான்!
மீண்டும் தண்ணீருக்கு அடியில் போக வேண்டியதுதான்
ஆளைக் காணோம்! செத்துத் தொலைந்திருப்பான் என்று நினைக்கிறேன்!
மிஸ்டர் மோர்டைமருக்கு விஷயம் தெரிந்தால் சந்தோஷப்படுவார்!
சான்டா பீ நகரத்தை நோக்கிப் புறப்பட்டான்!
சற்றைக்கெல்லாம்
குட் நியூஸ் பாஸ்! அந்த சனியன் டெக்ஸ் வில்லர் செத்து விட்டான்!
நல்ல வேலை செய்தாய்!
இந்தா 1000 டாலர்! இதை எடுத்துக் கொண்டு கொஞ்ச காலம் தலை மறைவாகி விடு! அந்த ரேஞ்சரின் நண்பர்கள் யாராவது வந்தால் உன்னை சும்மா விட மாட்டார்கள்!


வெறும் 1000 டாலர் தானா? நான் செய்துள்ள வேலைக்கு பத்தாயிர மாவது தருவீர்களென்று நினைத்தேன்?
என்ன உளறுகிறாய்?
நான் செய்துள்ள காரியத்தால் உங்கள் ஓவர்லாண்டு இரயில்வே கம்பெனிக்கு எத்தனை லாபம் என்று எனக்குத் தெரியும்! அந்த ரேஞ்சரின் குறுக்கீடு இல்லாமல் இனி சதர்ன் ரயில்வே நிறுவனத்தை நீங்கள் சுலபமாக நசுக்கி விடலாம்! நான் கேட்ட பணத்தை தந்து விட்டால் யாருக்கும் பிரச்சனையில்லை!
சரி...சரி... என்னிடம் இப்போது அவ்வளவு பணமில்லை! நாளை காலை வா- பணத்தைத் தருகிறேன்!
இவனை விட்டு வைத்தால் ஆபத்து!
இருள் போர்வை யில் - ஒற்றைத் தோட்டா ஜெப்பின் உயிரைப் பறித்தது!
ஒழிந்தது பீடை!
சதர்ன் முகாமில் அந்த வில்லரின் தொல்லை கிடையாது. செவ்விந்தியக் கும்பலை மீண்டும் உசுப்பி விட்டால் முகாமை தரைமட்டமாக்கி விடலாம்! சதர்ன் கம்பெனியின் சகாப்தம் அத்தோடு முடிந்து விடும்!
ரோபுல்ஸ்!


கூப்பிட்டீர்களா பாஸ்?
ஆமாம்... இந்தப் பையில் உள்ள பணத்தை மெஸ்கலரோ செவ் விந்தியத் தலைவனிடம் கொண்டு போய் கொடுத்து வா!
ஹெ! ஹெ! பணத்தை வாங்கிக் கொண்டவுடன் இவனையும் தீர்த்துக் கட்டி விடும்படி எல் குர்வோவுக்கு எழுதியிருக்கிறேன்! அந்த சைத்தான் ஜெப் கோல்டரைப் போல இவனும் ஏதாவது பிரச்சனை பண்ணக் கூடும்!
சற்றைக்கெல்லாம் எல் குர்வோவின் முகாமிற்குச் சென்றான் ரோபுல்ஸ்!
இந்தப் பணப் பையையும், அதனுள் இருக்கும் கடிதத்தையும் மிஸ்டர் மோர் டைமர் உங்களிடம் கொடுக்கச் சொன்னார்.
எல்குர்வோ:
வெள்ளையர் முகாமில் நிறைய துப்பாக்கிகளும் உசந்த சாராயமும் உள்ளது இன்றிரவு தாக்கினால் வெற்றி நிச்சயம்! இதிலுள்ள பணத்தை எடுத்துக் கொள்! இதைக் கொண்டு வருபவனைத் தீர்த்துக் கட்டி விடு!
M
சரி, நீ போகலாம்!
அவனை விரட்டிச் சென்று தீர்த்துக் கட்டுங்கள்!


அதைத் தொடர்ந்து-
ஐயையோ... என்னைக் கொல்ல வருகிறார்கள்!
இன்னும் கொஞ்ச தூரம் தான்!
யாராஹீ
டுமீல் டுமீல்
யாராஹீ
டுமீல் டுமீல்
ஆனால் -
ஆ!
அவன் விழுந்து விட்டான்!
தொப்
பாய்ந்து ஓடும் ஆற்று நீர் பிணத்தைக் கொண்டு போயிருக்கும்.
யா!


நீ பின்டார்டோ கணவாய் போய் நாஸ்கோவின் வீரர்களை அழைத்துக் கொண்டு வா!
யா!
நீ போய் பாப்லி டோவையும் அவனு டைய வீரர்களையும் தயாராகச் சொல்!
அவர்களை நான் எங்கு கூட்டி வர வேண்டும்!
சூரியன் மறையும் நேரம் அவர்கள் எல் லாரும் கருப்புப்பாறை பள்ளத்தாக்கில் இருக்க வேண்டும். பொழுது விடிந்ததும் இரும்புப்பாதை போடும் அந்த வெள்ளை நாய்களுக்கு எதிராகப் போரிட நானே தலைமை தாங்குவேன்!
இதற்கிடையே - ஜெப்பின் மரண வலையிலிருந்து தப்பியிருந்த டெக்ஸ் ஆற்றில் சிறிது தூரம் தள்ளி கரையேறியிருந்தார்.
சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு தன் குதிரையைத் தேடிக் கிளம்பினர்
முகாமை சென்றடைந்த போது இரவாகி யிருந்தது!
சாவோடு கண்ணாமூச்சி ஆடியதைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது! காலையில் சான்டா ரோஸா ஷெரிப்பை முதலில் பார்க்க வேண்டும்!


மறுநாள் காலை
குளோரிட்டாவில் கோச் வண்டியைத் தவறவிட்டது முட்டாள்தனம்!
ஆமாம் - நண் பகலில் ஒரு வண்டி இருந்தது!
போகட்டும் - விட்டுத்தள்ளு! நேரத்தை வீணாக்காமல் முகாமுக்குத் திரும்ப வேண்டும்!
அப்படி என்னப்பா அவசரம்?
ஏனெனில் இந்த விவகாரத்தில் எதிரிகள் எவ்வளவு வேகமாகச் செயல்படக் கூடியவர்கள் என்பதைப் பார்த்து விட்டோம்! புதிதாக ஏதாவது சதி வேலையை இப்போது ஆரம்பித்திருப்பார்கள் என நான் நம்புகிறேன்!
அதுவும் சரிதான்
ஆற்றுப் பகுதியை நெருங்கிய போது கரையோரத்தில் கிடந்த மனித உருவத்தை பேட் தான் முதலில் கவனித்தான்.
டெக்ஸ்! அதோ பார்!
?



தண்ணீரில் மூழ்கியவன் கரையில் ஒதுங்கிக் கிடப்பது போலத் தெரிகிறது!
பாவம்!
நெருங்கிச் சென்றனர்...
செத்து விட்டானா?
நோ! இவனை வெளியே இழுக்க ஒரு கைபிடி!
சிறிது நேரத்தில்...
இதைக் கொஞ்சம் குடி.... தெம்பாக இருக்கும்!
ஆ!
ஒன்றுமில்லை நண்பா! பிழைத்து விட்டாய்!
தேங்க் யூ மிஸ்டர்...
உனக்குப் பயங்கர அதிர்ஷ்டம்! துப்பாக்கிக் குண்டு உன்னுடைய பெல்ட் மீது பாய்ந்துள்ளது....


...உன் பெல்ட்டில் இருக்கும் தோட் டாக்கள் மீது பட்டு வெடித்திருப்பதால் உனக்கு லேசான காயமே ஏற் பட்டுள்ளது!
அதிர்ஷ்டக் காற்று உன் பக்கமே வீசுகிறது!
ஆமாம் மிஸ்டர் - நான் அதிர்ஷ்டக் காரன்தான்· ஆனால் என் அதிர்ஷ்டம் தான் இன்னொருவனின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமையப் போகிறது!
உன்னைத் துப்பாக்கி யால் சுட்டவனைச் சொல்கிறாயா?
நோ. என்னை விரட்டி வந்த பத்து செவ்விந்தியர்களில் ஒருவன் என்னைச் சுட்டான்...
செவ்விந்தியனா?
யெஸ், எல்குர்வோ கூட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் தான்!
ஹம்ம்ம்!
ரோபுல்ஸ் தன் கதையைச் சொன்னான். கரை புரண்டோடிய கோபத்தில் அத்தனை விஷயத்தையும் சொல்லி விட்டான்! டெக்ஸ் வில்லர் யாரென்பதே அவனுக்குத் தெரியாது..!
...அந்தத் துரோகி என் முதலாளி மோர் டைமர் எல்குர்வோவிடம் என்னைக் கொல்லும்படி சொல்லியுள்ளான்!



சுவாரஸ்யமான கதைதான்! உண்மையைச் சொல்வதானால் உன்னிடம் இந்த மோசடியை நடத்திய மோர்டைமருக்கு நான் நன்றி சொல்வேன்!
என்ன செய்கிறீர்கள்?
அதற்குப் பின்னர் பதில் சொல்கிறேன். ஜெப் கோல்டரை உனக்குத் தெரியுமா?
யெஸ்!
அவன் மோர் டைமருக்காக வேலை செய்தான். ஆனால் இப்போது...
...செத்து விட்டான்! ஒன்றுக் கொன்று பொருத்தமாக இல்லை?
அதை யார் செய்திருப்பார்கள் என்று யூகிப்பது பெரிய சிரமமல்ல..!
?
...அதன் பிறகு மோர்டைமருக்காக நீ ஒரு முக்கியமான வேலை செய்தாய் - பரிசாக மரணம் தேடி வருகிறது!
நீங்கள் யார்?
என் பெயர் டெக்ஸ் வில்லர்! இதுதான் எனது பேட்ஜ்!
ரேஞ்ஜர்! மை காட்!



சத்தியமாகச் சொல் கிறேன்- நா - நான் நிரபராதி!
பொறு பையா! உனக்கு ஒன்றும் ஆகாது!
மோர்டைமருக்கும் செவ்விந்தியப் புரட்சித் தலைவனுக்குமிடையே நீ தூது போனது தெரிந்து விட்டது! ஆனால் அந்த விஷயத்தை முழுவதுமாக மறக்க நான் தயாராக இருக்கிறேன்...
ஆனால் ஒரே யொரு நிபந்தனை!
சொல்லுங்கள் சார்! நான் உங்கள் அடிமை!
இதற்கிடையில் செவ்விந்தியர்கள் ரயில்வே முகாம் மீது தாக்குதல் நடத்த திரண்டு கொண்டிருந்தனர்...
வெள்ளை நாய்களின் முகாமில் ஏராளமான சோம பானம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்!
யா!
சாராயம்... பணம்.. துப்பாக்கிகள்.. அந்த முகாம் முழுவதுமே பொக்கிஷம் நிறைந்திருக்கு! இனி எல்லாம் நமக்கே!
யா!


இன்று இரவு நாம் தாக்குதலைத் தொடங்கலாமா...?
நோ!
முதலில் திட்டமிடுவோம்! முகாம் வரை இருளின் போர்வையில் மறைந்து செல்வோம். பொழுது விடியும் நேரத்தில் அந்த வெள்ளை நாய்கள் அயர்ந்து தூங்கும்போது தாக்குதல் நடத்துவோம்!
மாலை மயங்கி இருள் படியத் தொடங்கிய போது நூற்றுக் கணக்கான செவ்விந்தியர்கள் அந்தப் பள்ளத்தாக்கில் கூடியிருந்தனர். மறுநாள் காலை அரங்கேற விருந்த இரத்தப் பலிக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்...
அதே நேரத்தில் டெக்ஸ், பேட் மற்றும் ரோபுல்ஸ் மூவரும் சான்டா ரோசாவினுள் நுழைந்தனர்...
வில்லர்!



ஏதாவது பிரச்சனையா டெக்ஸ்?
பிரச்சனை உங்கள் நகரில் அல்ல...!
ஏராளமான தகவல்களை ஒரு 'பட்சி' எங்களுக்குச் சொன்னது ஷெரீப்!
பேட், உங்களுக்கு விபரமாய் சொல்வான்.. நான் இரயில் முகாமுக்குத் திரும்ப வேண்டும்!
அப்படி என்ன தலை போகிற அவசரம்?
பேட் உங்களிடம் சொல்லும் போது நீங்களும் புரிந்து கொள்வீர்கள். இப்போது எனக்கு நல்லதொரு குதிரை இரவலாகக் கிடைக்குமா?
என்ன மாதிரியான விவகாரம் என்று ஒரேயொரு க்ளு மட்டும் கொடுத் தாயானால் என் குதிரையையே உனக்குத் தருகிறேன்!
ரைட்.... செவ்விந்தியர்!
வாவ்!
அவர்கள் முகாமைத் தாக்குகிறார்களா?
இதுவரை இல்லை! ஆனால் நிச்சயம் தாக்குவார்கள்!


நாளை அதிகாலை தாக்குதல் நடக்குமென்று நினைக்கிறேன்! எல்குர்வோ பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?
யெஸ்!
கடந்த ஆண்டு மெஸ்கலரோ செவ்விந்தியக் கூட்டத்தை விட்டு வெளியேறிச் சென்ற புரட்சிக்காரன்! அதன் பிறகு சுமார் 100 வீரர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு ஒரு கொடியின் கீழ் தனி ஆட்சி நடத்துகிறான்...!
வெல். அவன்தான் முகாம் மீது தாக்குதல் நடத்தப் போகிறான்!
சைத்தான்!
உங்களால் முடிந்த அளவுக்கு ஆட்களைத் திரட்டிக் கொண்டு முகாமுக்குப் புறப்பட்டு வாருங்கள்!
அவர்கள் தாக்குதல் நடத்தும் வரை மறைந்திருங்கள் - தாக்கத் துவங்கிய உடன் பின் பக்கமாக உங்கள் அதிரடியைத் தொடங்கினால் பயல்கள் வசமாய் சிக்கி விடுவார்கள்!
குட் பை!
சீக்கிரம் சந்திப்போம்!
குட் லக் டெக்ஸ்!



முகாமை நோக்கி குதிரையை மிதமான வேகத்தில் விரட்டினார் டெக்ஸ். நெடிய பயணம் காத்திருந்ததால் குதிரையை களைப்படையச் செய்ய அவர் விரும்பவில்லை..
விடியும் முன்பு நாம் முகாமை அடைய வேண்டும் நண்பனே!
அதே சமயம் தொழிலாளர் முகாமில்...
எவ்வளவு கட்டைகள் கை வசம் இருக்கு?
சுமார் 3 மணி நேர வேலைக்குத் தேவையான அளவு மட்டுமே இருக்கு!
அப்படியானால் 10 பேருடன் சாண்டா ரோசா போ! வேகமாக வேலையை முடித்தால் கட்டைகளை ஏற்றிக் கொண்டு நாளைக் காலை 10 மணிக்குள் இங்கு வந்துவிட முடியும்!
OUTHERN RAILWAY
ORKS DEPARTMENT
அப்படியே கொஞ்சம் டைனமைட்டும் ஏற்றிக் கொண்டு வந்து விடு!
ஓ.கே.!
அரைமணி நேரம் கழித்து 10 பேருடன் முகாமில் இருந்து ரயில் புறப்பட்டது...



ஆ! அந்த இரும்புக் குதிரை வெள்ளை நாய்களின் முகாமிலிருந்து வெளியே வருகிறது!
அது பற்றி நமக்குக் கவலை இல்லை - முகாமிற்குள் இருக்கும் ஆயுதங்களும் பணமும் தான் நமக்குத் தேவை!
இரத்த இரவு
கட்டைகளைத் தூக்கி வருவதற்காக தூக்கத்தைக் கெடுத்து மெனக்கெட வேண்டுமா? நாளைக் காலை அங்கு செல்லக் கூடாதா?
நோ!
இன்னும் 3 மணி நேர வேலைக்குத் தேவையான கட்டைகள் மட்டுமே முகாமில் உள்ளது! ஏற்கனவே வேலை தாமதமா கிக் கொண்டே போகிறது! இதில் கட்டை இல்லை என்று வேலை சுணங்கினால் போச்சு!
தாமதம் ஏற்பட்டதற்கு நாங்கள் காரண மல்ல! இவ்வளவு தூரம் ரயில் பாதை அமைந்துள்ளதே ஒரு அற்புதம் தான்!
உண்மைதான்!


இது உங்களுடைய தவறோ அல்லது டேடனின் தவறோ அல்ல. எப்படியோ தாமதமாகிவிட்டது. இது மேலும் தொடரவிடக் கூடாது!
கரும்புகையையும் நீராவியையும் வெளியிட்டபடி இரவைக் கிழித்துக் கொண்டு ரயில் புறப்பட்டு ஒரு மணி நேரம் ஆனது...
டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்
கொள்ளையர்களா?
நோ! ஒரேயொரு ஆசாமிதான். அதுவும் ரயிலுக்கு நேராகவே வருகிறான்!
வேகத்தைக் குறை - ஏதாவது முக்கியமான விஷயமாக இருக்கும்!
ஸ்டாப்! ஸ்டாப்!
டுமீல்
டுமீல்


கூக்கூ.... கூக்
ஹேய்!
என்ன நடக்கிறது?
நம் ரயிலின் வேகம் குறைந்து விட்டது!
துப்பாக்கி சப்தம் கேட்கிறது!
வண்டியை நிறுத்து! அது டெக்ஸ் வில்லர்தான்!
வேறு யாருமில்லை ரேஞ்ஜர்தான்!
ஸ்டாப்!
ஹலோ வில்லர் - என்ன பிரச்சனை?
பயங்கரமான சமாச்சாரம், முகாமில் எதுவும் நடந்ததா?
ஒரு மணி நேரத்திற்கு முன்பு வரை முகாம் அமைதியாகவே இருந்தது!
வில்லர்! என்ன நடந்தது!
4066


எல்குர்வோ கூட்டத்தினர் முகாம் மீது தாக்குதல் நடத்த உள்ளனர் - அநேக மாக நாளைக் காலை நடக்கலாம்!
சான்டா ரோசாவின் ஷெரீப் உதவிக்கு ஆட்களைத் திரட்டிக் கொண்டிருக்கி றார். ஒரு வேளை அவர்கள் வந்து சேரத் தாமதமாகி விட்டால், நீங்கள் அங்கே ஆஜராகிவிடுவது நல்லது!
முடிந்த அளவுக்கு ஆட்களைத் திரட்டிக் கொண்டு உச்ச வேகத்தில் முகாமுக்குத் திரும்புங்கள்! முகாமில் இருப் போரின் உயிர் இப்போது உங்கள் கையில்தான் உள்ளது!
நான் முகாமுக்கு விரைந்து அங்கு சண்டைக்குத் தயார் படுத்துகிறேன்!
வேகத்தைக் கூட்டு டாம்!
இதுவரை போகாத வேகத்தில் இந்த முறை போய் சாதனையை முறியடிப்போம்!
பாய்லரே வெடித்துச் சிதறினாலும் பரவாயில்லை!



பயங்கர அபாயத்திலிருக்கும் முகாமை நோக்கி டெக்ஸ் விரைந்து கொண்டிருந்த போது...
...தூள் கிளப்பும் வேகத்தில் ரயில் பறந்து கொண்டிருந்தது. கரும்புகை மேக மூட்டமாய் மேலே வர, நேரத்துடன் ஒரு போட்டி நடந்து கொண்டிருந்தது!
டெக்ஸ் குதிரை மிக வும் சோர்வடைந்த நிலையில் ஓடிக் கொண்டிருந்தது!
அதோ முகாம் நெருங்கி விட்டது! இன்னும் ஒரு மைல் தான் இருக்கு! அப்புறம் ஓய்வெடுக்கலாம்!
ஆனல் அதே நேரம்...
அந்த வெள்ளை நாய் நாம் தடுத்து நிறுத்த வேண்டும்!
நோ! நாம் இங்கு இருப்பதை அவர் களுக்குக் காட்டி விடக்கூடாது!
டுமீல்
இவ்வளவு சீக்கிர மாகத் தாக்குதலைத் தொடங்கக் கூடாது..
கடவுளே! அவனை நோக்கி யாரோ சுட்டு விட்டனர்!


நாசமாய் போச்சு! செவ்விந்தியர்கள் ஏற்கனவே முகாமை முற்றுகையிட்டு விட்டனர்!
என் ஆணைக்குக் காத்திராமல் தோட்டாவை முழக்கியவனின் தலையில் இடி விழ...! இனி வேறு வழி இல்லை- தாக்குதல் தொடங்கட்டும்!
யா ஹீ...
அட ஆண்டவனே! நரகமே இங்கு வந்து விட்டதே!
டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்
வழியை விட்டு விலகு சைத்தானே!
டுமீல்


முகாமினுள் -
மிஸ்டர் டேடன்!
பயங்கர சப்தம் கேட்டது! செவ் விந்தியர்களா?
டுமீல்
எல்லாரும் எழுந் திருங்கள்! செவ்விந் தியர்கள் வந்து விட்டனர்!
யாஹூ!!!
டுமீல்
ஆ!
டுமீல்!
செத்துத் தொலை!
எல்லாரும் தயாரா குங்கள்! க்விக்!
ஜாக்கிரதை.. அவர்கள் என்னைப் பின் தொடர்ந்து வருகிறார்கள்!
வில்லர்! நீங்கள் வந்து விட்டீர்களா? ஆண்டவனுக்கு நன்றி!
டுமீல் டுமீல்
டுமீல்


ஆ!
யாஹூ!!!
டுமீல்
டுமீல்
டுமீல்
சீக்கிரம் வில்லர்! ஸ்டோர்ஸ் பக்கம் போங்கள்!
உங்களுடைய ஆட்களுடன் நீங்களும் முன்னே போங்கள்...
ஓலமிடும் அந்தச் சாத்தான்களை நோக்கி இரண்டு ரவுண்ட் சுட்டு விட்டு வருகிறேன்!
பதிலுக்குக் கூட காத்திராமல் டெக்ஸ் மூலையில் இருந்த மரக்குடிசை நோக்கி ஓடினார். அங்கிருந்தபடி முன்னேறி வந்த செவ்விந்தியர்களை நோக்கி சரமாரியாகச் சுட்டார்...
டுமீல்! டுமீல்!
யாஹூ!!!
ஐயோ!
முன்னோக்கிப் போ!
ஆசை தீர கூச்சல் போடுங்கள்!
டுமீல் டுமீல்


இரட்டைக் குழல் துப்பாக்கியில் தோட்டாக்கள் காலியான உடன், டெக்ஸ் கைத் துப்பாக்கியுடன் ஸ்டோர்ஸுக்கு விரைந்தார். திரண்டு வரும் செவ்விந்தியர்கள் கண்களில் படாதபடி மறைந்து வந்தார்...
சீக்கிரம் வில்லர்!
இதோ வருகிறேன்!
ஐயோ!
டுமீல்!
ஆ!
டுமீல் டுமீல்
கதவை மூடுங்கள்!
டுமீல் டுமீல்
சரியான மோதல் தான்!
வெளியே நிறைய செவ்விந்தியர்கள் இருக்கிறார்களா?
ஆமாம் டேடன். ஆனால்இன்னும்சில மணி நேரம் தாக்குப்பிடித்து விட்டால், அந்தக் கொரில்லாக் குரங்குகளுக்கு நல்லதொரு பாடம் கற்பிக்க முடியும்!
டுமீல் டுமீல்
டுமீல்


நான் ஏற்கனவே சாண்டரோசாவில் இதுபற்றி எச்சரிக்கை செய்துவிட்டேன் நேற்று இரவு நீங்கள் அனுப்பிய ரயில் மூலம் விரைவில் ஆயுதம் தாங்கிய வீரர்கள் உதவிக்கு வந்து சேர்வார்கள்!
டுமீல்
டுமீல்
டுமீல்
ஆ!
டுமீல்
அவர்களை முன் னேறி வராதபடி நிறுத்துங்கள்! தேவையான உதவி விரைவில் வந்து விடும்!
அவர்கள் சரியான நேரத்தில் வரா விட்டால் நம் பாடு திண்டாட்டம் தான்!
கொஞ்சம் விலகிக் கொள்ளுங்கள்!
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்


குடிசையைச் சுற்றி நிற்கும் அனைவரையும் காலி செய்வோம்!
டுமீல்
டுமீல்
ஐயோ!
அம்மா!
டுமீல்
டுமீல்
டுமீல்
ஐயோ!
ஆண்டவனே! மரக்குடிசைக்குப் பின்னால் போய் பதுங்குங்கள்!
பின் வாங்குகிறார்கள்
கதவைத் திறக்க முடியாதபடி தடுப்புகளை வையுங்கள்!



இறுதி மோதல்!
தோட்டாக்களை வீணாக்க வேண்டாம்! மெதுவாகவே சுடுங்கள்!
ஆ!
டுமீல்
டுமீல்
இதற்கிடையில் செவ்விந்தியர்கள் குடியிருப்புகளினுள் புகுந்து நொறுக்கத் துவங்கினர்...
யாஹூ!!!
க்ராஷ்
...அவர்களுடைய வெறிக் கூச்சலோடு தட்டு முட்டு சாமான்கள் உடைந்து நொறுங்கும் ஓசையும் சேர்ந்து கொண்டது!
யாஹூ!!!
க்ராஷ்
அவர்களுடைய காட்டுக் கூச்சலைக் கேட்கிறீர்கள் அல்லவா?
டொண்ட் ஒர்ரி, டேட்டன்!
அவர்கள் அங்கே ரகளையில் ஈடுபட்டிருந்தால் அது நமக்குக் கிடைத்த போனஸ்! கூடுதலாக கால அவகாசம் கிடைக்கிறதே!



கொஞ்சமாவது டைனமைட் இருக்கிறதா?
நிறைய இருக்காது!
உங்களுடைய திட்டம்தான் என்ன?
நாம் பதுங்கியிருக்கும் இந்த ஸ்டோர்ஸை நெருங்க விடாமல் செய்ய ஒரு வழி பண்ணப் போகிறேன்!
பக்கத்திலுள்ள குடிசைகளைத் தரைமட்டமாக்கப் போகிறேன்!
இவ்வளவுதான் கைவசமுள்ள வெடி குண்டு!
குட்! அதிகம் இல்லாவிட்டாலும் அருகில் இருக்கும் இரண்டு மரக் குடிசைகளையாவது இது தரை மட்டமாக்கும்! கதவைத் திறந்து வைத்து விட்டு உங்களுடைய ஆட்களைத் தயாராக இருக்கும்படி சொல்லுங்கள்!
ஜன்னல் அருகில் இருக்கும் நண்பா... எதிரே உள்ள குடிசையை நோக்கிச் சுட்ட வண்ணம் இரு!
அவர்கள் எல்லாரும் அந்தப் பெரிய குடிசையில் உள்ளனர் – அனைவரையும் அங்கே வைத்துக் கொன்று குவிப்பது எளிதான காரியமல்ல!
அவர்களை வெளியேறும்படி நாம் செய்ய வேண்டும்!


வீரர்களிடம் நெருப்பு அம்புகளைத் தயாரிக்கும்படி சொல். தீ ஒன்று தான் வெள்ளை நாய்களை வெளியே வரச் செய்யும்!
யெஸ்!
ஆனுல் அதே கணத்தில் ஸ்டோர்ஸின் கதவு திடீரென்று திறந்தது. கையில் வெடி குண்டு பண்டலுடன் டெக்ஸ் பாய்ந்தோடி வந்தார்...
டைனமைட் அதிரடியாகத் தாக்க செவ் விந்தியர்கள் திகைத்துப் போனார்கள்! ஆனால் எதிர்பாரா பிரச்சனை ஒன்றும் டெக்ஸுக்கு முளைத்தது!
இதற்குத் தான் நான் பயந்தேன்! காற்று வேகமாக வீசினுல் தீ நம் பக்கமும் பரவி விடும்!
வசமாக மாட்டிக் கொண்டோம்!
இருக்கலாம் - ஆனுல் அதற்காக தைரி யத்தை இழக்கக் கூடாது! குடிசைக்கு நேரடியாகத் தீ வைக்க நினைக்கிறார்கள்!


தீ அம்புகளை எய்வது யார் எனபார்க்கப் போகிறேன். ஆ! அதோ அந்த ஜோடி தான்!
இப்போது என் கை வரிசையைக் காட்டுகிறேன் பசங்களா!
டுமீல்
ஆ!
டுமீல்
டுமீல
ஐயோ!
டுமீல்
டுமீல்


அதே சமயம்
அதோ தெரியுது முகாம்! முகாம் முழுவதும் தீப்பற்றி எரியுதே!
நாம் ரொம்ப தாமதமாக வந்து விட்டோம்!
மெதுவாகப் போடாம்! முகாமிற்கு வெளியே ரயிலை நிறுத்திவிடு!
கூக்கூ... கூக்
அதோ ரயில் வந்து விட்டது!
ரயில் வந்து விட்டது!
நாம் பிழைத்தோம்!
தீ கக்கும் இரும்புக் குதிரை வந்து விட்டது
யா! அப்படியானால் நமது தோட்டாக் களுக்கு இரையாக இன்னும் சில
வெள்ளைக்கார நாய்கள் கிடைத்தாகி விட்டது!
20 வீரர்கள் மட்டும் எரியும் இந்தக் குடிசையில் இருங்கள். மற்றவர்கள் என்னுடன் வாருங்கள்!


ரயில் தண்டவாளங்களின் குறுக்கே மரக்கட்டைகளை அடுக்கி முட்டுக் கட்டை போட சிலர் முனைந்தபோது, மற்றவர்கள் ரயில் நின்ற உடன் சுடத் தயாராக இருந்தனர்...
பிரேக் போடு! அந்தப் பயல்கள் தண்டவாளத்தில் தடையை ஏற்படுத்தி யுள்ளனர்!
நாசமாய் போக!
சுடத் தயாராக இருங்கள்!
சில வினாடிகளுக்குள் நீராவி மேகங் களுக்கிடையே ரயில் நின்றது. இரத்த வெறியோடு காத்திருந்த செவ் விந்தியர்கள் மீது தோட்டா மழை பாய்ந்தது...!
டுமீல்
டுமீல் டுமீல் டுமீல்
டுமீல்
டுமீல் டுமீல்



டுமீல் டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்
டுமீல்
டுமீல் டுமீல்
ஆ!
ஐயோ!
!
அந்தப் புயல் வேகத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்ட நிலையில் உயிர் பிழைத்த செவ்விந்தியர்கள் ஓட்டமெடுத்தனர்...
யாஹூ
..எதிரி ஓடுவதைக் கண்டவுடன் தாக்குதல் தீவிரமானது...
கம்-ஆன்!
விடாதீர்கள்!
டுமீல்
டுமீல்
அதே சமயம் முகாமினுள் -
டெக்ஸ்! இன்னமும் நாம் இங்கிருந்தால் உயிருடன் சமாதி யாகிப் போவோம்!
வெளியே செல்லத் தயாராக இருங்கள்!
சின்னாபின்னமான அந்தக் குடிசையை நோக்கி ஓடுங்கள்! அதிகப் பாதுகாப்பு தராதுதான் - ஆனால் ஒன்றுமில்லாததற்கு எவ்வளவோ பரவாயில்லை!...


புறப்படுவோம்
வாருங்கள்!
டுமீல் டுமீல்
டுமீல்
டுமீல்
ஆனால் அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது! தங்களுடைய சக வீரர்கள் பயத்தில் ஓட்டமெடுத்த உடன் ஸ்டோர்ஸுக்கு எதிரே நின்ற செவ்விந்தியர்களும் தப்பி ஓடி விட்டனர்! டெக்ஸ் குழுவினரை எதிர்க்க யாருமே இல்லை!
அவர்கள் எல்லோரும் தப்பி ஓடிவிட்டனர்!
அப்படியானால் இந்த நரகத்தை விட்டு நாம் வெளியேறுவோம்!
ஷெரிப்புடன் வந்த பாதிப்பேர் உயிர் தப்பிய செவ்விந்தியர்களை விரட்டிச் சென்ற போது...
ஷெரீப்பும் பேட்டும் டெக்ஸை சந்தித்தனர்!
சரியான நேரத்திற்கு வந்துவிட்டீர்கள்!
ரொம்பப் பேர் செத்துவிட்டனரா?



நோ. சுமார் 10 பேருக்கு காயம் மட்டுமே! நீங்கள் சரியான சமயத்தில் இங்கு வந்தது எங்களுடைய அதிர்ஷ்டம்தான்!
ரயில் வந்திருக் காவிட்டால் எங்களால் இங்கு வந்திருக்க முடியாது!
ஏகப்பட்ட பொருள் சேதம்
ரொம்ப வருத்தப்படாதீர்கள் டேடன்! இரத்த ஆறு ஓடாமல் தப்பித்ததே நம் நல்ல நேரம்! ஆனால் ரயில் கம் பெனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய, எனக்குத் தெரிந்த ஒரு நபர் தயாராக இருப்பார்! இல்லையா ரோபுல்ஸ்?
யெஸ், சார்!
கொலைக்கு ஒரு விலை!
என்ன சொல்கிறீர்கள் வில்லர்? இவ்வளவு பெரிய நஷ்டத்தை யாரால் சமாளிக்க முடியும்? இது பற்றி கம்பெனியின் பங்குதாரர்கள் கேள்விப்பட்டால் பணத்தைத் திருப்பி கொடுக்கச் சொல்லி தகராறு பண்ணுவார்கள்! அத்தோ கம்பெனியும் திவாலாகிப் போய்விடு


என்னை நம்பு டேடன்! நஷ்டத்தை ஈடு செய்யத் தேவையான எல்லாப் பொருட்களும் ஒரு சில நாட்களில் உங்களுக்குக் கிடைக்கும்!
மேலும் கம்பெனிக்கு ஒரு பெரும் தொகை நஷ்ட ஈடாகக் கிடைக்கச் செய்கிறேன்! கம்பெனியின் எதிர்காலம் சுமுகமாக இருக்கும்!
கேட்பதற்கு நன்றாகத்தானிருக்கு!
பொறுத்திருந்து பார்!
கொஞ்சம் விபரமாகச் சொல்கிறீர்களா?
நோ - இப்போதைக்கு வேறு எதுவும் சொல்ல மாட்டேன்! ரயிலை மீண்டும் சான்டா ரோசாவுக்கு அனுப்புவதற்கான வேலைகளைச் செய்யுங்கள்! வேலையாட்கள் தங்குவதற்குப் புதுக்கூடாரங்களும், உணவுப் பொருட்களும் வாங்கி விடுங்கள்!
...நான் உங்களுக்குத் தேவையான பொருட்களை வரவழைத்த மறு கணமே வேலையைத் தொடங்கத் தயாராக இருங்கள்! அதிகபட்சமாக ஒரு வாரத்திற்குள் இங்கு எல்லாமே சகஜநிலைக்குத் திரும்பி விடும்!
அப்படியானால் சரிதான்!
முதலில் செத்துப் போன செவ்விந்தியர்களின் உடல்களைப் பிணம் தின்னிக் கழுகுகள் வருமுன் புதைத்தாக வேண்டும்! கம் ஆன்!



இறந்தவர்களின் பிணங்கள் புதைக்கப் பட்டு ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் சாண்டாரோசாவிற்குப் புறப்படத் தயாராக இருந்தார்...
விரைவில் நல்ல செய்தியோடு வருகிறேன் டேடன்!
குட் லக் வில்லர்!
சொன்னதை செய்து காட்டுவேன் டேடன்!
விசில் அடித்துக் கொண்டே ரயில் முகாமை விட்டுப் புறப்பட்டது...
முழு விஷயத்தையும் என்னிடம் ஏன் சொல்ல மாட்டேன்கிறாய் வில்லர்?
இந்த விவகாரத்தில் சட்டம் என் கைகளைக் கட்டிப் போடாதபடி, என்னுடைய போக்கில் காரியத்தை சாதிக்க விரும்புகிறேன்!
பேட்டும், ரோபுல்ஸும் எந்த அளவுக்கு உங்களிடம் சொல்லி யிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் உண்மை என்னவென்றால் மோர்டைமருக் எதிராக என்னிடம் இருப்பது ஒரேயொரு மெல்லிய தடயமே


அதாவது மோர்டைமருக்கு எதிராக இவன் சொல்லப் போகும் சாட்சியம் தான்!
...கோர்ட் - கேஸ் என்று நடந்தால் தாமதமாகிவிடும்! டேடனுக்கு உடனே உதவி கிடைக்காவிட்டால் அவன் கம்பெனி அம்பேல்!
உண்மைதான் டெக்ஸ். எதிரி திறமையான வக்கீல்களை அமர்த்தி வழக்கை பல மாதங்களுக்கு இழுத்து விட முடியும்!
அதற்குள் மோர்டைமர் ஊரை விட்டே ஓடி விடும் அபாயமும் உண்டு!
அன்றைய தினமே டெக்ஸ், பேட் மற்றும் ரோபுல்ஸ் மூவரும் சாண்டா ஃபீ நோக்கிப் புறப்பட்டனர்...
தைரியமாக இரு ரோபுல்ஸ்!
...நள்ளிரவில் அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தனர்...
இரவுக்குத் தங்க ஏற்ற இடம் ஏதாவது தெரியுமா?
யெஸ் சார்! என்னைத் தொடர்ந்து வாங்க!
எனக்கொரு நல்ல நண்பன் புறநகர் பகுதியில் இருக்கிறான். அவன் நமக்குத் தங்க இடம் தருவான்!
குட்!


பொழுது விடிந்ததும் டெக்ஸ் உள்ளூர் பத்திரிகை அலுவலகத்திற்கு வந்தார்...
டெக்ஸ் வில்லர்? உங்களைச் சந்திப் பது மகிழ்ச்சியாக இருக்கு! இந்த நேரத்தில் நீங்கள் இங்கு வந்திருக் கிறீர்கள் என்றால்... ஏதோ முக்கிய மான விஷயம் இருக்க வேண்டுமே?
சதர்ன் கம்பெனியின் ரயில்வே முகாம் மீது நடந்த தாக்குதல் பற்றிக் கேள்விப் பட்டீர்களா?
யெஸ். எல்லாத் தகவல்களும் கிடைத்து விட்டன - பிரசுரிப்பதற்கு தயாரான நிலையில் உள்ளது!
அப்படியா?
வெல். அதில் புதிய தகவல் ஒன்று சேர்க்க வேண்டும். ஷெரீபும் ஆட்களும் செவ்விந்தியர்களை விரட்டிச் சென்றபோது, செத்துக் கிடந்த மெக்சிகோ ஆசாமி ஒருவனைக் கண்டனர். அவன் சித்ரவதை செய்யப் பட்டு சாகடிக்கப் பட்டுள்ளான். அவனது மார்பில் 'M' என்ற முத்திரை நெருப்புச் சூடு மூலம் வைக்கப் பட்டிருந்தது!
?
அவனுடைய பாக்கெட்டில், கில் ரோபுல்ஸ், மத்திய தெரு, சாண்டா ஃபீ என்ற முகவரியுடன் ஒரு கடிதம் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது...
கில் ரோபுல்ஸ்? அவனை எனக்குத் தெரியுமே!
ஒரு காலத்தில் அவன் மோசமான வனாக இருந்தான். வாங்கியூஸ் கும்ப லில் சேர்ந்து அட்டகாசம் செய்தான். சில ஆண்டுகள் ஜெயிலிலும் இருந்தான். ஆனால் மிஸ்டர் மோர் டைமரிடம் வேலைக்குச் சேர்ந்து கொண்ட பிறகு நேர்மையாக இருந்தான்!
நல்ல மனிதர்கள் இந்த மோர் டைமர்கள் - குறிப்பாக டாம்! இந்த நகருக்கே அவர் ஒரு வழி காட்டி...!
அப்படியானால் ரோபுல்ஸின் மரணம் செய்தி அடிப்படையில் முக்கியமான தாகவே இருக்கும்..! இல்லையா?



...மோர்டைமரும் தங்களுடைய வேலையாளின் மரணத்தை துப்புத் துலக்க நீங்கள் உதவியது குறித்து மகிழ்ச்சியடைவார்கள்!
உண்மை!
உங்களுக்குத் தெரிந்த முழு விபரத்தையும் சொல்லுங்கள்
தூண்டிலில் மீன் சிக்கி விட்டது!
செவ்விந்தியர்கள் அவனை சித்ரவதை செய்திருக்கிறார்கள்!
மறுநாள் காலை -
எல்குர்வோ ஒரு முட்டாள்! ரோபுல்ஸ் மீது 'M' என்று முத்திரையை பதித்துத் தொலைக்க காரணம் என்ன?
என் நல்ல நேரம் - எல்குர்வோவும் செத்துவிட்டான்! எனவே எனக்குத் தொந்தரவு கொடுக்க இனி யாருமே இல்லை. குட்... ரொம்ப நல்ல செய்திதான்!
சதர்ன் நிறுவனம் அழிக்கப்பட்டு விட்டது...! நமக்கு இனி போட்டியே கிடையாது! ரோபுல்ஸின் வாய் மூடப் பட்டு விட்டது... எல்குர்வோவும் செத்தான்...! அபாரம்!
RAILWAY ATTACK
TRAGIC DEATH OF A FELLOW CITIZEN
GIL ROBLES TORTURED TO DEATH BY APACHES
EL CUERVO, MANY APACHES KILLED IN ENCOUNTER
மோர்டைமர் தன் அண்ணனை அலுவலக அறையில் சந்தித்தான்...
பேப்பர் படித்தாயா?
ஆமாம். சதர்ன் நிறு வனத்திற்குப் பெரிய அழிவு ஏற்பட்டு விட்டது!


அவர்கள் மீது பரிதாபப் படுகிறாயா - என்ன? அவர்கள் போட்டியாளர் கள் என்பதை மறந்து விட்டாயா?
நோ! ஆனால் இப்போது அவசர நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம்!
இது தொடர்பாக விசாரணை நடக்கும்! தப்பித் தவறி நம் பெயர் அடிபட்டால்...
அதைப் பற்றிக் கவலைப்படாதே! எனக்கும் செவ்விந்தியர்களுக்கு மிடையே தொடர்பு இருப்பதாக நிரூபிக்க யாருமே இப்போது உயிருடன் இல்லை!
ஆனால் அதே நேரம் அறைக்கு வெளியே...
உங்களை அனுமதிக்க முடியாத ஜென்டில் மென்! முன் அனுமதியின்றி மோர்டைமர்கள் யாரையுமே பார்க்க மாட்டார்கள். உங்களுடைய பெயர் மற்றும் தொழிலைச் சொன்னால்...
பேட் நமது தொழில் என்ன என்பதை அவரிடம் சொல்!
ஓ.. தாராளமாக..!
ஏய்!
மடேர்!
க்ராஷ்
ஒரு ரேஞ்சர் பேச வந்திருப்பதாக மிஸ்டர் மோர்டைமரிடம் சொல்!
?


சைத்தான்! யார் அந்தப் பைத்தியக்காரன்?
கதவைத் திற பேட்!
ஓ.கே.!
தேங்க்ஸ்!
க்ராஷ்!
நாங்கள் உள்ளே வரலாமா?
உனக்கென்ன பைத்தியமா?
ஜிம், ஷெரீபைக் கூப்பிடு!
ஷெரீபா? யெஸ். அதுவும் நல்ல ஐடியாதான்!
இரண்டு பை நிறைய கத்தைகத்தையாய் பணத்தை எடுத்துக் கொண்டு போய் எல்குர்வோவிடம் கொடுத்த ரோபுல்ஸ் விவகாரம் பற்றி ஷெரீப்பும் கேட்க ஆசைப்படலாம்!
அது மட்டுமல்ல - ஜெப் கோல்டர் என்ற ஆசாமியை முதுகில் சுட்டுக் கொன்ற ஒரு சொறிநாயை பற்றியும் அவர் கேட்க விரும்பலாம்!
கிழிஞ்சது போ!


எப்படி வசதி? - இன்னமும் ஷெரீபை கூப்பிடப் போகிறீர்களா?
ஹ்ம்ம்ம்! பாதை மாறி நீங்கள் இங்கு வந்து விட்டதாகத் தெரிகிறது..!
...அதே நேரம் நானும் எனது சகோத ரனும் நிதானமானர்கள்- எதையுமே யோசித்து செயல்படுபவர்கள்! ஷெரீபை கூப்பிடும் முன்பு நீ என்ன சொல்ல வந்தாய் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்!
பரவாயில்லையே..!
OVER
அறையை விட்டு வெளியே போ ஸ்மித்!
பேட் - இவரை வெளியே கூட்டிப் போய் பேசிக் கொண்டிரு!
நல்ல பையனாய் அமைதியாய் இரும் மிஸ்டர் ஸ்மித்! சப்தம் போட்டால்... ஜன்னலுக்கு வெளியே எறிந்து விடுவேன்!
பேட் வெளியே சென்ற உடன் டெக்ஸ் மோர்டைமர் சகோதரர்கள் பக்கம் திரும்பினார்...
இப்போது முடிவு செய்யும் நேரம் வந்துவிட்டது! உங்களால் சின்னாபின்னமாகிக் கிடக்கும் சதர்ன் நிறுவனத்திற்கு என்ன நஷ்ட ஈடு செய்யப் போகிறீர்கள்?
ஜெப் கோல்டரை நீங்கள் காலி பண்ணிய விவகாரத்தைப் பெரிசு படுத்தமாட்டேன் - ஏனெனில் அவன் என்னைத் தீர்த்துக் கட்ட நினைத்த கருங்காலி!


...அதுமட்டுமல்ல - உங்கள் உத்தரவின் பேரில் எல்குர்வோ, ரோபுல்லை கொலை செய்ததையும் நான் மறக்கத் தயாராக இருக்கிறேன்...!
பொய்! சுத்தப் பொய்!
இன்னும் ஒரு வார்த்தை பேசினால் உன் பல்லைக் கழற்றிடுவேன்! நான் தான் அந்த அப்பாவி ரோபுல்லைப் பார்த்தவன்!
செத்தேன்!
...நான் அவனைப் பார்த்த போது சாகும் தருவாயில் - ஆனால் உயிருடன் இருந்தான்! அத்துடன் அவனால் பேசவும் முடிந்தது!
உங்களில் ஜிம் என்பவன் யார்? நீயா?
யெஸ்..! ஆனால் முட்டாள் தனமான இந்தக் குற்றச் சாட்டு களை உன்னால் நிரு பிக்க முடியாது!
அது எனக்குத் தெரியும் ! உன்னைப் போன்ற பெருச்சாளியை ஜெயிலுக் குள் தள்ள இது போதாதுதான்... ஆனால் அது அவ்வளவு முக்கியமல்ல...
ரயில் தொழிலாளர்கள் இருந்த முகாமில் யாராவது ஒருவர் இறந்திருந்தாலும் நான் வேறு விதமாக இந்நேரம் பேசிக் கொண்டிருப்பேன். ஆனால் அதிர்ஷ்டம் உன் பக்கம் இருக்கிறது. யாருமே கொல்லப் படவில்லை! எனவே உனக்கு ஒரு வாய்ப்பைத் தருகிறேன்...!
OVERLAND RAILWAY



உன்னுடைய சதித்திட்டத்தால் பெருமளவு நஷ்டம் அடைந்துள்ள சதர்ன் நிறுவனத்திற்கு பெரிய தொகை ஒன்றைத் தரத் தயாராக இருக்கிறாயா?
ஹ்ம்ம்ம்! சுற்றி வளைத்து எங்கு வருகிறாய் என்பது எனக்கு இப்பப் புரியுது..
பணத்தை வாங்கி உன் பாக்கெட்டை நிரப்ப...
ஐயோ!
உன்னை வைத்து மற்றவர்களை எடை போடுவது இதுவே கடைசித் தடவையாக இருக்கட்டும்.
முட்டாள்!
உன்னுடைய முகபாவனைகளில் இருந்து - உன்னுடைய சகோதரனின் கோல்மால் வேலைகள் பற்றி உனக்கு எதுவும் தெரியாது என்றே நினைக்கிறேன்!
நோ!
ஜிம் சதர்ன் நிறுவனத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கிறான் என்பது தெரியும் - ஆனால் அவன் இந்த அளவுக்குப் போயிருப்பான் என்று கனவிலும் நினைத்ததில்லை!
முட்டாள்
உன்னைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கிறாயாக்கும் டாம்?
அந்த ஆள் சொன்னது எல்லாம் உண்மையாக இருக்கும் பட்சத்தில்- என்னுடைய நிலைமையை நான் தெளிவு படுத்தித் தீர வேண்டும்!


எல்லாம் உண்மையாகவே இருந்தாலும் நீ ஏன் பயப்பட வேண்டும்? நமக்கு எதிராக அவனிடம் என்ன ஆதாரம் இருக்கு?
உன் கெட்டிக்கார சகோதரன் உண்மை யைத் தான் சொல்கிறான் - என்னிடம் எந்த ஒரு ஆதாரமும் இல்லைதான்.
?
இருளில் தண்டனை!
நீங்கள் இருவருமே இந்த சமூகத்தில் பெரிய மனிதர்கள். நான் பகிரங்கமாக, சதர்ன் நிறுவனத்தின் அழிவுக்கு நீங்கள் தான் காரணம் என்று குற்றம் சாட்டினால் என்ன ஆகும் என்று யோசித்துப் பார்த்தீர்களா?
உங்கள் இருவர் மீதும் நிச்சயமாக வழக்குப் போடப்பட்டு விசாரணை நடக்கும். ஆனால் இதற்கிடையில் சதர்ன் நிறுவனம் உருத்தெரியாமல் போய்விடும்...
...நீங்கள் பொதுமக்களிடையே மரி யாதையை இழந்து விட்டாலும் - ஜெயிலுக்குப் போனாலும், சதர்ன் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு இழப்பாகவே இருக்கும்! அதை நான் அனுமதிக்க மாட்டேன்!


ஒன்று சதர்ன் நிறுவனம் மீண்டும் தன் சொந்தக் காலில் நிற்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்...
...அல்லது நீங்கள் ஆயுசுக்கு கம்பி எண்ணும்படி செய்யப் போகிறேன்.
அட - சும்மா மிரட்டாதே மிஸ்டர்!
நீ ரேஞ்சர் என்பதை மறந்துவிடு! ஆதாரம் இல்லாமல் எங்கள் மீது குற்றம் சாட்டினால், உன் மீது மான நஷ்ட வழக்குப் போடுவேன்!
இந்தப் பூச்சாண்டிக் கெல்லாம் பயப் படும் ஆள் நானில்லை! ரேஞ்சராக இருந்தாலும் எனக்கு கவலையில்லை! உன்னிடம் இருப்பது ரோபுல்ஸின் கதை மட்டும் தானே...?
ரோபுல்ஸ் சொன்னதெல்லாம் நிஜம் தான் என எப்படி உறுதியாக நினைக்கிறாய்? ரோபுல்ஸ் பற்றி உனக்கென்ன தெரியும்?
அழுத்தமான ஆசாமி தான்!
ரோபுல்ஸ் ஒரு முன்னாள் சிறைப் பறவை! இப்போது அவன் உயிருடன் இருந்து இதே குற்றச்சாட்டை சொன்னால் கூட இந்த நகரில் எவனும் நம்ப மாட்டான்!
அது எனக்கு நிச்சய மாகத் தெரியும்.


அப்படியானால் உனக்கு என்ன வேண்டும்? உன்னுடைய கஷ்டம் தீர கைநிறைய பணம் வேண்டுமா?
ஐயோ!
ஜிம்!
OVE
சாரி டாம்! ஆனால் உன்னுடைய சகோ தரனுக்கு விவேகம் பற்றாதுதான்!
நீங்கள்.. ரேஞ்சர் தானே?
இதோ என்னுடைய அடையாள பேட்ஜ் - என் பெயர் டெக்ஸ் வில்லர்!
என்னை ஒரு பிளாக்மெயிலர் என நினைத்து உன்னுடைய சகோதரன் பெரிய தவறு செய்துவிட்டான். சதர்ன் நிறுவனத்திற்கு ஏற்பட்டதை அப் படியே மறுத்துவிட வேண்டு மென்றால் நீங்கள் ஒரு பெரிய தொகையை கொடுத்தேயாக வேண் டும்!
ஜி-ஜிம் மீது நீங்கள் சாட்டிய தெல்லாம் உண்மை தானா?
யெஸ். கோல்டரை தீர்த்துக் கட்டியது ஜிம்தான்! ரோபுல்லைக் கொல்ல எல் குர்வோவுக்கு உத்தரவு போட்டதும் அவன்தான்!
போட்டியாக முளைத்த சதர்ன் கம்பெனியை நசுக்குவதற்காக உங்கள் தம்பி செய்யாத காரியம் எதுவுமே கிடையாது! முகாமிற்குள் தன் அடியாட்களை அனுப்பி வேலையில் தகராறு செய்ய வைத்ததும் அவன் கைங்கரியம்தான்!



எனக்கு எல்லாமே லேட்டாகப்' புரிகிறது!
சதர்ன் நிறுவனத்தின் வேகத்தை தடுத்து நிறுத்தும் பொறுப்பை ஜிம் எடுத்துக்கொண்டான் ஆனால் இந்த அளவுக்கு அவன் போய் விடுவான் என நான் ஒரு போதும் நினைக்க வில்லை. நான்...
எனக்கு எந்த ஒரு விளக்கமும் தேவை இல்லை டாம்...
எனக்குத் தேவையானது சதர்ன் நிறு வனத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதாக உங்கள் உறுதிமொழி மட்டுமே!
அந்த உறுதியைத் தருகிறேன் வில்லர்
சதர்ன் நிறுவனத்தோடு மோத முயற்சித்தது பெரிய தவறு என்பதை இப்போது புரிந்து கொண்டேன்! என் முட்டாள் தனத்திற்கு பிராயச் சித்தம் செய்ய எவ்வளவு செலவாகும் வில்லர்?
இன்னும் 24 மணி நேரத்திற்குள் தெரியப் படுத்துகிறேன்!
மொத்தம் எவ்வளவு தேவை என்பது குறித்து தந்தி மூலம் தெரிந்து வருகிறேன்!
தயவு செய்து அதை உடனடியாகச் செய்யுங்கள் -
சீக்கிரம் இந்த விவகாரம் முடிந்து விட்டால்தான் எனக்கு நிம்மதி!
நான் சொன்னதை சொன்னபடி செய்தால் இந்த விவகாரம் முடிவடைந்து விடும்!


நாளை உங்களைச் சந்திக்கிறேன். அதற்குள் மனம் மாறி விடாதீர்கள்.
நான் மாற மாட்டேன்!
நாம் போகலாம் பேட்!
இதோ வந்து விட்டேன்!
ஒரு பறவையை பறக்க விட்டு விட்டு வருகிறேன்...
நண்பா, அடுத்த முறை நாங்கள் இங்கு வரும் போது இன்னும் கொஞ்சம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்!
சரி தானு?
க்ராஷ்
தெருவுக்கு வந்த உடன்...
அங்கு நடந்த எல்லாவற்றையும் கேட்டாயா?
ஓ யெஸ்! சொட்டைத் தலையனை கண் காணித்துக் கொண்டிருந்த போதிலும் என் னுடைய பெரிய காதுகள் உள்ளே நடந்தது அத்தனையையும் கேட்டுக் கொண்டு தான் இருந்தது!


நீ என்ன நினைக்கிறாய்?
மோர்டைமர் இன்னும் ஏதாவது தில்லு முல்லு பண்ணாமல் இருந்தால் பிரச்சனை ஓய்ந்துவிடும்!
அப்படி எதுவும் செய்யமாட்டான் - அந்த அளவுக்குப் பயந்துள்ளான்! இது போன்ற விவகாரம் வெடித்துவிட்டால் ஊருக்குள் பெயர் நாறிப் போய்விடுமே!
இளையவன் தான் சரியான நச்சுப் பாம்பு!
நிஜம்தான்! ஏதாவது வில்லங்கமாக செய்ய அவன் முயற்சி செய்யக் கூடும்!
அப்படியானால் அவனை துவைத்து எடுக்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்!
நாம் கொஞ்சம் உஷாராகவே இருக்க வேண்டும்!
TELEGRAPH
POST OFFICE
இதற்கிடையில்...
நீ சரியான முட்டாள்!
அடச்சீ - வாயை மூடு!
நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்பது பற்றி உனக்கு நன்றாகவே தெரியும்! எனக்கு உபதேசம் செய்ய வேண்டாம்!
அப்படி அல்ல! எனக்கு கோல்டர் அல்லது ரோபுல்ஸ் பற்றி எதுவுமே தெரியாது!



ஓவர்லாண்ட் கம்பெனியின் மூத்த முதலாளிக்கு கொஞ்சம் கூட கற்பனை வளம் இல்லையாக்கும்?
வேடிக்கை பேச்சு போதும்!
இதை மூடி மறைக்க எவ்வளவு செல வாகும் என்று உனக்குத் தெரியுமா?
பிரச்சனையை என்னிடம் விட்டி ருந்தால் ரொம்ப சுளுவா முடித்திருப்பேன்!
நோ! உன்னுடைய யோசனையைக் கேட்டதெல்லாம் போதும் - இப்போது முதல் நான் சொல்கிறபடித்தான் கம்பெனி நடக்கும்!
அது தான் முடிவா?
அப்படியானால் நான் சொல்வதைக் கேட்டுக்கொள் துரை..! என் பணத்தில் ஒரு டாலர் நீ தொட்டால்கூட உன்னு டைய சப்பை மூஞ்சியை ஆற்றுப்படு கையில் தான் கண்டுபிடிப்பார்கள்!
வெளியே போடா நாயே!
அன்றுமாலை
நீ சொல்வ தெல்லாம் சரிதானா?
நிச்சயமாக இப்போது அவர்கள் அங்கு இல்லை! ஆனால் திரும்பி வருவார்கள்...
அவர்களுடைய குதிரைகள் வீட்டிற்கு பின்புறம் உள்ள லாயத்தில் இன்னும் உள்ளன! நீங்கள் விரும்பினால் நானும் உங்களுடன் வருகிறேன். அங்கு வசிக் கும் கிழட்டு பாப்லோ கூட வெளியே போய்விட்டான் - வீடு இப்போது காலியாகவே உள்ளது!
நோ!


இதை வைத்துக் கொள். யாரிடமும் வாயைத் திறக்காதே! மீண்டும் உன் உதவி வேண்டுமென்றால் நானே தேடி வருகிறேன்!
தேங்க்ஸ்! குட் பை!
அதன் பின்னர்...
சைத்தான்கள்! அவர்கள் இருவரும் திரும்பி வரட்டும் - சூடான வரவேற்பைத் தருவேன்!
அதே சமயம்- வீட்டினுள்
வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று வில்லர் சொல்லி யுள்ளார்! ஆனால் ரொம்பத் தாகமாக இருக்கே!
சட்டென்று நழுவிவிட வேண்டியது தான்... ஹேய்! யாரோ வருகிறார்கள்!
திறந்துதான் இருக்கு... இதுவும் நல்லதுதான்!
ஒரே இருட்டாக இருக்கு! குட்!
துரோகி மோர்டைமர் தான்!




அந்த ரேஞ்சரும் தடிப்பயலும் சாக இது சரியான இடம்தான்!
இப்படியே பூனைபோல் மெதுவாகச் செல்வதில் அர்த்தமில்லை.. கொஞ்சம் வெளிச்சம் தேவை!
தீக்குச்சி ஒன்றை எடுத்துப் பொருத்தி மெதுவாக வீட்டை நோட்டமிட்டான் மோர்டைமர்! அப்போது ரோபுல்ஸைப் பார்த்தான்...
ரோபுல்ஸ்! இருக்கவே முடியாது!
சில சமயங்களில் செத்தவர்களும் பழிவாங்க திரும்பி வருவர் ''மாஜி முதலாளி''!
எல்குர்வோவிடமிருந்து உனக்கு வாழ்த்துச் செய்தி கொண்டு வந்துள்ளேன் - இந்தப் பூமியில் அவன் இப்போது இல்லை. ஆனால் அவன் இருக்கும் இடத்திற்கு உன்னை அனுப்பப் போகிறேன்!
பேய் அல்ல!
டுமீல்! டுமீல்!


ஐயோ!
உயிர் பிழைக்க முடியாத காயம் அடைந்த போதிலும் மோர் டைமர் கஷ்டப்பட்டு துப்பாக்கியை எடுத்து இருளில் தெரிந்த ரோபுல்ஸ் உருவத்தின் மீது சரமாரியாகச் சுட்டான்..!
டுமீல் டுமீல் டுமீல்
துப்பாக்கி சப்தம்!
வீட்டிலிருந்து வருகிறது!
டுமீல் டுமீல் டுமீல் டுமீல்
ரோபுல்ஸ்! ரோபுல்ஸ்!
நீங்களா...? உள்ளே வாங்க மிஸ்டர் வில்லர்!
ரோபுல்ஸ்!
டாக்டரைக் கூப்பிடு பேட்! அப்புறம் ஷெரீபையும் வரவழை...
ரைட்!
மிஸ்டர் வில்லர்...



பீறிட்ட இரத்தத்தை தடுக்க முயன்றார் டெக்ஸ்...
அமைதியாய் இரு! நீ பிழைத்துக் கொள்வாய்...
அவன் உங்களைக் கொல்ல வந்தான்... ஆ!
போய் விட்டான்! என்றைக்கிருந் தாலும் மோர்டைமர் கையால்தான் இவன் சாக வேண்டும் என எழுதி இருக்கிறது...!
மறுநாள் காலை...
நடந்தது எதுவும் உங்கள் தவறு இல்லை வில்லர்! நான் ஏற்கனவே ஷெரீப்பிடம் பேசி விட்டேன். இதை ஒரு விபத்து என்றே பதிவு செய்வார்கள்...
...நம் இருவரைத் தவிர வேறு யாருக்கும் உண்மை தெரியாது. நஷ்ட ஈடைப் பொறுத்தவரை, பணத்தை தயார் நிலையில் வைத் திருக்கும்படி என்னுடைய வங்கியில் சொல்லி விட்டேன். அதை உங்களிடமே தரும்படியும் கூறி விட்டேன். எப்படி இருந்தாலும்...
கவலைப் படாதீர்கள்! இந்த விவகாரம் நிரந்தரமாக மூடப் பட்டு விட்டது!
தேங்க்யூ! மோர்டைமர்கள் ஒரு தவறு செய்து விட்டோம் - ஆனால் முடிந்த அளவிற்கு அதற்குரிய விலையைக் கொடுத்து விட்டோம். குட் பை வில்லர்!
குட் பை டாம்! சில நாட்களாக நீங்கள் சந்தித்த கசப்பான நிகழ்ச்சிகளை மறந் திட வரும் மகிழ்ச்சியான நாட்கள் உங்களுக்கு உதவும் என நம்புகிறேன்! குட் பை!
(முற்றும்)


அடுத்த
இதழ் முதல்...
சு/குட்டிப் புயல் டெனிஸ்...!
+
''பூசணித் தலை'' டைகர்...!
+
இயற்கையின் விந்தைகள்...!
+
''பாக்கெட் சைஸ்'' தாத்தா...!
புத்தம் புதிய பகுதிகள் அதிரடியாக ஆரம்பிக்கின்றன!
பார்க்கப் / படிக்க / ரசிக்கத் தவறாதீர்கள்!


குட்டிப் புயல்
டெனிஸ்!
டெனிஸ்.. நாள் முழுக்க என்னடா பண்ணிக் கிட்டிருந்தே கண்ணு?
ஒண்ணுமே
-மமா...!



இரும்பு மனிதன் "ஆர்ச்சி" தோன்றும்
விண் வெளி மோதல்!
விண்வெளியிலிருந்து வந்த மர்மப் பொருள் இந்தப் பாறைப் பகுதிகளின் அருகில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது விக்டர்!
டிசம்பர் 1993 பலோமர் குன்றின் மீதிருந்த ராட்சஸ விண்வெளி டெலஸ்கோப் விநோதமான தொரு பொருள் ஆளரவமற்ற யார்க்ஷைர் பகுதியில் தரையிறங்குவதைக் கண்டுபிடித்திருந்தது! அது என்னவென்று கண்டறிய ஆர்ச்சி குழுவினரைப் போலீஸார் வரவழைத்திருந்தனர்!
கவலையை எங்களிடம் விட்டு விடுங்கள் கர்னல்! விஷயம் என்ன வென்று நாங்கள் பார்த்து விடுகிறோம்!
யெஸ் ஆர்ச்சி இருக்கப் பயமேன்?
அரைமணி நேரம் சென்ற பின்பு...
ஆர்ச்சியை முன்னே அனுப்புகிறேன் தாம்சன் -ஏதாவது பிரச்சனையென்றால் சமாளித்துவிடும்!
வந்து விழுந்தது சாதாரணமான வின்கல்லாகத் தானிருக்கும் விக்டர்!
ஆனால் தாம்சனின் கணிப்பு தவறானது...
திட்டமிட்டபடி வந்து சேர்ந்து விட்டோம்! பூமியில் தரையிறங்கியுள்ளோம்!
அதோ - பூமியில் வாழும் ஒரு விநோதமான உயிரினம் தெரிகிறது! நாமும் அதே உருவத்திற்கு மாறி இந்தப் பூமியை வெற்றி கொள்வோம்!
உருமாற்றத்திற்குத் தயார் படுத்திக் கொள்ளுங்கள்!
கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அந்த அயல்கிரக ஜந்துக்கள் சிகப்பு வெளிச்சத்தில் மறைந்தன...



அதன் பின்பு
உருமாற்றம் கச்சிதமாக முடிந்து விட்டது! நாமும் பூலோகவாசிகளைப் போலாகி விட்டோம்! ஆக்கிரமிப்புப் படலத்தை இனித் தொடங்கலாம்! நான் முதலில் செல்லப் போகிறேன்!
ஐயையோ.. எங்கிருந்து வந்தன இத்தனை ஆர்ச்சிக்கள்?
அங்கே பார்! ஆர்ச்சி திரும்ப வருகிறது!
என்னது? ஆனால் அது இன்னும் மலைப் பகுதியில் இருப்பதாக வல்லவா என் டிரான்ஸ்மிட்டர் காட்டுகிறது!
பயல் அவனாகவே சிந்திக்க கூடிய நிலைக்கு வந்து விட்டானா?
ஆர்ச்சி பையா.. அங்கு என்ன கண்டுபிடித்தாய்? 'மடமட' வென்று ஒப்பித்துவிடு!
நண்பர்களுக்குக் கிடைத்ததோ வித்தியாசமான பதில்!
இவை - உலோகத்தாலான ஜந்துவின் அடிமைகளாக இருக்கலாம்!
குழப்பமும் வியப்பும் ஆட்கொள்ள நண்பர்கள் தட்டுத் தடுமாறி எழுந்தனர்...
ரோபோக்கள் - நூற்றுக்கும் அதிகமாக உள்ளதே! அத்தனையும் ஆர்ச்சி மாதிரியே...!
அங்கே கவனி! முன்னாடி நிற்கும் ரோபோ ஏதோ உத்தரவு போடுகிறது!
இந்தப் பள்ளத்தாக்கில் ஒரு நகரம் உள்ளது! அதைக் கவனிப்போம்! நம்மில் சிலர் நகருக்குள் வடக்குப் பகுதி வழியாக நுழைவோம்- மற்றவர்கள் தெற்குப் பகுதி வழியாக நுழைவோம்! கண்ணில்படும் பூலோக வாசிகள் எல்லோரையும் கொன்று குவியுங்கள்!
நீங்கள் சொன்ன படியே செய்கிறோம்!


விக்டர், ஆர்ச்சி போல உள்ள இந்த நூற்றுக்கணக்கான ரோபோக்கள், கிராமத்தையே தரைமட்டமாக்கி விடுமே! எப்படியாவது இவற்றைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்!
ஆனால், ஆர்ச்சியும் அந்தக் கும்பலில் கலந்து விடவில்லை என்பதை முதலில் உறுதிப்படுத்த வேண்டும்!
நோ - நம்ம ஆர்ச்சி இதோ வருகிறான்! அங்கே பார் - இன்னொரு விண்கலம்! அடுத்த கும்பல் வந்துவிட்டது
அதைவிட அருகே இருக்கும் புல்டோஸர் என்னுடைய கவனத்தை ஈர்க்கிறது! இப்போதைக்கு நமக்குத் தேவையான ஆயுதம் அதுதான்! ஆர்ச்சி அதை அருமையாக ஓட்டிச் செல்லும்!
அங்கே பார் விக்டர் - கிட்டத்தட்ட கிராமத்தை நெருங்கி விட்டனர்!
தாம்சன் எனக்கு ஒரு ஐடியா!
...ஆர்ச்சியைக் கொண்டு இந்த கற்குவியலை அவற்றின் மீது தள்ளி விடப் போகிறேன்!
அருமையான ஐடியா விக்டர்!
ஐயோ!
இந்த நிலமே நமக்கு எதிரியாக உள்ளது! நம்மைத் தாக்குகிறது!
அந்த ரோபோவை ஒழித்துக் கட்டுங்கள்!


ஆர்ச்சியை அடிப்பது போல் உள்ளது! சே!
அபாரம் தாம்சன்! அவர்களை நெருங்க விடாமல் செய்!
அவ்வளவு தான் ஆர்ச்சி! விளிம்பை நோக்கி அந்தக் கும்பலைத் தள்ளு!
ஆர்ச்சி மீது கை வைத்தால் கதி என்ன என்று இப்போது புரிந்திருக்கும்!
அப்படியே நிறுத்து ஆர்ச்சி! புல்டோஸரை பின்னோக்கிச் செலுத்தாவிட்டால் நாமும் கீழே போய்ச் சேர்ந்திடுவோம்...!
கண் கொள்ளாக் காட்சி! ரோபோ மழை பெய்கிறது!
கமாண்டர், இந்த நிலையில் உங்களுடைய புதிய உத்தரவு என்ன?
விண்கலத்திற்குத் திரும்புவோம்! நம்முடைய இரண்டாவது படையினர் பூமியினை அழிப்பார்கள்!
ஆனால் ஆக்கிரமிக்க வந்த இரண்டாவது படையை நோக்கி ஆர்ச்சி ஏற்கனவே புல்டோஸரை திருப்பி விட்டிருந்தது...
இறுக்கமாகப் பிடித்துக் கொள் தாம்சன்! ஆர்ச்சி தலை தெறிக்கும் ஸ்பீடில் ஓட்டுகிறது!
ஒரு நிமிடத்திற்குப் பின்...
ஐயோ!
மடேர்!
தொலைந்தோம்!


அப்படிப் போடு ஆர்ச்சி! இந்தக் காயலான் கடை இரும்புத் தலையன் களை அள்ளி மலையிலிருந்து கீழே கொட்டு!
பிளவுபட்ட ஆக்கிரமிப் பாளர்கள் பாதுகாப்புத் தேடி விண் கலத்திற்கு ஓடினர்...
பூமியில் வாழும் இந்த மூன்று ஆசாமிகள் மூவாயிரம் கமாண்டர்களைப் போலப் போரிடுகிறார்கள்!
நம்முடைய விண் கலத்தை அவர்கள் சின்னா பின்ன மாக்கும் முன்பு நாம் பறந்து விடுவோம்!
திகைக்கச் செய்யும் அந்தக் காட்சியைப் பார்க்கும் வகையில் நண்பர்கள் குழு சரியான நேரத்தில் வந்தது!
உருமாற்றக் கூடிய கருவியைப் பயன் படுத்துங்கள்! விண்கலத் திற்குள் நுழையும் முன்பு நம் முடைய உண்மையான உருவத் திற்கு மாற வேண்டும்!
அட ஆண்டவனே! அங்கே பார்! அந்த அயல்கிரக வாசி கள் தம்மாத்துண்டு ஜந்துகள் தான்! ஒரு அடி உயரம் கூட இல்லை!
எவ்வளவு தைரிய மிருந்தால் நம்முடைய பூமியை ஆக்கிர மிக்க முயன்றி ருப்பார்கள்? விக்டர், ஆர்ச்சியை சுதந்திரமாக விடு - ஒரு கை பார்க் கட்டும்!
நோ! அவர்கள் சரியான பாடம் கற்றுக் கொண்டனர்! இப்போது தலைதெறிக்க ஓடுகின்றனர். இனி இங்கு திரும்பி வருவார்களா என்பது சந்தேகம் தான்!
வேற்றுலக விண்கலம் இருளில் மறைந்து போகும் வரை ஆர்ச்சி குழுவினர் பார்த்துக் கொண்டி ருந்தனர்...!
பயல்களை அடித் துத் துரத்தியதற்கு ஆர்ச்சிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்!
உண்மைதான் தாம்சன்! ஆர்ச்சி கண்ணா - பதக்கம் குத்துவதற்கு உன் மீது இடமிருந்தால் மெடல்களாகக் குத்திவிடுவோம்!
ஆர்ச்சி மெடல் பிரியனல்ல...
(முற்றும்)

# ஓவியப் போட்டி



இந்த தடவை வெற்றி பெறும் வாசகி - ஓவியர் ➡

D. மாலினி,
D/o. Rev. E.S. தேவசகாயம்,
8. சிங்கார தோப்பு,
இராமநாதபுரம்.

இவருக்குப் பரிசாக ஒரு Sketch - pen செட் அனுப்பியுள்ளோம்!
எங்களது பாராட்டுக்கள்!

☎ 20649

# பிரகாஷ் பப்ளிஷர்ஸ்

தபால் பெட்டி எண். 374

**சிவகாசி**

## கைவசமுள்ள முந்தைய வெளியீடுகள்

### லயன் காமிக்ஸ்

| | |
|---|---|
| *வேங்கை வேட்டை* | ரூ. 3-50 |
| *முகமில்லா மாயாவி* | ரூ: 5-00 |
| *எதிரிக்கு எதிரி* | ரூ. 3-50 |
| *ராக்கெட் ரகசியம்* | ரூ. 3-50 |
| *இரத்தவெறியாகள்* | ரூ. 6-00 |
| *கானகக் கோட்டை* | ரூ. 3-50 |
| *கழுகு வேட்டை* | ரூ. 10/- |

### முத்து காமிக்ஸ்

| | |
|---|---|
| *ஒரு கைதியின் கதை* | ரூ. 3-50 |
| *சிங்கத்திற்கொரு சவால்* | ரூ. 3-50 |
| *பழி வாங்கும் பனி* | ரூ. 5-00 |
| *கொலையுதிர் காலம்* | ரூ. 3-50 |

### திகில்

| | |
|---|---|
| *திகில் லைப்ரரி* | ரூ. 10/- |

### மினி லயன்

| | |
|---|---|
| *விசித்திர ஹீரோ* | ரூ. 3-50 |
| *ஒரு காவலனின் கதை* | ரூ 3-50 |
| *மாயாஜால மோசடி* | ரூ. 3-50 |


அராஜகத்தை தொழிலாக வைத்துக் கொண்டு பிறரது இரத்தத்தையும், வேதனையையும் மூலதனமாக்கி பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளையும், புரட்சிக் கும்பல்களையும் வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஒரு கள்ளச் சந்தை வியாபாரியின் முகமூடியை கிழித்தெறியும் பொறுப்பு ஜேம்ஸ் பாண்ட் வசம் விடப்பட்டது...
மரண வியாபாரி!
007-சாகஸம்!
இலண்டன் பார்க் தெருவில் உள்ள இண்டர் நேஷனல் ஆர்மமென்ட்ஸ் கார்ப்பொரேஷன் தலைமை அலுவலகம்...
பார் வந்திருப்பதாகச் சொல்ல?
ஜேம்ஸ் பாண்ட்!
ஸார்..! மிஸ்டர் பாண்ட் என்றொருவர் உங்களை பார்க்க வந்திருக்கிறார்!
ஓ!.. பாண்டா? என்ன ஆச்சரியம்? அனுப்பு உள்ளே... உடனே அனுப்பு!


பாண்ட் என்றால்... ஏஜெண்ட் ஜேம்ஸ் பாண்டா?
ஆமாம்.. அவரேதான்!
ஆபத்தான ஆசாமியாயிற்றே! நீங்கள் அவனோடு உறவு வைத்துக் கொண்டிருப்பது நல்லதில்லையே!
மிஸ்லேயில் சுடும் பயிற்சியின் போது ஏற்பட்ட நெருக்கம் - குறி வைப்பதில் படு சமர்த்தர்!
ஆசாமி ஆபத்தான பேர்வழிதான்! - ஆனால் யாருக்கு? சமூக விரோதி களுக்குத் தானே..? உங்களுக்கு எதற்கு மனக்கிலேசம்?
இங்கே எதற்காக வந்திருக்கிறான்?
தெரியவில்லை! ஆனால் ஜேம்ஸ் பாண்ட் எது செய்தாலும் அதில் தெளிவான நோக்கு இருக்கும்!
ஹலோ... ஸார்!
வெல்கம்.. பாண்ட்! நாம் கடைசி யாக சந்தித்து இரண்டு வருடமாகி விட்டது.. இல்லையா?
எதையோ சாதித்துவிட்டு வந்திருப்பதான 'களை' முகத்தில் தெரிகிறது!
ஆமாம்.. இரண்டு தினங்களுக்கு முன்புதான் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பினேன்...


நன்றி!
புதிய ரேஞ்ச் சோதனைக்கு தயாராக உள்ளது என்பதை நினைவூட்டச் சொல்லியிருந்தீர்கள் ஸார்...
தப்பான தருணத்தில் வந்து விட்டேன் போலிருக்கிறது! போய்விட்டு அப்புறமாக வரட்டுமா?
அவசியமில்லை.. நீயும் என்னோடு தாராளமாக வரலாம்!
உனக்கு ஆட்சேபணை இல்லையே?
நிச்சயமாக இல்லை!
வா.. போகலாம்! ஆப்பிரிக்கா போயிருந்ததாகச் சொன்னாயே - எதையாவது வேட்டையாடினையா?
ம்ம்... - ஆனால் அது சற்று வித்தியாசமான 'வேட்டை'!
புரட்சியாளர்கள் அதிகாரத்தை கைப்பற்றிய போது நான் மொஸாம்பாவில் இருந்தேன்...
பேப்பரில் படித்தேன்... - சரியான வெறியாட்டம் - இல்லையா?
கள்ளச் சந்தை வியாபாரிகள் கலகக் காரர்களுக்கு தாராளமாக ஆயுதங் களை வாரி வழங்கியதால் வந்த வினை...
உ..உ...ண்மை..தான்! ஆங் - இங்கேதான்!


எப்படியிருக்கிறது?
தூள்..! - படு அட்டகாசம்!
ஆயுத விற்பனை மார்கெட்டில் ஏகப்பட்ட போட்டி... எங்களுடைய வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையில் உயர்மட்ட ஆசாமிகள்... எல்லா விதமான உபாயங்களும் அவசியப்படுகிறது அவர்களுக்கு!
வாடிக்கையாளர்கள் எங்களுடைய கைத்துப்பாக்கிகளின் திறனை இங்கே சோதித்தறியலாம்.. முரட்டு அயிட்டங்களானால் வெளி இடத்துக்குத்தான் போக வேண்டும்!
அதாவது.. நாட்டில் உங்களைப் போன்ற மொத்த வியாபாரிகள் ஒரு சிலரே என்று சொல்ல வந்தேன்!
ஆமாம்... விரல் விட்டு எண்ணி விடலாம்!
புஷ் மாஸ்டர் 458 மாக்னம் என்றொரு புதுரகம் வந்திருக்கிறது.. கையாண்டு பார்க்கிறாயா?
ஓ.. கொடுங்களேன்!


இலக்கை நான் டி.வி. திரையில் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
ஒரு டிகிரி பரப்புக் குள் பார்வைக் கோடு விழும் அளவுக்கு திருத்தியிருக் கிறோம்.
விசையை இழுத்தார் ஜேம்ஸ் பாண்ட்.. வழக்கம் போல குறி தப்பவில்லை!
கையாள வசதியாக இருக்கிறது அல்லவா? கூர்மையான ஈய முனை கொண்ட தோட்டாக்கள் பாயும் போது விளைவு படு பயங்கரமாக இருக்கும்!
இவ்வகை தோட்டாக்கள். எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று மொஸாம்பாவில் நேரில் பார்த் திருக்கிறேன்!
சரி.. விஷயத்திற்கு வருவோம்! இங்கே நீ வந்திருப்பதின் நோக்கம் என்ன பாண்ட்?
அங்குள்ள கலகக்காரர்களுக்கு யாரோ கள்ளச் சந்தையில் ஆயுதங்கள் வழங்கியிருக்கிறார்கள் மிஸ்டர் வில்லியம்ஸ்!
அந்த நபரை தேடித்தான் இவ்வளவு தொலைவு வந்திருக்கிறேன்.
படு ஆபத்தான சங்கதி! வா.. அலுவலகத்திற்குப் போய் மிச்சத்தை பேசுவோம்!
மொஸாம்பா கலகக்காரர்கள் பயன் படுத்தியது பிரிட்டிஷ் இராணுவத் தினரின் உபரி ஆயுதங்கள் என்கிறாயா நீ?
ஆமாம்! சப்ளை செய்த நபருக்கு 'மரண வியாபாரி' என்று செல்லப் பெயர் கூட உண்டு! இம் மாதிரி விவகாரங்களில் செல்வாக்கு மிக்க பெரும் புள்ளி!


அந்த ஆளைப் பற்றி மேலோட்ட மாக சில செய்திகள் என் காதிலும் விழுந்தது... பின்னணியிலிருந்து கொண்டு தொழில் நடத்தி வரும் அந்த நபரின் அடையாளத்தை கண்டறிவது சுலபமான காரியமாக படவில்லை!
கஷ்டமானதாக இருக்கலாம்... ஆனால் முடியாத காரியமல்லவே
இராணுவ உபரி ஆயுதங்கள் எப்படி வெளியே போயின என்ற விஷயத்தை ஆராய்ந்தால் நான் தேடி வந்த ஆளை தெரிந்து கொள்ள முடியலாம்.
மிஸ் ஹனிவெல்? காப்பி எடுத்து வாயேன்!
ஸ்பெஷல் பிராஞ்ச் கையாள வேண்டிய விவகாரம் இது என்பது என் கருத்து!
ஆனால் ஆசாமி உஷாராகி விடுவானே! காதும் காதும் வைத்தாற் போல் இரகசியமாக செயல்பட்டால்தான் கையும் களவுமாக பிடித்து கூண்டிலேற்ற முடியும்!
ஒத்துக் கொள்கிறேன்! எங்கே யிருந்து எப்படி ஒரு தொடக்கம் கொடுக்க விருக்கிறாய்?
பழைய இராணுவ ஆயுதங்கள்
செலாவணியாகும் வாடிக்கையா
முறை பற்றி விவரம் சேகரிக்கப்
போகிறேன்!
நான் சொல்கிறேனே - பாதுகாப்புத் துறையில் இதற்கென்று ஒரு விசேட பிரிவு செயல்பட்டு வருகிறது! தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரு சில முன்னணி ஆயுத வியாபாரிகளிடமிருந்து டெண்டர் கோருவார்கள். வந்த டெண்டர்களில் மிகச் சிறந்தது தெரிவு செய்யப்பட்டு வியாபாரம் நடக்கும்!
அவர்களுடைய கோப்புகளை பார்க்க முடிந்தால் ஏதாவது விஷயம் அகப்படலாம்!
வாய்ப்பில்லை! அனைத்து
'இரகசிய கோப்புகள்.' ஆனால்
கோப்புகளை பார்வையிடு
வாய்ப்பு உடைய ஒரு நப
எனக்குத் தெரியும்! அந்த
விவகாரங்களை தணிக்கை
செய்யும் அரசு ஆடிட்டர்



உங்கள் நண்பரா?
ஆமாம்! பெயர் - அலிஸ்டர்! வெகு காலமாக பழக்கம். நடு வயதை தாண்டியவர்.: ஆனால் கட்டை பிரம் மச்சாரி. வசதி படைத்தவர்.
எனக்கு ஒத்துழைப்பு தருவாரா?
தருவார் என்றே நம்புகிறேன்! ஏனெனில் அவர் தணிக்கை செய்யும் விவகாரங்களில் ஒரு கரும்புள்ளி இருக்கிறது என்று நீ புரிய வைத்தால் சுலபமாக வழிக்கு வந்து விடுவார்.
அறிமுக கடிதம் தருகிறேன். இந்தப் பிரச்சனை பற்றி என்னை விட தெளிவாக அவர் சொல்லக் கூடும்!
அதை பிடித்துக் கொண்டு நீ வழக்கில் முன்னேற வழி பிறக்கலாம்!
வோகிங்கிற்கு சற்று வெளியேதான் அவர் வசிக்கிறார். போனில் பேசி அப்பாயிண்ட்மெண்ட் வாங்கு கிறேன்... இன்று மாலையிலேயே நீ போய் அவரை சந்திக்கலாம்!
நல்ல ஏற்பாடு அப்படியே செய்யுங்கள்!
அன்று மாலையில் -
ஹ்ம்ம்.. ஆளைப் போலத்தான் வீடும் இருக்கிறது... பளிச்சென்று.. துப்புரவாக..
குட் ஈவ்னிங்.. என் பெயர் ஜேம்ஸ் பாண்ட்.... மிஸ்டர் அலிஸ்டர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடும்..
ஒகோ..! சரி.. உள்ளே வாருங்களேன்!


நானே சற்று முன்தான் வந்தேன்.. மிஸ்டர் அலிஸ்டர் உள்ளே இருப்ப தாக தெரியவில்லை.. ஆனால் எல்லாமே போட்டது போட்டவாறு கிடக்கின்றன...
அவசரமாக அருகே எங்கேயாவது போயிருப்பாரோ?
நான் மிஸ்டர் அலிஸ்டரின் செகரட்டரி - பெயர்.. ஜேன்!
யாரோ வாசலில் காலிங் பெல்லை அழுத்துகிறார்கள்.
ரிங்
யாரென்று தெரியவில்லையே! பொதுவாக அவரைத் தேடி யாரும் வருவதில்லை!
ஓ.!
குட் ஈவ்னிங் மிஸ்! ம்ம்.. மிஸ்டர் அலிஸ்டரின் நெருங்கிய உறவினர் கள்.. குறிப்பாக அவருடைய மனைவி இருந்தால் கூப்பிடுங் களேன்.. கொஞ்சம் பேச வேண்டும்!
மிஸ்டர் அலிஸ்டர் மணமாகாதவர்.. எனக்குத் தெரிந்த வரை அவருக்கு உறவினர் என்று யாருமே இல்லை.. நான் அவருடைய செகரட்டரி..! நான் ஏதாவது செய்யலாமா?
தெரியவில்லை.. மிஸ்! ஆனால் நீங்கள் என்னோடு சாலையில் கொஞ்ச தூரம் வந்தால் நல்லது.. ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்து விட்டது...
ஆக்ஸிடெண்டா?
யெஸ் ஸார்... மிஸ்டர் அலிஸ்டரின் கார் சாலையை விட்டு விலகி தலை குப்புற விழுந்து கிடக்கிறது..! பாவம் - அவருக்கு ஆயுள் அவ்வளவுதான் போலும்!



நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
ஸாரி... மிஸ்.. அவர் செத்து விட்டார்!
ஜேன்.. தைரியமாக இரு - நான் வேண்டுமானால் உங்களோடு வருகிறேன்!
பத்து நிமிடங்களுக்குப் பின் -
உங்களை தொந்தரவு செய்வதற்கு மன்னிக்க வேண்டும் மிஸ்... அடையாளம் காட்ட ஆள் தேவைப்பட்டது!
சற்று அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள்!
அவசியமில்லை - தேற்றிக் கொண்டு விடுவேன்!
இது எப்போது நடந்தது சார்ஜண்ட்?
ஒரு மணி நேரத்திற்கு முன் நடந்திருக்கலாம்.. ஆனால் நேரில் பார்த்த சாட்சி எவருமில்லை!
வளைவில் படு வேகமாக திரும்பியிருக்கலாம்.. கார் உருண்டபோது வெளியில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்.. கார் அவர் மீது விழுந்து.. ஹும்.. பரிதாபமான சாவுதான்!
குட் ஈவ்னிங்.. நான் - இன்ஸ்பெக்டர் டெலிஸன்! சி.ஐ.டி.! நான் கேட்கும் ஓரிரு கேள்விகளுக்கு உங்களிடமிருந்து பதில் வேண்டும்!
சி.ஐ.டி.! ஏதாவது குளறுபடியா - இன்ஸ்பெக்டர்?


ஆமாம்... சற்று வித்தியாசமான விபத்து.. உண்மையை கண்டறிய முயன்று கொண்டிருக்கிறோம்! சார் ஜண்ட் சொன்னார் - உங்களுக்கு இறந்த வரை தெரியாதாமே!
ஆமாம்..! இவரை சந்திக்கவே நான் இங்கே வந்தேன் - இருவருக்கும் பொதுவான ஸர் வில்லியம்ஸ் என்னும் நண்பரின் அறிமுகத்தின் பேரில்!
மிஸ் ஜேன்...! மிஸ்டர் அலிஸ்டர் ஏன் வெளிநாடு செல்ல இப்படி கிளம்பினார் என்று அவருடைய செகரட்டரியான உங்களுக்கு காரணம் தெரிந்திருக்குமே!
வெளி நாட்டுக்கா...?
இந்தப் பெட்டி காரில் இருந்தது..! உள்ளே எல்லோரும் வைத் திருப்பதுபோல் உடைகள் இருந்ததோடு, வித்தியாசமாக..
...ஆயிரம் பவுண்டுகளுக்கும் மேலாக கரன்ஸி நோட்டுகளும் இந்த ரிவால்வரும் இருந்தது!
எனக்கு ஒரேயடியாக குழப்புகிறது!
அவருடைய பாக்கட்டில் பாஸ் போர்ட்டும், ஜுரிச்சுக்கு இரவு விமானத்தில் பயணம் செய்ய ஒரு டிக்கட்டும் இருந்தன..
இதில் ஏதோ குளறு படி நடந்திருக்கிறது!


அப்படி நீங்கள் சொல்லக் காரணம்?
அவர் இப்படி முரண்பட நடந்து கொள்ளக் கூடியவரே அல்ல.. இன்று மாலையில் ஒரு குறிப்பிட்ட வேலை நிமித்தம் என்னை தன் வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார்...
ஆக.. விளக்கம் சொல்ல உங்களுக்கு முடியவில்லை... - சரி.. அவர் வித்தியாசமாக எதையாவது சொன்னாரா?
நான் குழப்பத்தில் இருக்கிறேன்.. ...... எதையுமே நினைவு கூற முடியவில்லை...
அப்படி எதுவும் சொன்னதாக தெரிய வில்லை.
ரொம்பவும் அதிர்ந்து போயிருக் கிறாள்.. இவளை நான் வீட்டுக்கு அழைத்துப் போகட்டுமா இன்ஸ்பெக்டர்!
ஓ.கே.. அழைத்துப் போங்கள் - உதவிக்கு நன்றி மிஸ்டர்!
அடுத்து?
வா.. அருகில் உள்ள ஒரு ஹோட்டலில் சூடாக ஏதாவது பருகி செல்வோம் - தெம்பாக இருக்கும்!
இருபது நிமிடங்களுக்குப் பின் -
இப்போது பரவாயில்லையா?
ம்ம்..! நன்றி.. மிஸ்டர்.. வந்து.. ஓ.. ஸாரி - உங்கள் பெயரை அதற்குள்ளாக மறந்து விட்டேன்..
பாவம் - அவ்வளவு அதிர்ச்சி உனக்கு...! பாண்ட் என் பெயர்!
ஓ..!



நீங்.. நீங்கள்.. பாண்ட் - என்றால்..? ஜேம்ஸ் பாண்ட் அல்லவே?
நான் ஜேம்ஸ் பாண்டேதான்!
நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேனு என்ன? இன்றைக்கு ஒன்றன் பின் ஒன்றாக எல்லாமே விநோதமாக சம்பவித்துக் கொண்டிருக்கின்றன..!
எல்லாமே என்றால்? வேறென்ன அப்படி வித்தியாசமாக நடந்தது இன்றைக்கு?
இன்ஸ்பெக்டர் கேட்ட போது நீ தயங்கியதை கவனித்தேன்.
சொல்வதா வேண்டாமா என்ற குழப்பம்... ஆனல் யாரிடமாவது சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு!
என்னை நீ நம்பலாம்!
இன்றைக்குக் காலையில் நான் ஆபீஸுக்கு வந்தபோது வழக்கத்திற்கு மாறாக எதையோ எண்ணி கலக்க மடைந்து போயிருந்தார் மிஸ்டர் அலிஸ்டர்..
நாத் ஆடோமேடிக்ஸிலிருந்து வந்த இந்த டெண்டரில் வித்தியாசமான ஓர் அம்சத்தை நீ கவனித்தாயோ?
இல்லையே ஸார்! ஒப்பந்தம் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை தவிர வேறென்ன விசேஷமாக இருக்கிறது?


இந்த காகிதங்களில் மடிப்பே இல்லை.. அதாவது இவை உறை யினுள் போடப்படவேயில்லை!
ஆச்சரியம்தான்! எல்லா டெண்டர்களும் முத்திரையிடப் பட்ட உறையினுள் வைத்து அனுப்பப் பட வேண்டும் என்பது நிபந்தனை.
ஏதோ ஊழல் நடந்திருக்கிறது... மற்ற தகவல்களை சரிபார்த்தால் உண்மை வெளிப்படலாம்!
ஆயுதங்களை வாங்கும் உரிமை அவர்களுக்கு தரப்பட்டிருக்கிறது... ஆனுல் ஆயுதங்கள் டெலிவரி செய்யப்பட்ட முகவரி வழக்கத்திற்கு மாறாக முன்பின் கேள்விப்படாத புதியதொன்றாக இருக்கிறது..
அத்தோடு - வழக்கமாக இரண்டு மாதம் கழித்து பணம் செலுத்தும் வசதியை கோரும் அந்தக் கம்பெனி இம்முறை உடனடியாக பணத்தை செலுத்தியிருக்கிறது...
அதிகார பூர்வ விசாரணைக்கு ஏற்பாடு செய்யப் போகிறீர்களா ஸார்?
அவசரப்பட்டு எதுவும் செய்து விடலாகாது..! நீ நாத் ஆடோமேடிக்ஸுக்கு போய் இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட கோப்புகளை பரிசீலனை செய்..
சற்று நேரத்தில் புறப்படுகிறேன் ஸார்!
நானும் பாதுகாப்புத் துறைக்குப் போய் மேலோட்டமாக விசாரிக் கிறேன்... இதுபற்றி காண்ட்ராக்ட்ஸ் பிரிவு அதிகாரி மிஸ்டர் வின்டரை சந்தித்து பேசுவதுதான் முறை!


சற்றைக்கெல்லாம் நாத் ஆடோ மேடிக்ஸுக்கு கிளம்பினேன்.. மிஸ்டர் அலிஸ்டரை நான் உயிரோடு பார்த்தது அதுதான் கடைசி..
ஓகோ..! சரி - நீ போன காரியம் என்ன ஆயிற்று?
மிஸ்டர் அலிஸ்டரின் சந்தேகம் உறுதிப்பட்டு விட்டது... அவர்கள் டெண்டர் அனுப்பவேயில்லை... அவர்கள் பெயரில் யாரோ பொய்க் கையெழுத்திட்டு டெண்டர் அனுப்பியிருக்கிறார்கள்!
மிஸ்டர் அலிஸ்டருக்கு உடனே நீ தகவல் கொடுத்தாயா?
சொன்னால் சிரிப்பீர்கள்..! நானே இதை துப்புத் துலக்கி நிஜத்தை கண்டு பிடித்தால் என்ன என்று தீர்மானித்தேன்!
மேலே சொல்..
நாத் ஆடோமேடிக்ஸ் டெண்டர் அனுப்பவில்லை.. எனவே ஆயுதம் வாங்கவில்லை - பணம் செலுத்த வில்லை! ஆனால் வேறு யாரோ இதை எல்லாம் செய்திருக்கிறார் கள். பாங்க் மூலமாக குறிப்பிட்ட செக்கை தேடிப் பிடித்தேன்!
நாதன் ஆடோமாடிக்ஸ் என்ற பெயரில் யாரோ கணக்கு ஒன்று ஆரம்பித்திருக்கிறதென்னவோ நிஜம்தான் மிஸ்...


ஆனால் அதில் இன்று வரை நடந்திருக்கும் ஒரே ஒரு வரவு - செலவு இந்த செக் மட்டுமே!
டெலிவரி செய்யப் பட்ட முகவரியில் போய் விசாரித்துப் பார்த்தாயா?
அங்கேயும் போனேன்... சௌத் இலண்டனில் இருந்த அந்த இடம் ஒரு பாழடைந்த கிடங்கு!
ஆமாம்.. இந்த இடத்தை சில வாரங் களுக்கு முன் ஒரு கம்பெனி நாலைந்து தினங்களுக்கு மட்டுமே பயன்படுத் தியது.. அவர்கள் காலி செய்துவிட்டுப் போன பின் இங்கே எலிகள்தான் நடமாடிக் கொண்டிருக் கின்றன!
தடயங்கள் எல்லாம் உருப்படாமல் போன பிறகு என்ன செய்தாய்!
மிஸ்டர் அலிஸ்டருக்கு போன் செய்தேன்... ஆனால் இந்த விஷயத்தை போனில் பேச அவர் விரும்பவில்லை.. எனவேதான், இன்று மாலை நான் அலுவலகத் திற்கு வந்தேன்!
நாம் இப்போது எங்கே போகிறோம் ஸார்!
ஹோட்டலுக்கு! சாப்பிட்ட பிறகு என் இருப்பிடத்திற்கு! இந்த விவகாரத்திலிருந்து உன்னை விலக்கி வைத்து பாதுகாப்பு தர வேண்டியது அவசியம் -எதிரி களின் நோக்கம் மற்றும் பலம் நமக்கு தெளிவாக தெரியும் வரையிலாவது - என்பது என் கணிப்பு!


அலிஸ்டரை திட்டமிட்டு யாரோ தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள். விவகாரம் வெளியில் வராமல் அப்படியே அமுக்கி விடுவது அவர்கள் நோக்கம் எனில் உனக்கும் ஆபத்து வரலாம்!
நான்... அந்தக் கோணத்தில் இது வரை சிந்திக்கவே யில்லை!
போலீஸுக்கு நாம் போனால் என்ன?
அதுதான் முறை! ஆனால் நான் ஏற்கனவே அலிஸ்டரை கொன்ற வனைத்தான் தேடிக் கொண்டிருக் கிறேன்! போலீஸுக்குப் போனால் காரியம் கெட்டு விடலாம்!
நீ சொன்ன தகவல்களிலிருந்து பாது காப்புத் துறையில் யாருக்கோ இதில் பங்கு இருப்பதாக தெரிகிறது. மிஸ்டர் வின்டர் மீது கவனம் செலுத்த தீர்மானித்துள்ளேன்!
மூன்று மணி நேரம் கழித்து ஜேம்ஸ் பாண்டின் இருப்பிடத்தில்...
யாராவது உன் மீது அக்கறை கொள்ளும் பட்சத்தில் உன் இடத்தை விட இது மிகவும் பாது காப்பானதாக இருக்கக் கூடும்!


டிராயரில் பைஜாமா இருக்கிறது.. எடுத்துக் கொள்.. பாத்ரூம் அதோ அங்கே இருக்கிறது.... சமாளித்துக் கொள்வாய் என்று நினைக்கிறேன்...
ஓ.. ஷ்யூர்! வசதியான அறை!
உள்பக்கமாக தாழ்ப்பாள் இருக்கிறது.. போட்டுக் கொண்டு நிம்மதியாக தூங்கு!
நன்றி.. ஸார்!
தாழ்ப்பாள் பற்றி ஏன் அவ்வளவு அக்கறையாக சொல்லிவிட்டுப் போகிறார்?
மறுநாள் காலையில்...
நன்றாக தூங்கினாயா?
ம்ம்... வெகு ஜோராக! மிஸ்டர் விண்டரை சந்திக்க நாம் இன்று செல்கிறோமா?
நாம் அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடலாம்.. இன்று மாலை அவர் அலுவலகத்தை விட்டு புறப்படும்போது நாமும் பின் தொடர்ந்து சென்று என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம்.. பகல் பொழுதில் ஓய்வாக நாம் ஊரை சுற்றி வரலாம்... என்ன சொல்கிறாய்?
அருமையான ஐடியா!
பகல்பொழுது வேகமாக கழிந்தது...



மாலை மணி 5.30...
அதோ.. டாக்ஸியை அழைக்கிறாரே அந்த நபர்தான் மிஸ்டர் வின்டர்!
அவரை பின் தொடரப் போகிறோமா?
ஆமாம்..! அவருக்கு நாம் வருவது தெரியவே கூடாது!
அந்த டாக்ஸி பல மைல் தொலைவை விழுங்கிச் சென்றது. பின்னர்...
ஆடம்பர மாளிகை..! வின்டருக்கு இங்கே என்ன வேலை இருக்க முடியும்?
இங்கே வசிப்பது யார்?
நபர் இன்னாரென்று தெரிய வில்லை... ஆனால் இந்த மாளிகை பற்றி சமீபத்தில் செய்தித் தாள்களில் ஏதோ செய்தி வந்திருந்ததாக ஞாபகம்!
முப்பது நிமிடங்கள் கழிந்த பின்...
ஓ - ஹமீது! பேப்பரில் படித்தது இப்போது ஞாபகம் வந்துவிட்டது. அவர் தான் அந்தப்புரமாக இதை வைத்திருக்கிறார்!


யார் ஸார் அந்த ஹமீது?
அரேபியாவில் வளம் கொழிக்கும் எண்ணெய் கிணறுகளுக்கு சொந்தக் காரர்.. இங்கே அரசாங்கத்தோடு வியாபார பேரம் பேச வந்திருக்கிறார்..
..வந்த இடத்தில் இரகசியமாக ஏகப் பட்ட ஆயுதங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுகிறார் என்றால் இதில் ஏதோ சூது இருக்க வேண்டும்.
ஷேக்கின் ரோல்ஸ் ராய்ஸ் காரை அவர்கள் பின் தொடர்ந்தனர்... பரப ரப்பான நகர் பகுதியை தாண்டி சந்த டியற்ற துறைமுக பகுதியினுள் பிர வேசித்த பின் முன்னால் சென்ற கார் வேகம் இழந்தது...
அவர்களுடைய கார் நிற்கப் போகிறது..! நாம் காரை இங்கேயே நிறுத்திவிட்டு மிச்ச தூரத்தை கால் நடையாக கடப்போம்..
அந்த கிடங்கினுள் என்னதான் நடக்கிறது என்று நான் ஆராயப் போகிறேன்... நீ திரும்பிச் சென்று காரில் காத்திரு!
சே.. உள் பக்கமாக தாழிடப் பட்டிருக்கிறது!


ஜேன்..! இன்னுமா நீ போகவில்லை?
ஸாரி.. ஸார்! என் கண்ணில்பட்ட ஒரு விஷயம் உங்களுக்கு உதவிகர மாக இருக்கும் என்று தோன்றியது!
அதோ.. அவசர வழி படிக்கட்டு பெயிண்டரின் கூண்டு வரை போகிறது பாருங்கள்.. அந்தக் கூண்டை தேவையான அளவு கீழிறக்கி ஜன்னல் வழியாக நாம் உள்ளே நோட்டம் விடலாமே!
சபாஷ்.. ஜேன்! அருமையான யோசனை! வா.. போகலாம்!
சற்றைக்கெல்லாம் -
உள்ளே அவர்கள் இருப்பது தெரிகிறது ஸார்... ஆனல் பேசுவதைத்தான் கேட்க முடிய வில்லை!
அதற்கெல்லாம் நான் தயாராகத் தான் வந்திருக்கிறேன் -
இப்போது பாரேன்!
கேட்கிறதா...?
பிரமாதம்.. மிஸ்டர் விண்டர்! என் அக்கறை எல்லாம் டெலிவரி பற்றித்தான்!


அதில் பிரச்னை ஏதும் வராது.. ஸாஹிப்! மொத்தச் சரக்கும் நாளை இரவு மிஸ்டர் மெயரின் வீட்டிற்கு அனுப்பப்பட்டு விடும்.
அவருடைய வீடு கடலை ஒட்டி இருக்கிறது... உங்களுடைய படகுக்கு வழிகாட்ட ஒரு ஆளை ஏற்பாடு செய்கிறேன். சரக்கை ஏற்றிக் கொண்டு இரவோடிரவாக நீங்கள் நழுவி விடலாம்!
கேட்டவரை போதும்.. ஜேன்! அதிர்ஷ்டம் வெகுவாக நம் பங்கில் இருக்கிறது.. வா போகலாம்!
அடுத்து எங்கே போகிறோம்.. ஸார்!
உன் வீட்டிற்கு..! நீ உன் துணிமணிகளை மூட்டைக் கட்டிக் கொண்ட பின் உன்னை ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப் போகிறேன்!
ஹோட்டலிலா...? அதற்கு என்ன அவசியம் வந்தது இப்போது?
அடுத்த சில நாட்களுக்கு நீ அங்கே இருப்பதுதான் பாதுகாப்பு!


ஜேனின் வீட்டில்...
இன்னமும் அவள் வரக்காணோமே காத்திருந்து காத்திருந்து அலுத்து விட்டது எனக்கு..! மெயர் இவள் மீது அக்கறை கொள்ள காரணம் எனக்குப் புரியவில்லை!
மோசடி பற்றி அவளுக்கு ஓரளவு தெரிந்து விட்டது என்று நினைக்கிறார்...
நாள் கணக்கில் அவள் இங்கே வராம லிருந்து விட்டால்?
கவலைப்படாதே - அதோ வந்து விட்டாள்! அவளோடு யாரோ ஓர் ஆசாமி ஒட்டிக் கொண்டிருக்கிறான்..!
முதலில் அவனை கவனிப்போமா?
கலாட்டா பண்ணி விடாதே - காதும் காதும் வைத்தாற் போல் காரியத்தை முடிக்க வேண்டும் என்று மெயர் சொல்லியிருக் கிறார்.
விவாதம் பண்ணிக் கொண்டிராமல் போய் உன் உடைமைகளை மூட்டை கட்டுகிறாயா.. அல்லது உனக்குப் பதில் நான் செய்யட்டுமா?
அதிகாரமா?
நான் போய் துணி மணிகளை எடுத்து வைக்கிறேன்..
நீங்கள் டிரிங்க்ஸ் தயார் பண்ணுங்கள்.. ப்ளீஸ்!
ஓ.கே..!


உனக்கும் ஐஸ் போடட்டுமா?
ப்ளீஸ்!
வேலை முடிந்ததா ஜேன்? டிரிங்க்ஸ் ரெடி... வா!
என்ன ஆயிற்று... உனக்கு? பதிலைக் காணோம்?
ஜேன்..!
சீஃப் இன்ஸ்பெக்டர் டில் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டார்...!
பாண்ட்...! நிஜம்தானா நீ சொல்வது? என்னால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை!


ரொம்ப பெரிய விவகாரம்.. கூடுதலாக இப்போது ஒரு பெண்ணுடைய உயிர் கேள்விக் குறியாகிவிட்டது! உடனடியாக நாம் செயல்பட வேண்டிய நெருக்கடி.. தூக்கக் கலக்கத்தை உதறி விட்டு நான் சொல்வதை கொஞ்சம் கவனமாக கேளுங்கள்!
மளமள வென்று ஜேம்ஸ்பாண்ட் பிறப்பித்த உத்தரவுகளை இன்ஸ்பெக்டர் ஏற்றுக்கொள்ள போலீஸார் வேகமாக செயலில் இறங்கினர்.
மறுநாள் காலை.. ஸ்காட்லாண்ட் யார்டில் -
நேற்றிரவு நீங்கள் செய்த அபாரமான காரியத்திற்கு என் பாராட்டுக்கள் மிஸ்டர் டீல்!
நன்றி.. ஸார்!
ரொம்ப பெரிய மனிதர்கள் சம்பந்தப் பட்ட விவகாரம்.. உள் துறை செயலருக்கு நேரடி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அடுத்து உங்களுடைய நடவடிக்கை என்ன என்பது பற்றி சுருக்கமாக சொல்லுங்கள்.. கேட்போம்!
ஆயுதங்கள் பத்திரப்படுத்தப் பட்டிருக்கும் கிடங்கிற்கு சென்று ஆயுதங்களை அகற்றிவிட்டோம்.. பதிலுக்கு காயலான் கடை குப்பை களை நிரப்பி பெட்டிகளை முன்போல் வைத்துவிட்டு வந்திருக்கிறோம்.
இன்றிரவு அந்தப் பெட்டிகள் கைமாறும் என்பது உங்கள் கணிப்பு - இல்லையா?
யெஸ்.. ஸார்! கிடங்கை கண் காணிக்க ஏற்பாடு செய்திருக் கிறேன். அழைத்தவுடன் ஓடோடி வர அதிரடிப்படை ஒன்றை தயார் நிலையில் வைத்திருக்கிறேன்.
ஏற்றிச் செல்ல வரும் லாரியை பின் தொடர்ந்து சென்று போய்ச் சேரும் இடத்தை தெரிந்து கொள்ளப் போகிறீர்கள், அப்படித் தானே?


யெஸ்.. ஸார்!
நீங்கள் நினைப்பது போல் ஷேக் ஷமீது இதில் சம்பந்தப்பட்டிருக்கும் பட்சத்தில், விவேகத்தோடு செயல் பட வேண்டியது அவசியம்...
கணிப்பு தப்பாகிப் போனால் அரசுக்கு தலைக்குனிவு ஏற்பட்டு உங்கள்பாடு ஆபத்தாகிவிடலாம்.. ஜாக்கிரதை!
அன்று மாலையில்...
இப்போது வந்த தகவல் இது ஸார் - பத்து டன் திறனுள்ள ஒரு லேலாண்ட் லாரி.. பதிவு எண் GHM 806 D அந்த கிடங்கை விட்டு சற்று முன் கிளம்பி கிழக்குத்திசையில் போகிறதாம்!
எல்லா ரோந்து வாகனங்களையும் உஷார்படுத்து!
அடுத்தடுத்து அறிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன...
இலண்டனை விட்டு வெளியேறி Al2 கால்செஸ்டர் சாலையில் போய்க் கொண்டிருக்கிறது ஸார்...
எஸ்ஸெக்ஸ் கடற்கரையோரம் ஏதாவது ஒரு இலக்கை நோக்கி அது விரையக்கூடும். நாமும் போகலாம் - கிளம்பு!
ஜேம்ஸ் பாண்டின் யோசனைக்கு நான் தலையசைத்தது தப்போ என்று இப்போது உறுத்துகிறது... ஏதாவது அசம்பாவிதமாகி விட்டால் பழி பாவம் எல்லாம் எனக்குத்தான்!
அப்படி என்ன சிக்க லில் அவர் இப்போது மாட்டிக் கொண்டிருக் கிறார் ஸார்?
அந்த லாரியில் உள்ள பெட்டிகளில் ஒன்றின் உள்ளே பதுங்கி கிடக் கிறார்.. பைத்தியக்காரத்தனமான காரியம்தான் என்றாலும் ஒரு பெண்ணின் உயிரை காப்பாற்ற இப்படியொரு சூழ்ச்சி அவசியம் என்று வாதாடினார். நானும் சரி சொல்லிவிட்டேன்!


பின்னர் - எஸ்ஸெக்ஸ் சதுப்பு நிலப் பரப்பில் தனித்து நின்ற மெயரின் வீட்டில்...
லாரி அதோ வந்து விட்டது மிஸ்டர் மெயர்!
வெரிகுட்..! பெட்டிகளை உடனடியாக இறக்கி வைக்கச் சொல்!
ஷேக் சீக்கிரம் வந்து சேர்ந்தால் நல்லது... இந்த விவகாரம் இத்தோடு ஒரு முடிவுக்கு வந்தால்தான் நமக்கு நிம்மதி!
பதறாதே விண்டர்.. ஷேக் சொன்னபடி நேரத்திற்கு வந்துவிடுவார்!
லாரி எங்கே?
அந்த கேட் வழியாக நுழைந்தது ஸார்.. இதை தாண்டிப் போனால் எதிரிகள் பார்த்து விடலாம் என்பதால் இங்கேயே நின்று விட்டோம் ஸார்..
எல்லோரையும் ஆயத்த நிலையில் நிறுத்து.. நான் உத்தரவிட்டதும் புலிப் பாய்ச்சலாக பாய வேண்டும் என்று சொல்.
சரி.. ஸார்!
அங்கே -
ஷேக் அவர்களே.. வருக.. வருக.. தங்கள் வரவை எதிர்பார்த்து மிஸ்டர் மெயர் காத்துக் கொண்டிருக்கிறார்!


ஆசாமி வந்து விட்டார்! பிரியமாக நடந்து கொள்!
பணக்காரர் ஆயிற்றே.. நீங்கள் சொல்லவே வேண்டாம்!
வணக்கம் நண்பர்.. மெயர்! சரக்கு ரெடியாக இருக்கிறதல்லவா?
ஓ.. ரெடி! அதற்கு முன் என் உபசரிப்பை நீங்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ள வேண்டும்!
அழகான துப்பாக்கி.. அட்டகாசமான பெண்.. ஆகா.. என்ன ஒரு பொருத்தம்! - கிளர்ச்சியூட்டுகிறது..!
ரைபிளை என் அன்புப் பரிசாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!
பெண்கள் விஷயத்தில் நீங்கள் பரம ரசிகர் என்று கேள்விப்பட்டேன். எனவே, இன்னொரு பரிசையும் தந்து அனுப்ப எண்ணியுள்ளேன்!
உங்கள் அந்தப்புரத்தை அலங்கரிக்க.. அதோ - ஒரு புது மலர்!
ஆகா..! உங்கள் தாராளத்தை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை எனக்கு!
வெளியே -
குட்..! இங்கே யாருமே இல்லை...! அரிய வாய்ப்பு.. நான் விரைந்து செயல்பட வேண்டும்!


நீங்கள் வழங்கியுள்ள ஆயுதங் களும் அழகிய பெண்ணும் எனக்கு முழுத்திருப்தி யளிக்கின்றன... பணத்தை பிடியுங்கள்!
அப்போது
பெண்ணை பார்த்தீர்கள்.. சரி - ஆயுதங்களை பார்த்தீர்களா?
ஏய்.. யார் நீ?
ஜேம்ஸ் பாண்ட் என்று என்னை அழைப்பார்கள்!
ஆயுதங்களை நான் பரிசீலனை செய்ய வில்லைதான்... அதில் என்ன கோளாறு என்று நீ நினைக்கிறாய்.. சொல்!
பிடியுங்கள் அவனை!
பொறுங்கள்..! அந்த ஆளோடு நான் கொஞ்சம் பேச வேண்டும்!
பெட்டிகளுக்குள்ளே இருப்பது ஆயுதங்களே அல்ல.. திறந்து பாருங்கள்.. உண்மை விளங்கு
ஏதேதோ உளறு கிறான் - பைத்தியக் காரன்.
சோதித்துத்தான் பார்ப்போமே!
பெட்டியை திறங்கள்!
இதோ..!
நானே திறந்து காட்டுகிறேன்..!




மெயர்... என்ன பித்தலாட்டம் இது?
வந்து.. வந்து.. எங்கோ.. குளறுபடி -
நான் சொன்னேனில்லையா?
விடாதீர்கள் இவர்களை!
சதக்!
டுமீல்!
துப்பாக்கி முழக்கம்! பாண்ட் ஆட்டத்தை துவக்கி விட்டதாக தோன்றுகிறது!
வா.. உள்ளே போய் பார்ப்போம்!



போலீஸ்!
வா.. ஓடிப் போய் விடலாம்!
நான் குறுக்கே புகுந்து ஏதேதோ குளறுபடி பண்ணிவிட்டேன்.. ஸாரி..
ஆனால் என் பணம் விரயமாவதை தடுத்து விட்டாய்... நன்றி! வந்ததற்கு நான் வெறுங்கையோடு போகப் போவதில்லை.
என் அழகிய வண்ணப் புறாவே வா...
மெயருக்கு இனி செகரட்டரி தேவைப்படாது.. ஆனால் எனக்கு ஒரு ஆண் துணை அவசியம்..
இனியும் நான் இங்கே பொழுதை வீணடித்துக் கொண்டு நிற்கத் தேவையில்லை.. விடை பெறுகிறேன்!
அதற்கு முன் இந்த சிறிய பரிசை என் நன்றிக் காணிக்கையாக தரு கிறேன்.. ஏற்றுக் கொள்ள வேண்டும்!


குட் பை..!
குட் பை..!
நாம் என்னவோ ஏதோ என்று பதறிக் கொண்டு வந்தோம்.. ஆனால் பயல் பத்திரமாக இருக்கிறான்.. ஒரு பெண்ணை கொஞ்சிக் கொண்டு!
ஹலோ.. ஸார்.. சினிமாவில் வருவது போல் எல்லாமே நடந்து முடிந்த பிறகு ஹாய்யாக வந்து சேர்ந்திருக்கிறீர்கள்.
உன் 'தோழர்கள்' யாரெல்லாம்?
அரசு அதிகாரி வின்டர் மற்றும் நான் தேடி வந்த 'மரண வியாபாரி' மெயர்!
ஓ.. அப்படிப் போகிறதா கதை!
விஷயம் வெளியே தெரிந்தால் அசிங்கமாகிவிடும் என்று கருதுகிறது உன்நாட்டு அமைச்சகம்.. எனவே, சம்பந்தப்பட்ட ஃபைல் வெளிச்சத்தை பார்க்கப் போவதில்லை.. ஆக, முறைப்படி உனக்கு வாய் வார்த்தையாகக் கூட யாரும் பாராட்டி நன்றி சொல்லப் போவதில்லை பாண்ட்!
இது கொஞ்சம் கூட நியாயமில்லை...! பாண்டின் சாதனை அபாரமானது..!
போகிறது விடு.. டார்லிங்.. இந்த ஆறுதல் பரிசோடு நாம் திருப்தியடைவோம்!


உள்ளே என்ன இருக்கிறதோ.. தெரியவில்லை!
ஓ.. மை காட்.. கண்ணைப் பறிக்கும் வைரங்கள்!
இது எப்படி உன் கைக்கு வந்தது.. பாண்ட்?
உங்கள் ஃபைலைத்தான் முடிவு கட்டி தூக்கிப் போட்டு விட்டீர்களே - எதுவுமே நடக்காத மாதிரி..! அப்புறம் நான் எதற்கு உங்கள் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்?
கொதிப்படையாதீர்கள்.. உடம்புக்கு ஆகாது ஸார்!
பஹாமா போய்ச் சேர்ந்ததும் அவசியம் உங்களுக்கு ஒரு போஸ்ட் கார்ட் போடுகிறேன் இன்ஸ்பெக்டர் - நாங்கள் வருகிறோம்!


ஒரு ப்யானோவின் கதை!


டுமீல்
டுமீல்
எய்.. யிய்..
மெள்ள
மெள்ள –
இப்பிடி சடன்
பிரேக்
போட்டா
எப்படி..?
இந்தப் பக்க
மிருந்துதான்
கேட்டது –
துப்பாக்கி
முழக்கம்!
வாஸ்தவம்!
ஆ.. நாம
விலகித்தானே
போய்க் கிட்
டிருக்கோம்!
ஐயோ பாவமே.. ஒத்தை
வண்டி எக்கச் சக்கமா
மாட்டிக்கிட்டுது – செவ்
விந்தியர்கள் கிட்டே! வா..
அங்கே போகலாம்!



யா.. ஹா-ஹா..
யி..ஹா.. ஈஈ..
?
!
?
வாங்க.. ஓடிப் போயிடலாம்!



ப்ளானகன் என் பெயர்.. ரிவர் ப்யூப்லோ மதுபானக் கடை முதலாளி.. உன் னோட அறிமுகம் கிடைச் சதிலே மெத்த மகிழ்ச்சி
வண்டியை இழுத்துக் கிட்டு வேகமா போக முடியாது.. வண்டியை கழற்றி விட்டுட்டு குதிரை யிலே ஏறிக் கொள்ளுங்கள்.
மத்தவங்களையும் கூட்டிக் கிட்டு செவ்விந்தியர்கள் எந்த நேரமும் திரும்பி வந்து சேரலாம்!
ஆனா.. வண்டியை அப்படி அம்போன்னு விட்டுட்டு வர முடியாதே!
அப்படி என்ன இருக்கு வண்டியிலே?
உள்ளே பாரேன்!


கொஞ்சம் பொறுமையா கேளுப்பா! என்னோட ஆஸ்தி மொத்தத்தையும் மதுபானக் கடையிலே போட்டு வச்சிருக்கேன்.. வர்ற வாடிக்கை ஆளுங்க கடையிலே இசை முழக்கம் இல்லாம ரொம்ப போர -டிக்குதுன்னு குறைப் பட்டுக்கிறாங்க..
ஊஹூம்.. உனக்கு அந்த ஊர் ஜனங்களைப் பத்தி தெரியாது! என் வியாபாரம் ஒரேயடியா படுத்துப் போயிடும்.. சரி தம்பி.. நான் என் வழியிலே போறேன்.. நீ உன் வழியிலே போ..
அவரை இப்படி தனியா போக விடக் கூடாது.. ஜாலி ஜம்பர்!
நானும் அதையேதான் நெனைச் சேன்ப்பா!


ஐயோ.. வர்றாங்க!
ப்ளானகன்.. டாப் ஸ்பீடுலே விடுங்க!


மடேர்!
?
ஙே..! இந்த ஆளு எப்போ குதிச்சான்? அது தெரியாம நான் பாட்டுக்கு ஓடிக்கிட்டிருக் கேன்!


குபீல்!
குபீஸ்!
ராட்சஸர்கள்..! இந்தச் சில்லறையை வச்செல்லாம் அவங்களை வழிக்கு கொண்டாற முடியாதுப்பா!
உங்க பியானோவை பாட வைக்கத் தான் காசு கேட்டேன்!


மிரண்டு ஓடுறாங்க பாருங்க
என்னோட வாடிக்கையாளர்களும் இப்படி ஓடிடக் கூடாது!
செவ்விந்தியர்களுக்கு தெரிஞ்ச மியூஸிக் எல்லாம் போர் முரசும் கால்நடை பிரிவின் பீப்பீ.. சப்தமும் தான்.. இன்னிசை முழக்கம் அவங்களுக்கு பழக்கப் படாதது..


வண்டியிலே ஒரு சக்கரம் உடைஞ்சிட்டுது.. எப்படி பியானோவை கொண்டு போறது?
!
இதோ பாரும்.. பியானோ பியானோன்னு சொல்லிக் கிட்டு இங்கே நின்னா உயிர் போயிடப் போறது.. சொல்லிப்புட்டேன்!
ஹூம்.. என் கவலை எனக்கு... நீ வேணுமானா கிளம்பு - நானு ஏதாவது பண்ணப் பார்க்கிறேன்!
பரவா யில்லை.. முன் பகுதியை பிரிச்சு எடுத் திடலாம்.. ஒரு கை பிடிங்க!
சற்று நேரம் கழித்து -
இந்த பள்ளத்தாக்கு பகுதியை விட்டு எவ்வளவு சீக்கிரம் வெளியேறுகிறோமோ அவ்வளவு நல்லது.. வேகமா விடுங்க!



இந்த மலையை எப்படி கடக்கிறது.. எக்கச் சக்கமா மாட்டிக் கிட்டோம்!
பதறாதீங்க.. குதிரையை கழற்றி விட்டுடுங்க!
செவ்விந்தியர்கள் வர்றாங்களான்னு... பார்த்துக் கிட்டு இங்கேயே நில் லுங்க.. நான் ஒரு வழி பண்றேன்.
சமர்த்துடா.. நீ சமாளிச்சு ஏறிடுவே!
வாஸ்தவம் தாம்பா..! மரத்திலே ஏறுறதைவிட சுளுவாத்தான் இருக்கு!
ம்ம்.. ஒரு தம் பிடிச்சு ஏறு..! முடிஞ்ச மாதிரிதான்!
இங்கேர்ந்து பார்த்தா சுற்று வட்டாரம் கண்ணுக்கு குளுமையா எவ்ளோ அழகா இருக்கு!
ஹலோ.. ப்ளானகன்..! இந்தக் கயிற்றை உங்க பியானோ வோட பிணையுங்க!


கமான்.. ஜாலி - இழு!
அதோ.. செவ்விந்திய கூட்டம் வருது சீக்கிரம் இழுப்பா!
ஊய்ய்.. ஒரு செகண்ட் தாம தித்தாலும் கொன்னு ருப்பாங்க!
ஆமா.. நாம பொழைச் சோம்.. ஆனா உங்க பியானோதான்
இந்த அதள பாதாளத்தை நாம தாண்டணும்!


இந்த பியானோ இல்லாமல் நான் ரிவர் ப்யூப்லோ போனா என்னோட வாடிக்கையாளருங்க மன்னிக்கவே மாட்டாங்க.. கடையை நொறுக்கி தூள் பண்ணிடுவாங்க!
சரி.. பியானோவை என்னோட குதிரையிலே ஏற்றிடலாம் - வாங்க!
ஏற்றி..?


சரியா இருக்கா.. ஜாலி?
ம்ம்.. ம்ம் - ஆனா இதெல்லாம் நமக்குத் தேவைதானா?
கயிறு உறுதியா இருக்கில்லே?
மூக்கிலே நமைச்சல் எடுக்குது.. இப்போது தும்மி னேன்னா தொலைஞ் சேன்!
ஆனா வழியிலே இன்னொரு ஆறு குறுக்காலே இருக்கே!


விரைவில்-
பேனு கத்தியாலே மரத்தை வெட்டறது கஷ்டமா இருந்திச்சு.. ஆறு ஆத்தங்கரையிலேயே மரங்கள் இருந்திட்டது நம்மோட அதிர்ஷ்டம்தான்!
நீரும் உம் அதிர்ஷ்டமும்.. உம்மை சந்திச்சதிலேர்ந்து நான் படறபாடு எனக்கில்லே தெரியும்!
ஏற்கனவே எனக்கு ஜலதோஷம்.. நிமோனியா வந்திடுமோன்னு பயம்மா இருக்கு!
மறுபடியும் ஜாலி மேலே பியானோவை ஏற்றிடலாம்.. வாங்க!
கோவிச்சுக்காதே.. இன்னும் கொஞ்ச தூரம்தாம்ப்பா!
பின்னர் -
ஹேட.. பசங்களா.. ப்ளானகன் சொன்ன மாதிரியே ஒரு பிளேயர் - பியானோ கொண்டாந்திட்டார்!
வாங்க.. எல்லோரும் அவரோட கடைக்கு ஓடுவோம்!



அடடா.. பியாஞேவின் இசை முழக்கம் எழத் தொடங்கியதும் அங்கே தான் என்ன ஒரு ஆர்ப் பாட்டம்... அமளி.. கொண்டாட்டம்..! எக்கச் சக்கமான வியாபாரம்.. எல்லோருக்கும் ஏகப்பட்ட குஷி..
லக்கி லூக்கின் நலத்திற்கு இது..!
இது - பியா ஞேவுக்காக!
குடித்து முடித்த கும்பல் வழக்கம் போல குஸ்தியில் இறங்கியது.
கலாட்டா தொடர்ந்த போது..
..தனிமை என் வாழ்க் தனிமை என் துணைவ

நண்பர்களே,



'லயனின் மைனஸ் பாய்ண்ட்ஸ்' பற்றிய சர்ச்சையில் - "வாசகர்களிடமிருந்து படைப்புகள் ாதுவும் லயனில் ஏற்றுக் கொள்வதில்லை" என்று நிறையப் பேர் புகார் செய்திருந்தார்கள்!

நிஜமான இந்த complaint ஐ நிவர்த்தி செய்ய - இனி வாசகர்களுக்கென பக்கங்கள் ஒதுக்கத் யாராக இருக்கிறேன்! ஆனால் -வழக்கமான கவிதைகள், கட்டுரைகள், விடுகதைகள் வேண் ாமே..! சின்னச்சின்ன ஜோக்குகள் - நீங்களாக உருவாக்கும் கார்டூன்கள் போன்றவற்றை அனுப் ங்கள்! பிரசுரமாகும் ஒவ்வொரு படைப்புக்கும் பரிசு நிச்சயம் உண்டு!

இதோ - புது மாதிரியான போட்டி -




## போட்டி நம்பர் 1

கீழேயுள்ள இந்தக் கார்ட்டூனில்கடைசி 2 கட்டங்களில் மட்டுமே வசனம் உண்டு! அதை நாங்கள் றைத்து விட்டோம்! உங்கள் கற்பனையை ஓடவிட்டு, பொருத்தமானதொரு நகைச்சுவை வச ந்தை எழுதி கட்டத்தை நிரப்புங்கள்.

ஒரிஜினல் வசனமும், வாசகர்கள் அனுப்பும் வசனங்களும், அடுத்து வரும் இதழில் பிரசுரிக்கப் ம்! மிகச் சிறப்பான வாசக எழுத்தாளருக்கு ரூ. 101/- பரிசு!




ஸ்பைடர்
Vs
பனிப் பிரபு!


நழுவிக் கொள்ளப் பார்க்கிறேன்- முடியவில்லை...! விளைவுகளைச் சந்திக்கத்தான் வேண்டும்!
கதவை மூடி தடுப்புகளை வைத்துள்ளேன்.... ஆனால் ''அவனை'' நீண்ட நேரம் சமாளிக்க முடியாது! நடப்பது நடந்தே தீரும்!
திடீரென்று...
டொம்! டொம்! டொம்!
...அந்த பயந்த உருவத்தின் தீர்க்கதரிசனம் - பயங்கர உண்மையானது!
க-கம் இன்! நான் உங்களைத்தான்... எதிர்பார்த்தேன்!
ந-நாம் கடைசியாகப் பேசியதிலிருந்து என்னுடைய மனதை மாற்றிக் கொண்டேன்! ஏற்கனவே போட்ட நம் ஒப்பந்தப்படி நடக்க சம்மதிக்கிறேன்!
அதற்குக் காலம் கடந்து விட்டது ஜேக்கப் ரிக்கர்..!
..நீ இந்தப் ''பனிப் பிரபுவை'' ஏமாற்ற முயன்றாய்..!


...அந்தக் குற்றத்திற்காக பயனில்லாத உன் உயிரை இப்போது இழக்கப் போகிறாய்!
ப்ளீஸ்..! நான் என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்.. என்னை விட்டு விடுங்கள்!
உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள்?
உன்னை ஒரு உதாரணமாக்கிக் காட்டப் போகிறேன் ரிக்கர்..! என்னுடைய மற்ற வாடிக்கையாளர்களுக்கு அது எச்சரிக்கையாக இருக்கும்!
ஜேக்கப் ரிக்கரின் மரண ஓலம் அங்கே ஒலித்தது!
சற்றைக்கெல்லாம் போலீஸார் அங்கே வந்து சேர்ந்தனர். நீதிக்காவலனை ஸ்பைடருக்கு உடனே அழைப்பு அனுப்பப் பட்டது
ஒரு காலத்தில் ஈடு இணையற்ற குற்றச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து வந்த ஸ்பைடர் சமீப காலமாக மனமாற்றமடைந்து நீதியின் பக்கம் வந்திருந்தான்...
சட்டத்திற்கு சவால் விடும் பலவிசித்திர வில்லன்களை ஒடுக்குவதே ஸ்பைடருடைய பொழுது போக்கு!


ஏதாவது பிரச்சனையா சார்?
பெரிய பிரச்சனைதான்! இந்த விவகாரத்தில் உன் உதவி தேவைப்படுகிறது!
மென்டால் தீர்க்க கூடிய வழக்கல்ல இது...! ஸ்பைடர்!
விபரமாகச் சொல்கிறீர்களா?
உள்ளே வந்து பார்த்தாயானால் உனக்கே புரியும்!
இந்த மாடி முழுவதுமே பிரபல செல்வந்தர் ஜேக்கப் ரிக்கருக்கு சொந்தமானது! இன்று அவர் அலுவலகத்திற்கு வரவில்லையாம்... அவருடைய கூட்டாளி ஒருவர் தொலைபேசியில் ரிக்கரைக் கூப்பிட்டுப் பார்த்திருக்கிறார் - பதில் கிடைக்கவில்லை!....
உடனே நேரில் இங்கு வந்து ஜேக்கப் ரிக்கரை இந்தக் கோலத்தில் பார்த்திருக்கிறார்!




இது அந்தப் "பனிப்பிரபுவின்" வேலையாகத்தான் இருக்கும்! உறை பனியின் சக்தியை கையில் வைத்துக் கொண்டு அட்டகாசம் செய்யும் அவனை ஒடுக்கியாக வேண்டும்!
இப்படிக் கோரமான கொலைகளைச் செய்வதன் மூலம் என்ன கிடைக்கும் என அவன் எதிர் பார்க்கிறான்?
எனக்குத் தெரியாது கமிஷனர்..
...ஆனால் அந்த அயோக்கிய சிகாமணியை நசுக்காமல் நான் ஓயப் போவதில்லை!
INDUS
அதே சமயம், நகரின் மறுபக்கத்தில் 'பளபள'வென்று உடையணிந்த தொரு உருவம் சிதிலமடைந்து கிடந்த ஒரு அலுவலகக் கட்டிடத்தின் முன் வாசலைக் கவலையுடன் நெருங்கியது..!
நடையில் ஒருவித சோர்வு... முதிர்ச்சியின் அடையாளமாக சற்றே கூன் போட்ட முதுகு...! ஆனாலும் இறுக்கமான முகத்துடன் வெறிச்சோடிக் கிடந்த நடை பாதையைக் கடந்து காத்திருந்த லிப்டினுள் புகுந்தான்...
ஓசையின்றிப் புறப்பட்ட லிப்ட் 13ம்
லிப்ட் கதவு திறந்த போது -
குட் ஈவ்னிங் மிஸ்டர் மெக்வீ. சரியான நேரத்திற்கு வந்து விட்டீர்கள்!
அவர் உள்ளே இருக்கிறாரா?



அலுவலகத்தில் இருக்கிறார். உள்ளே போவதற்கு முன்பு இதை அணிந்து கொண்டு போங்கள்..! ஏர் கண்டிஷன்களை அளவுக்கதிகமாகக் கூட்டி வைத்துள்ளார்... நான் சொல்வது புரியும் என நினைக்கிறேன்!
லட்சக்கணக்கான டாலர் மதிப்புடைய பத்திரங்களைப் பணமாக மாற்றினேன்! 5 கோடி டாலர்களை சுவிஸ் நாட்டு வங்கியில் உங்களுடைய கணக்கில் டெபாசிட் செய்து விட்டேன்..! என்னுடைய நண்பர்களிடமும் கூட்டாளிகளிடமும் நீண்டதொரு உலகப் பயணம் போவதாகவும், சில காலத்திற்கு என்னைத் தேட வேண்டாம் என்றும் சொல்லி விட்டேன்!
ஆனல் இவை எல்லாமே அவசியம் தானு என்பது எனக்கு இன்னமும் சந்தேகமாகவே உள்ளது!
குளிர் தாக்காத உடை அணிந்து கொண்டு ஜான் மெக்வீ பூட்டியிருந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்தார்...! ஆர்டிக் பிரதேசத்துக் குளிர் காற்று சில்லென்று வீசுவதைக் கண்டு திகைத்துப் போனார்...!
கண் முன்னே விரிந்த திடுக்கிடும் காட்சியைக் கண்டு மெக்வீ வாயடைத்துப் போனார்..!
பெரியதொரு இக்கட்டில் மாட்டிக் கொண்ட அச்சம் அவர் முகமெங்கும் வியாபித்தது...!
வெல்கம் மிஸ்டர் மெக்வீ!
நான் சொன்னபடி செய்து விட்டீர்களா?
கச்சிதமாகச் செய்து விட்டேன் சார்!


எல்லாம் உங்களுடைய நன்மைக்குத்தான் மிஸ்டர் மெக்வீ! இன்று இரவு, உங்களுடைய வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையாக அமையப் போகிறது!
எ - என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை...!
நூறு வருஷத்திற்கு முன்பு 'மனிதன் விண்வெளியில் பறப்பான்' என்று சொல்லியிருந்தால் நம்புவீர்களா?
இ-இருந்தாலும், வாழ்நாள் முழுவதும் செய்த வேலையைக் கை விடுவதென்றால்...
இது ஒரு பெரிய தியாகம் என்பதை ஒத்துக் கொள்கிறேன்... ஆனால் நீங்கள் கொடுத்திருக்கும் விலையை விட இதனால் ஈட்டப் போகும் லாபம் மிகப் பெரியது!
மிஸ்டர் மெக்வீ... இன்று இரவு உங்களை சாகாவரம் பெற்றவராக்கப் போகிறேன்!
யெஸ்.. நான் நாடு வது அதுவே பனிப் பிரபு! உங்களால் முடியுமல்லவா?
இதை நீங்கள் சீரியஸாகச் சொல்ல வில்லையே?
ந-நான் இந்த வாய்ப்பிற்காகவே வாழ்நாள் முழுவதும் காத்திருந்தேன்..!
யெஸ்... எனக்குத் தெரியும்!
என் ஆற்றலில் சந்தேக மிருந்தால் இந்த நிலையிலேயே நீங்கள் மனதை மாற்றிக் கொள்ளலாம் மெக்வீ! நமது
ர-ரத்து


அப்படியானால் -என்னுடன் ஆய்வுக் கூடத்திற்குள் வாருங்கள்..! நாம் உடனடியாக வேலையைத் துவக்குவோம்!
எ-என்ன செய்ய வேண்டும்?
உங்களை அந்தக் க்ரையோஜன் கண்ணாடிக் கூண்டினுள் படுக்க வைப்போம்! உங்களுடைய உடலின் உஷ்ணம் வெகுவாக குறைக்கப்படும்...!
அதன் பலனாக - உங்களது அணுக் களிடையே புத்துயிர் உருவாகி, உடல் முதிர்ச்சியடையும் செயல் பாடு படிப்படியாக வேகமிழந்து விடும்! சாகாவரத்திற்கு மிக நெருங்கிய நிலை அது!
அதற்கு நானே ஒரு உதாரணமாக இருக்கவில்லையா
இது உண்மையில் முடியுமா?
டியர்.. நீங்கள் சொன்னபடி எல்லாமே தயாராக உள்ளது!
அப்படியானால் அதில் ஏறி சுகமாகப் படுத்துக் கொள்ளுங்கள் நண்பரே... ஜான் மெக்வீயின் வயதான அணுக்களுக்கு விடை கொடுத்து அனுப்புவோம்!
என்னுடைய வாழ்க்கை லட்சியம் இன்று நிஜமாகப் போகிறது!


நெஞ்சில் நடுக்கத்துடன் மெக்வீ அந்தக் கண்ணாடிக் ''கல்லறை''யினுள் படுத்தார்..!
...கண்ணாடிக் கதவுகள் அவரை உள்ளே வைத்துப் பூட்டிக் கொண்டன!
மறுகணம் விசேஷ வாயு பீறிட மெக்வீயின் உடல் முழுவதும் பனிப்படலம் சூழ்ந்தது! சுவாசமும் படிப்படியாக வேகம் குறைந்தது...
புஸ்ஸ்ஸ்
சில நொடிகளில் கண்ணாடிக் கூண்டு முழுவதும் பனி வியாபிக்க உள்ளே என்ன இருக்கிறது என்பது கூடத் தெரியாத நிலை ஏற்பட்டது!
பல நிமிடங்களுக்கு சுழன்றடிக்கும் வாயுவின் சப்தமும் எலெக்டிரானிக் இயந்திரத்தின் 'ஹ்ம்ம்ம்' என்ற சப்தமும் மட்டுமே கேட்டது...
...இறுதியில் கூண்டின் கண்ணாடிக் கதவுகள் வழிவிட்ட போது புதிய மெக்வீயைக் காண முடிந்தது...
...முதுமை ஆக்கிரமித்திருந்த உடல் இப்போது ஓரளவு இளமையுடன் விறைப்பாக காணப்பட்டது. சில அங்குலம் கூடுதல் உயரத்துடனும் பலத்துடனும் காணப்பட்டது.
...ஆனால், அந்தோ பரிதாபம். அவர் மனிதனாக இருக்கவில்லை!



ஜோ! மெக்வியும் மற்றவர்களைப் போல் ஆகிவிட்டாரே! இந்த சிகிச்சையால் அவரது உடல் வாழ்கிறது... ஆனால் அவருடைய மூளை அணுக்கள் மீண்டும் செயல்பட முடியாத நிலைக்கு உறைந்து விட்டதே! உயிருள்ள பிணமாகி விட்டான்!
நான் மீண்டும் தோற்று விட்டேன்.. ஆனால் ஒவ்வொரு முயற்சியும் வெற்றிக்கு ஒரு படி அருகே என்னைக் கொண்டு செல்கிறது! டார்லிங்.. விரைவில் நீயும் என்னைப் போல் உறை பனி நிலையில் சேர்ந்து கொள்வாய்.. உன்னுடைய அழகு எப்போதும் இன்று போலவே இருக்கும்!
கவலைப் படாதீர்கள்.. உங்கள் ஆராய்ச்சி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது!
எனக்கும் சாகாவரம் கிடைக்கும் வரை தான் உன்னைச் சகித்துக் கொள்வேன்! அதன் பின்னர் அற்ப புழுவான உன்னை நசுக்கி விட்டுத்தான் மறுவேலை!
அதே சமயம் ''பனிப் பிரபுவின்'' அட்டூழியங்களுக்கு முடிவு கட்டும் உறுதியுடன் -
தேவையான விபரங்களைச் சேகரித்துக் கொண்டு ஸ்பைடர் புறப்பட்டிருந்தான்!


இந்தக் கட்டிடம் முழுவதும் பனிப் பிரவுக்குச் சொந்த மானது என்று கண்டு பிடித்து விட்டேன்!
இதுதான் அந்தப் பைத்தியக்காரனின் மறைவிடம் என்பதில் எனக்குச் சந்தேக மில்லை! நிச்சயம் நான் தேடும் தடயம் கிடைக்கும்!
சுறுசுறுப்பான சில நிமிடங்களுக்குப் பின்னர்...
உயர் அழுத்த மின்சாரம் செல்லக் கூடிய ஆறு லைன்கள் ரகசியமாக கட்டிடத்தின் 13வது மாடிக்குச் செல்கின்றன..! எந்த ஒரு சாதாரண அலுவலகத்திற்கும் இவ்வளவு மின் சக்தி தேவைப்படாது?... ஆனால் குவிந்து கிடக்கும் குளிர் சாதனப் பெட்டி களைச் செயல்படுத்த இவ்வளவு மின்சாரம் தேவைப்படும்! இனி இங்கே எனக்கு வேலை கிடையாது!
13வது மாடிக்கு ஒரு 'விசிட்' அடிக்கலாம்!
'லிப்ட்' கம்பிகளைப் பிடித்துக் கொண்டு
இங்கேயே காற்று ஜில்லென்று உள்ளது!
இதை எதிர்பார்த்தே என் உடலில் பனிதாக்கா ரசாயனத்தைப் பூசி வந்துள்ளேன்!
பனிப் பிரபுவின் கண்ணில் படாமல் உள்ளே புகுந்தாக வேண்டும்!



ஆனால் துரதிர்ஷ்ட வசமாக... அது நடக்கவில்லை!
கும்!
வெல்கம் ஸ்பைடர் .. உனக்காகத்தான் நாங்கள் காத்திருக்கிறோம்! நீ என்னைப் பற்றி குற்ற உலகில் விசாரித்தது என் காதுக்கு வராமல் இல்லை!
கண்டிப்பாக நீ வருவாய் என்பது எனக்குத் தெரியும்!
ஓஹோ... அப்படியா?
...ஆனால் முதலில் நீ தந்த வரவேற்பிற்கு பதில் சொல்ல வேண்டாமோ?
மடேர்!


ஆண்டவா!
இதென்ன - என் முஷ்டியே தெறித்து விடும் போலிருக் கிறதே!
இவனுடைய நாடியே ஐஸ் கட்டி யில் செய்த பாறை போல் அல்லவா இருக்கு?
ஆனாலும், உடலில் எங்காவது ஓர் இடத்தில் பலவீனம் இருக்க வேண்டுமே! அதைக் கண்டுபிடிக்கும் வரை தாக்கு தலைத் தொடர வேண்டும்!
உன் கை ஒடிந்து விடும் தம்பி! என்னுடைய "பனிப்படை"க்கு வேதனையை உணரும் சக்தி எதுவுமே கிடையாது!
அவன் சொன்னது சரிதான்! என்னுடைய யுக்திகளைத் தான் மாற்ற வேண்டும்!
இந்தத் தடியன்கள் பலசாலிகளாக் இருந்தாலும், எருமை போல மெதுவாகவே செயல் படுகிறார்கள்! ஏதாவது செய்தாக வேண்டும்!


விறைப்பான உடல் களையே அவர் களுக்கு எதிரி யாக்கிட வேண்டும்!
இதெப்படி இருக்கு தம்பிகளா?
சே... நம்ப முடியவில்லையே! ஒற்றை ஆசாமியாக இருந்து கொண்டே 4 பேரைச் சமாளிக்கிறானே...! இன்னும் அவன் கையே ஓங்கியுள்ளது!
பிரச்சனையில் நானே தலை யிட்டாக வேண்டும்!
பட் படார்
மறுகணம் "பனிப்பிரபு" தனது அதிசயத் துப்பாக்கியை இயக்கினான்.
யா? எ..என் கால்.. தரையோடு ஒட்டிக் கொண்டு விட்டதே?!



ஜெயித்து விட்டோம் என மனப்பால் குடிக்காதே மடையா!
உனக்கு அசாத்திய தைரியம்!


..நான் நினைத்தால் உனக்கொரு பனி சமாதி செய்து உன்னை இத்தோடு ஒழித்துக் கட்டிவிட முடியும்!
ஆனால் இதைவிட பயங்கரமான தொரு விதியை உனக்கு நிர்ணயித்துள்ளேன்!



பல நிமிடங்கள் கழிந்தன...
பட்! பட்!
என்னை நம்பு ஸ்பைடர்.... நீ திமிறிப் பிர யோஜனமில்லை! இந்தக் கண்ணாடிக் கூண்டை உன்னால் உடைத்து விட முடியாது!
உனக்கு அளிக்கப் போகும் சிகிச்சை முடியும் வரை நீ இருக்கும் இடத்தில் தான் கிடந்தாக வேண்டும்!





இதெல்லாம் அவசியம் தானு டார்லிங்?
ரொம்பப் பெரிய - ..வேஸ்டாகப் படுகிறது எனக்கு!
இதைத் தவிர வேறு வழி என்ன இருக்கு? அவனை நான் தப்ப விட்டால், இவ் வளவு காலமும் நான் இங்கு கட்டிக் காத்துள்ள அனைத்தையும் அழித்துவிடுவான்
ஒரு ரசாயன விபத்து மூலம் நான் பனி மனிதன் ஆனேன்! அன்று முதல் உயிர் பிழைக்கப் பெரிய போராட்டமே நடத்தி வருகிறேன்!
இந்த உறைபனி உடலைக் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடிந்தது.. ஆனுல் தனிமையை என்னால் தாங்க முடியவில்லை!
அப்போதுதான் என் வாழ்க்கையில் வசந் தமாய் நீ வந்தாய் ஹில்டி..! மீண்டும் உயிர் வாழ எனக் கொரு காரணம் கொடுத்தாய்!
நான் சாதிப்பது எல்லாமே உனக்காகத்தான்...


..நீயும் என்னுடைய உறைபனி உலகில் சேர்ந்து கொண்டு, எப்போதும் என்னுடன் இளமையுடன் இருக்க வேண்டும் என்பதே என் லட்சியம்!
இந்த மடையன் மீது நாம் செய்யும் சோதனை வெற்றிக்கு வெகு அருகே நம்மைக் கொண்டு செல்லும்!
பட்டனை அழுத்திய உடன்... மீண்டும் அறை முழுவதும் 'புஸ்' என்று வாயு சப்தம் கேட்டது!
பட பட!
முன்னைப் போலவே - கூண்டின் கண்ணாடிகள் முழுவதும் பனி மூட்டத்தால் வெள்ளையாகிப் போனது!
அதனுள் சிக்கியிருந்த [redacted] துடிப்பு சற்றைக் கெல்லாம் குறைந்து போனது!
இறுதியில் கண்ணாடிக் கூண்டின் கதவுகள் திறக்கப்பட்டபோது...
சலனமற்ற நிலையில் ஸ்பைடர் கிடந்தார்!


இங்கே பார் ஹில்டி..! ஒரு காலத்தில் ஹீரோ நம்பர் ஒன்னாக இருந்த ஸ்பைடர் அவனுடைய உடல் எப்போதும் போலவே உள்ளது.. ஆனால் மூளையோ செத்துவிட்டது! வாழ்நாள் முழுவதும் மூளையற்ற பிண்டமாகவே அலைவான்!


வசதி படைத்த கிழவன்களிடம் ''இளமையை மீட்டுத் தருகிறேன்'' என்று வாக்குறுதி கொடுத்து, என்னுடைய ஆராய்ச்சிக்குப் பணம் பறிக்கத் தொடங்கிய போதே நானும் ஸ்பைடரும் மோதுவோம் என்பது எனக்குத் தெரியும்!
அந்த மோதலின் முடிவு இப்படித் தானிருக்கும் என்பதையும் எதிர்பார்த்தேன்!


விதியின் விளையாட்டைப் பார்த்தாயா ஹில்டி? நேற்று வரை என்னை ஒழித்துக் கட்டக்கூடிய சக்தி கொண்டவன் இவன் மட்டுமே! ...ஆனால் இன்று முதல் எனது மெய்காவலனாக வாழ்நாள் முழுவதும் அடிமை வேலை செய்யப் போகிறான்!
முட்டாளே! சரியான நேரம் வரட்டும். இந்த ஹில்டி யாரென்று உனக்குக் காட்டுகிறேன்!



ஹ்ம்ம்ம்... பெருமை யடித்துக் கொண்டது போதும்! இன்னும் நிறைய வேலைகள் பாக்கி உள்ளது!
மெக்வீ மீது நடத்திய சோதனையில் ஏற் பட்ட தவறுக்கான காரணத்தை அறிந்து கொண்டேன். என்னுடைய பிராசஸில் ஒரு சில மாற்றங்கள் செய்தால் வெற்றி கிட்டும்..! அதற்காக எனது அடிமைப் படை இந்தக் கருவியை நகற்றி வைக்க வேண்டும்!
DG



எனக்கு சிகிச்சை தர நீண்ட நாள் ஆகுமா டார்லிங்?
நிச்சயம் அதிக காலம் ஆகாது டியர்!
...ஆனல் அதே சமயம் என்னுடைய சிகிச்சை முறையில் தவறு எதுவும் நேராது என்பது நூற்றுக்கு நூறு உறுதியாகத் தெரியும் வரை உனக்கு சிகிச்சை தரமாட்டேன்! நீயும் அவர்களைப் போல் ஆகிவிடக்கூடாது அல்லவா?
பொறுமையாக இரு ஹில்டி.. சாகா நிலைமை அடைந்த பிறகு காலம் முழுவதும் சேர்ந்தே வாழுவோம்!
யெஸ்.. காலம் முழுவதும்...!
ஆனல் உன்னைப் பொறுத்தவரை "காலம் முழுவதும்" என்பது சில நாட்களோ - மாதங்களோ தான் வெறியனே!
ஆய்வுக் கூடத்தில் செய்ய வேண்டியுள்ள வேலை நிறைய இருக்கு! என்னுடன் வருகிறாயா டார்லிங்?
கொஞ்ச நேரத்தில் வருகிறேன்.
'டார்லிங்'காம்-மண்ணாங்கட்டி!


சில நொடிகள் ஹில்டி மனம் முழுவதும் குழப்பமான சிந்தனைகளுடன் போராடினாள்...
அதன் பிறகு அப்படியே அசையாமல் நின்று கொண்டிருந்த ஸ்படரைப் பார்த்தாள்....
விநோதம் தான்!
நானும் அவனை நிஜமாகவே காதலிப்பதாக அந்தக் குருட்டு முண்டம் நம்பிக் கொண்டிருக்கிறது! அந்தச் சனியனைப் பார்த்தாலே எனக்கு அருவருப்பாக உள்ளது!
அவன் ஸ்படரைப் போல கவர்ச்சியாக இருந்தால்... நானும் அவனை விரும்ப முடியும்!
பனி மனிதன் உன்னை ஐஸ் கட்டியாக்கிய போது எனக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது! உறைந்த நிலையிலும் கூட நீ நிஜமான ஆண்பிள்ளை!


நான் சாகா நிலைமை அடைந்த பின்.. பனிப் பிரபுவை தீர்த் துக் கட்டிய பின்.. நிலைமை வேறு விதமாக இருக்கும்!
அப்போது உன்னைக் குணப்படுத்த வழி காண்பேன்! அப்புறம் நாம் இரு வரும்.. எ -என்னது?
கன்னத்தில் இருப்பது பனி இல்லை? இது...
இதுதான் நீ தொட்ட கடைசிப் பொருளாக இருக்கும் துரோகியே... சாகசக்காரி!
சிந்தனைகளை உரக்க ஒலிக்கக் கூடாது ஹில்டி! அடுத்த அறையில் இருக்கும் என்னால் அதைக் கேட்காமல் இருக்க முடிய வில்லை! என்னை முட்டாள் என நினைத்து விளையாடி யுள்ளாய்... அதற்காக இப்போது நீ அனுபவிக்கப் போகிறாய்..!
டார்லிங்.. வெயிட்! நான் சொல்வதைக் கேளுங்கள்!


நான் சொன்னது அத்தனையும் பொய்! தந்திரமாக. ஸ்பைடரை ஏமாற்றவே முயன்றேன்! இப்போது காணப்படுவது போல அவன் பனிமனிதன் இல்லை. எப்போதும் போலவே இருக்கிறான்...
ஹில்டி.... வாயை மூடு!
உயிர் பிச்சை கேட்டு என்னைக் கேவலப் படுத்தாதே! சதித் திட்ட மிட்ட நயவஞ்சகப் பேய் நீ!
நோ... நோ... ப்ளீஸ்...
மெதுவாக - மிக மிக - மெதுவாக பனி மனிதனின் விரல் தனது விநோத ஆயுதத்தின் விசையை இழுத்தது...
ஆனால் விசையை இழுக்கும் முன்பு...
ஆல் ரைட் பனிப் பிரபு... உன் ஆட்டம் முடிந்தது!
உன்னுடைய ஆயுதத்திற்கு இலக்கு வேண்டுமென்றால்.. என்னைக் குறிபார்!
நான் நினைத்தது சரியாகிவிட்டது! ஸ்பைடர், இன்னும் உயிருடன் இருக்கிறான்!


ஆனால் எப்படி..?!?
நான் மேலே வருவதற்கு முன்பே, உயர் அழுத்த மின் சக்தி தந்து வந்த பல இணைப்புகளைத் துண்டித்து விட்டேன் தம்பி! உன்னுடைய குளிர்சாதனக் கருவிகள் செயல்படும் அளவுக்கே மின்சக்தியை விட்டு வந்தேன்!
அதனால் உன்னுடைய விநோதமான ஆயுதக் கூண்டு செயல்படும் அளவுக்கு மின் சக்தி கிடைக்காது!
உன்னால் பனி மனிதனாக்கப்பட்டது போல நானும் நடித்தேன்! ..உன்னுடைய தோழி மட்டும் என்னுடைய கன்னத்திலிருந்த மேக்கப்பை கண்டு பிடிக்காமல் இருந்திருந்தால் நான் நினைத்தது நடந்திருக்கும்!
ஆக, இன்று மட்டும் இருமுறை முட்டாளாக்கப் பட்டு விட்டேன்..! ஆனால் இனி நடக்காது! பனிக்கட்டி முண்டங்களே.. அவனைக் கொல்லுங்கள்!
உன் ஆசாமிகளால் என்னை நெருங்க முடியாது சைத்தானே! இப்போது பார் வேடிக்கையை!
தன் வலைத் துப்பாக்கியை இயக்கி எஃகு நூலிழைகளை ஒரு வலை போல செய்து சுழற்றினான் ஸ்பைடர்!
வாவ்! இந்த ஐஸ் பாறை ஒரே காண்டா மிருகத்தைக்கூட வீழ்த்தியிருக்கும்.. இந்த முண்டங்களை சிறிதும் பாதிக்க வில்லையே!


டொம்
தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்...! அவர்களிடம் அகப்பட்டால் தொலைந்தேன்!
மெதுவாக - விறைப்பாக நடக்கிறார்கள் என்பதை மட்டுமே வைத்து இவர்களை முறியடிக்க முடியாது!
அவர்களை நிரந்தரமாக ஒய்த்துக் கட்ட ஒரு வழி செய்தாக வேண்டும்!
...அல்லது என்னை ஒய்த்துக் கட்டி விடுவார்கள்
சீக்கிரம் சுற்றி வளையுங்கள்! அவன் தப்பிவிட இடம் தராதீர்கள்!
யெஸ்! 'பனிப்பிரபு' தான் என் பிரச்சனைக்குத் தீர்வு! முகம் முழுவதையும் மூடி ஹெல்மட் அணிந்த நிலை யிலும்
அதன் மூலம் பனிப் பட்டாளத்திற்கு உத்தரவு போடுகிறான்!
உத்தரவு கிடைக்காத நிலையில் இந்தப் பட்டாளம் என்ன செய்கிறது என்று பார்க்கலாம்!
க்ராக்!
நோ! என் ஹெல்மட் போச்சு...!


அதே சமயம் ஐஸ் கட்டி மனிதர்கள் 'படக்' கென்று செயலிழந்தனர்...!
உன்னுடைய பகடைக் காய்கள் நகராமல் நின்று விட்டன பனிப் பிரபு!
இனி ஒற்றைக்கு ஒற்றைதான்! தயாரா?
நோ! நோ!
அரசு ஆய்வ கத்திலிருக்கும் விஞ்ஞானிகளால் உன்னுடைய உறைபனி பிராசஸை மாற்றி அமைத்து... இந்த மனிதர்களை சகஜ நிலைக்கு கொண்டு வர முடியுமென்று நினைக்கிறேன்!
அவர்கள் அப்படிச் செய்தாலும் கூட - ஜேக்கப் ரிக்கரின் கொலைக்கு நீ பதில் சொல்லியாக வேண்டும்!
இப்போது சரண் அடைகிறாயா?
அல்லது இப்படி உதை வாங்கிய பின் சரணடைகிறாயா?
கும்
என்னைத் தாக்கிய தற்கு இதோ பரிசு... உறைபனி மரணம்!
அதைத்தான் நான் எதிர்பார்த்தேன்!
ஐயோ!
கும்!
நீ ஒரு போதும் திருந்த.....


மாட்டாயா?
உறைபனி துப் பாக்கி..! அதைக் கைப்பற்ற வேண்டும்!
இந்த விசையை ஒரு முறை அழுத்தினால் போதும். உங்கள் இருவரிடமிருந்தும் விடுபட்டு விடுவேன்..!
ஹில்டி... நோ! கட்டுப்பாட்டு வயர்கள் அறுந்துள்ளன...! இப்போது சுட்டாயானல்...
..துப்பாக்கி
...பின்புறமாக வெடித்துவிடும்!
புறப்படு பனிப்பிரபு! எல்லாம் முடிந்து விட்டது!
உன்னுடைய ஹில்டி காலமெல்லாம் இளமையுடனும் அழகுடனும் இருக்க விரும்பினாள்..
"..அவளது லட்சியம் நிறைவேறி விட்டது என்றே நினைக்கிறேன்!"
முற்றும்.

## *வாசக நண்பர்கள் கவனத்திற்கு :*



நண்பர்களே!,

கீழ்க்கண்ட சில முக்கிய நகரங்களில் நமது காமிக்ஸ்களை விற்பனை செய்திட ஏஜெண்டுகள் இல்லை!


| | | |
|---|---|---|
| 1) உடுமலைப்பேட்டை | 9) வத்தலக்குண்டு | 17) களக்காடு |
| 2) சிறுமுகை | 10) நத்தம் | 18) நாங்குநேரி |
| 3) சிவகிரி | 11) கம்பம் | 19) செங்கல்பட்டு |
| 4) நெய்வேலி | 12) ஆண்டிபட்டி | 20) வேலூர் (N.A) |
| 5) திண்டிவனம் | 13) தென்காசி | 21) பெங்களூர் |
| 6) விழுப்புரம் | 14) ஆறுமுகநேரி | 22) ஜெயங்கொண்டான் |
| 7) கன்னியாகுமரி | 15) அம்பாசமுத்திரம் | 23) மாயுரம் |
| 8) ராமேஸ்வரம் | 16) சங்கரன்கோவில் | 25) காரைக்கால் |

நீங்கள் இந்த ஊர்களில் வசித்து வரும் பட்சத்தில் உங்களுக்குத் தெரிந்த புஸ்தகக் கடையில் நமது இதழ்களுக்கு ஏஜென்சி எடுக்கும்படி - நமது சார்பில் கேட்டுப் பாருங்களேன்...!

அல்லது - விற்பனையாளரின் முகவரிகளை எழுதியனுப்பினீர்களானால் நாங்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டு விற்பனை ஏற்பாடுகளை செய்திடுகிறோம்!

புதிய ஏஜெண்டுகளை அறிமுகப்படுத்தும் வாசக நண்பர்களுக்கு நமது **'லயன் - டி-ஷர்ட்' அன்பளிப்பாக அனுப்பப்படும்!**

**- நிர்வாகி**




**இடப்பற்றாக்குறை & வேலைப்பளு காரணமாய் "கதை சொல்லும் படங்கள்" கட்டுரைத் தொடரை ஆரம்பிக்க இயலவில்லை! ஆண்டு மலரில் கட்டாயம் வரும்!**

# தொடரும் நினைவுகள்!











*இவை நமது முந்தைய காமிக்ஸ்களின் அட்டைப்படங்கள்!*
*அந்தந்த அட்டைப்படத்தின் கீழ் காமிக்ஸ் இதழின்*
*பெயரைக் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள்!*
*சரியான விடையனுப்பும் முதல் பத்து*
*வாசகர்களுக்கு தலா ரூ.* **25/-** *பரிசு!*

வாசக நண்பர்களே,

கீழ்கண்ட பட்டியலில் நமது பிரதான ஹீரோக்கள் பத்துப் பேர் உள்ளனர்! இவர்களை உங்களது ரசனைப்படி 1-10 என்று வரிசைப்படுத்தி அனுப்புங்கள்!



| | |
|---|---|
| 1. மாடஸ்டி பிளைஸி | 6. இரும்புக் கை நார்மன் |
| 2. ஸ்பைடர் | 7. காரிகன் |
| 3. ரோபோ ஆர்ச்சி | 8. ரிப் கிர்பி |
| 4. டெக்ஸ் வில்லர் | 9. மின்னல் படை |
| 5. இரட்டை வேட்டையர் | 10. சி.ஐ.டி. ஜான் மாஸ்டர் |

## போட்டிகளில் பங்கேற்க பக்கங்களைக் கிழிக்க வேண்டியதில்லை!

வெவ்வேறு போட்டிகளில் நீங்கள் கலந்து கொள்ளும்போது -விடைகளை ஒரு தனித்தாளில் எழுதி அனுப்பினால் போதும்! போட்டிகள் இடம்பெறும் பக்கங்களை கிழித்து புத்தகத்தை வீணடிக்கத் தேவையில்லையே!



-ஆசிரியர்

# லயன் டி - ஷர்ட் பரிசு!

*வாசக நண்பர்களே,*


*இந்த இதழில் ஆங்காங்கே வெளியாகியிருக்கும் போட்டிகளில் நீங்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வேண்டுமென்பது எனது அன்புக் கட்டளை!*


*போட்டிகளுக்கான பரிசு விபரங்கள் அந்தந்தப் பக்கங்களில் வெளியாகி உள்ளது! அது தவிர-*

**போட்டிகளில் வெற்றி பெறும் எல்லா வாசகர்களுக்கும் வழக்கமான பரிசுடன் - போனஸாக ஒரு 'லயன் டி-ஷர்ட்' உண்டு!**

**- ஆசிரியர்!**




இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ்-8
வழியாக வேலை முடிஞ்சது... பேசாமல் வீட்டிற்குப்
பார்க்கப் போகிறேன்...!
அடச் சே... போன் அடிக்கிறதே! யாருன்னு பாரு ஆல்பி!
டிரிங்!
என்னது? பார்க்கில் ஒரு பிணமா? இதோ நொடியில் அங்கே வந்திடறோம்!
சார்... இவர் இறந்து போய் 30 நிமிடங்கள் தான் ஆகிறது! இவர் யாரென்று தெரிய வில்லை! பாக்கெட்டில் இந்த சின்ன டைரி மட்டும் தான் இருந்தது!
லெட் மி சீ...


சந்தேகமேயில்லை... செத்துப் போனவன் ஒரு ப்ளாக் மெயில் பேர்வழிதான்! இந்த டைரியில் இருக்கும் அட்ரஸ் எல்லாமே இவன் பணம் பறித்து வருபவர்களின் விலா சமாகத் தானிருக்கும்! முதல் அட்ரஸிலி ருந்து விசாரணையை ஆரம்பிப்போம்!
முதல் ஆசாமி புரபஸர் டும்பெல்...! ஹ்ம்ம்... மனுஷன் கதவைத் திறக்க மாட்டேன் கிறாரே...?
அப்பாடி...! ஒரு வழியாய் கதவை திறந்தீர்களே! நான் இன்ஸ்பெக்டர் டேஞ்சர்! கடந்த ஒரு மணி நேர மாய் நீங்கள் என்ன
செய்து கொண்டிருந் தீர்கள் என்று சொல்ல முடியுமா?
எனது ஆய்வுக் கூடத் தில் தான் இருந்தேன்! இன்று நான் முழுக்க நான் வெளியே போகவேயில்லை!
நான் தனி மனுஷன்! முக்கியமானதொரு ஆராய்ச்சியில் ஈடு பட்டிருப்பதால் இந்த
அறையை விட்டு ஒரு அடி கூட வெளியே எடுத்து வைக்க முடிய வில்லை.
நீங்கள் பொய் சொல்வது அப் பட்டம் மிஸ்டர்! ஆல்பி... முதல் முயற்சியிலேயே கொலைகாரனை கண்டு பிடித்து விட்டோம்!



ஜூலியா
டாடி.... என் பாய் பிரண்டு டேவிட் வந்திருக்கிறார்! நான் ரெடியாகும் வரை அவரோடு பேசிக் கொண்டிருங்களேன்!
என்ன பேசுவதாம்?
ஏதாவது விஷயம் பேசுங்கள்!
ஓ.கே.!
ஹலோ டேவிட்... படிப்பெல்லாம் எப்படி இருக்கு?
சூப்பர்!
உங்கள் ஸ்கூல் கிரிக்கெட் டீம் இந்த சீசனில் எப்படி ஆடிக் கொண்டிருக்கிறது?
தூள்!
அந்தப் புது மாருதி கார் உன்னது தானே...? வண்டி எப்படி இருக்கு?
டக்கர்!
இப்போ பிரமாதமான க்ளைமேட்... இல்லையா?
அட்ட காசம்!
டேவிட்.... நான் ரெடி! படத்திற்குக் கிளம்பலாம்!
இந்தப் பையனிடம் எப்படித்தான் மனசைப் பறி கொடுத்தாளோ?
பிரமாதமான அவனது பேச் சாற்றலைக்கண்டு மயங்கி விட்டாளாம்!



சாதாரணப் பால்காரி யின் சிலைதான் என்ற போதிலும்.
...அவளுடைய இதயத்திலோ நம்ப முடியாத ரகசியம் புதைந்துள்ளது!
ரிப் கிர்பி தோன்றும் வைரச் சிலை மர்மம்!
அப்படி என்ன சார் தலை போகிற சமாச்சாரம்? இப்படி விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கிறீர்களே!
சமீபத்தில் காணாமல் போன அரிய நகைகள் பற்றிய போலீசாரின் அறிக்கை டெஸ்மாண்ட்!
உதாரணமாக, பிரசித்தி பெற்ற ஜான்ஸிபார் வைரம் மியூசியத்தி லிருந்து மாயமாய் மறைந்து விட்டது!
ஆனாலும் அவர்களுக் இவ்வளவு அஜாக்கிரதை ஆகாது சார்
ஒரு சிற்பியின் கலைக்கூடத்தில் அவ படைப்புகளையெல்லாம் தகர்த்து கொண்டிருந்தான் ஸ்டுவர்ட்!
அதே சமயம் பிறி தோரிடத்தில்...
கிட்டத்தட்ட அனைத் தையுமே உடைத்து நொறுக்கி விட்டீர்கள் ஸ்டுவர்ட்!
இந்தச் சிலை களின் ஏதாவது ஒன்றில்தான் இருக்கணும் ஜென்னி!



பரபரப்பான தேடுதல் படலம் தொடர்ந்து நடந்தது -
இந்த சிலைகளில் ஏதாவது ஒன்றுக்குள் வைரம் இருந்தால் நாம் குலுக்கி பார்க்கும் போது சப்தம் கேட்காதா ஸ்டூவர்ட்?
என்னை அத்தனை பெரிய மடையன் என்று நினைத்து விட்டாயா? வைரத்தை பஞ்சில் சுற்றிய பிறகுதான் புதிய சிலைக்குள் வைத்தேன்!
ஜான்ஸிபார் வைரத்தை மீட்கும் முன்பு என்னுடைய மாமா செத்துப் போனது துரதிர்ஷ்டம் தான்!
பென் மாமா சாவதற்கு முன்பு "அந்தச்" சிலையை என்ன செய்திருப்பார்?
எல்லா சிலைகளையும் உடைத்து நொறுக்கிப் பார்த்து விட்டேன்.. ம்ம்ம் வைரம் இல்லை!
இங்கே இருக்கிறது அவருடைய டைரி. அந்தச் சிலை என்னாச்சு என்பது பற்றி இதில் இருக்கலாம் ஸ்டூவர்ட்!
ஆனால் காணாமல் போன சிலை, நல்லதொரு பெண்ணின் கையில் இருந்தது..
அவருக்குப் பிடித்தமான இந்த சிலையை எனக்கு அனுப்பியுள்ளார். இதைப் பொக்கிஷமாக வைத்திருப்பேன்!
எதிர்பாராமல் பரிசாக வந்த சிலையைக் கண்டு காதரின் ஸ்டார் பெரிதும் மகிழ்ந்தாள்!
பெரிய மாமா பென், எப்போதும் என்னிடம் பிரியமாக இருப்பார்!


ஒரு சிலையை காதரின் என்பவளுக்கு அனுப்பி யுள்ளார். ஆனால் அவள் எங்கிருக்கிறாள் என்பது நமக்குத் தெரியாதே! போலீசார் அவளைக் கண்டுபிடிக்கக் கூடும்!
நோ! போலீஸ் தலையிடக் கூடாது. தனியார் துப்பறிவாளர் ஒரு வரை ஏற்பாடு செய்..!
அதைத் தொடர்ந்து
ரெமிங்கடன் கிர்பி
நீங்கள் யாரென்று சொல்வது மேடம்?
ஒரு முக்கியமான விஷயமாக மிஸஸ் ஜென்னி வந்திருப்பதாகச் சொல்லுங்கள்!
மிஸ்டர் கிர்பி! எங்கள் மாமா மிஸ்டர் பென் சமீபத்தில் இறந்து போய்விட்டார் அவரது சொத்தில் ஒரு பகுதியை உறவுக்காரப் பெண்ணு காதரின் பெயருக்கு விட்டுச் சென்றுள்ளார்! ஆனால் காதரின் இப்போது எங்கிருக்கிறாள் என்று தெரியவில்லை! அவளைத் தேடிப்பிடித்து சொத்தில் ஒரு பங்கை அவருக்குக் கொடுக்க வேண்டும்.
உங்களுக்கு ரொம்பத் தாராள மனசு!
ஆனால் இதற்காக என்னுடைய உதவியை நீங்கள் தேடி வந்தது தான் ஆச்சரியமாக உள்ளது! நிச்சயமாக அவளுடைய முகவரி உங்கள் மாமாவிடம் இருக்குமே!
காதரினின் தாயாருக்கு உடல் நலம் சரியில்லாத தால் அவளை தத்து கொடுத்துவிட்டாள்! விரைவிலேயே செத்தும் போய் விட்டாள். அதன் பிறகு உறவு விட்டுப் போச்சு...!
அவளை ஏன் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற உண்மையை இவரிடம் சொல்லக் கூடா


ஓ.கே.! உங்கள் மாமா இருந்து வந்த ஸ்டூடியோ சாவியை என்னிடம் கொடுங்கள். என்னால் முடிந்ததைச் செய்கிறேன்!
காதரின் கஷ்டத்தில் இருக்கக் கூடும்! நாம் அவளுக்கு ஏதாவது உதவ முடியுமா எனப் பார்ப்போம்!
என்னையும் உங்களுடன் கூட்டி வந்தது சந்தோஷமாயிருக்கு சார்! கலைப் பொருட்கள் மீது எனக்கு எக்கச்சக்கமான ஆர்வம் என்பது உங்களுக்குத் தெரியுமே!
இங்குதான் பென் வாழ்ந்திருக்கிறார்! விலை மதிப்புள்ள எதையும் அவர் விட்டுச் சென்றிருப்பார் எனத் தோன்றவில்லை டெஸ்மாண்ட்!
கலைஞர்கள் எப்போதுமே கொஞ்சம் வித்தியாச மானவர்கள்தான் சார்!
ஹ்ம்ம்ம்... இது எனக்கு பழக்கமான ஒரு பட்லரை நினைவு படுத்துகிறது சார்!
கிர்பி தன் வேலையைத் துவங்கி விட்டது கொஞ்சம் நிம்மதியை தருகிறது ஸ்டுவர்ட்!
அந்தக் காதரினைக் கண்டுபிடித்து ஜான்ஸிபார் வைரம் இருக்கும் சிறிய சிலையைக் கைப் பற்றினால் போதும்- ஆயுசுக்கு ராஜாதான்!
போயும் போயும் நான் வைரத்தைப் புதைத்து வைத்த அதே சிலையை இந்தக் கிழட்டு முட்டாள் எடுக்கவா வேண்டும்?
ஹ்ம்ம்ம்... நம் கெட்ட நேரம்!


கலைக் கூடத்தினுள்
அடடா.. இந்தப் பால்காரப் பொம் பளை சிலை கீழே விழுந்து உடைந்து விட்டதே...!
இதை யாரோ உடைத்து நொறுக்கியதாகத் தெரிகிறது டெஸ்மாண்ட்!
இதோ இன்னொரு துண்டு! இந்தச் சிலை யின் வடிவ அமைப்பு பெண்ணுக்குப் பிடிக்க வில்லை போலத் தெரியுது!
ஏதோ பிசாசு வந்து பால் காரியின் சிலைகளை மட்டும் உடைத்து நொறுக்கியுள்ளதா என்ன? வேறு எதுவும் சேதமாகவில்லை!
இந்தச் சுத்தியலில் பொம்மையின் துகள்கள் தெரிகிறது! வேண்டு மென்றே தான் பால்காரி பொம்மைகளை உடைத்துள்ளார் பெண்!
ஏன் - சார்? திடீ ரென்று பைத்தியப் பிடித் திருக்குமோ?
உனக்குப் புதிர்கள் பிடிக்கும் அல்லவா? இதைத் திரும் பவும் முழுசாக்க வேண் -டும் டெஸ்மாண்ட்!
யம்மாடி.... நல்ல தண்டனை தான் சார்!
நாம் வீட்டுக்குப் போனதும், கோந்து தடவி ஒட்டப் பார்க் கிறேன் சார்! ஆனால் இதுதான் காதரினைக் கண்டு பிடிக்க வழியா?
யாருக்குத் தெரியும் டெஸ்மாண்ட்!


அட - இங்கு காதரின் பெயர் உள்ளதே! அதன் கீழே ''பால்காரி பொம்மை'' என்று எழுதப்பட்டுள்ளதே!
பிடிக்காத தொரு பொம்மையை, அவளுக்கு அனுப்பக் காரணம் என்ன?
புதிர்தான்! ஆனால் இப்போதைக்கு என் னுடைய வேலை காதரினைக் கண்டு பிடிப்பதுதான்.
அதன் மூலம் அவளுக்கு ஓரளவு சொத்துக் கிடைக்கலாம்!
ஓ.கே. இங்கிருந்து சிலவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்று வேலை யைத் துவக் குவோம்!
உடைந்த டீ கப்களை எக்கச் சக்கமாய் ஒட்டிய பழக்கம் இருப்பதால் பிழைத்தேன்!
கிர்பியும் அவரு டைய பட்லர் டெஸ்மாண்டும் வருகிறார்கள்!
கையில் காகிதப் பை ஒன்றும், பென்னின் டைரியும் வைத்துள்ளனர்!
காதரின் எங்கே என்பது பற்றி எனக்கு விரைவில் தகவல் வரணும் ஜென்னி. அதுவரை அவரைத் தொடர்ந்து செல்!



கிர்பியின் வீடு -
என் வாழ்நாளில் ஏராள மான புதிர்களுக்கு விடைகாண முயன்று இருக்கிறேன். ஆனால் இந்த மாதிரி மாட்டிக் கொண்டு முழித்ததில் லைடா சாமி!
எல்லாத் துண்டுகளும் ஒரே சிலையைச் சேர்ந்த தாக இருந்தால் தேவலை - இல்லா விட்டால் வினோதமான ஜந்து உருவாகிவிடும்.
ஹும்ம்ம் டைரியின் பின் புறத்தில் தனக்கு வந்த வாழ்த்து மடலைப் பத்திரமாக வைத் துள்ளாரே பென்...!
பெரிய மாமா பென் அவர்களுக்கு - அன்புடன் காதரின்
அடச்சே! கவரில் வாழ்த்து மடலை அனுப் பியவரின் விலாசத்தைக் காணோமே.. காதரினின் கடைசிப் பெயரைக் கண்டு பிடிக்கவும் தடயம் இல்லையே...
ஆனால், பென்னுக்கும் காதரினுக்கும் மிகவும் நல்ல உறவு இருந் துள்ளது தெரிகிறது! தான் விரும்பாத ஒரு சிலையை அவளுக்கு அனுப்பி இருக்க மாட்டார்!


யுரேகா! நான் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கிறீர்களா?
அபாரம் டெஸ்மாண்ட்! உனக்கு "கோந்துக் கலைஞன்" என்று பட்டம் சூட்டுகிறேன்!
ஆக, பென் காதரினுக்கு அனுப்பிய பால்காரி சிலை உருவம் இது தானு? அதன் பிறகு யாரோ எல்லாச் சிலைகளையும் உடைத்துள்ளனர்!
யாரோவா? மிஸ்டர் பென்தான் இதை உடைத்திருப்பார் என்று நினைத்தேன் சார்!
நீ சொல்வது ஒத்துவரவில்லை டெஸ்மாண்ட். பென் காதரினை நேசித்திருக்கிறார்... அவளுக்குப் பிரயோஜனப்படாததை அவர் அனுப்பியிருக்க மாட்டார்!
அதே சமயம் தொலை தூரத்தில் -
இதை அனுப்பியதற்காக பெரிய மாமா பென்னுக்கு நன்றி சொல்லி கடிதம் அனுப்பியுள்ளேன் ஜிம்!
கள்ளங்கபடமற்ற அந்த நேச உள்ளங்களை ஒரு சின்னஞ்சிறு சிலை மட்டுமே கண்காணித்தது!
அதே நேரம் நகரில்...
காதரினை கண்டுபிடிக்க நீ அமர்த்தியுள்ள கிர்பி மீது ஒரு கண் இருக்கட்டும் ஜென்னி. நான் யாரையுமே நம்பவில்லை!
நாளை நான் அவரைப் பார்த்துவிடுகிறேன், ஸ்டூவர்ட்!


மறுநாள்
நான் பென்னின் டைரியை அவருடைய ஸ்டூடியோவில் வைத்து விட்டு, இன்னும் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்து வருகிறேன் டெஸ்மாண்ட்! நீ வீட்டிலேயே இரு!
ரொம்ப நல்லது சார்!
ஆ! பென்னின் தபால்காரர் அல்லவா! இவர் தான் இப்போது எனக்குத் தேவை...
நான் ஒரு தனியார் துப்பறிவாளர். சில கேள்விகள் மட்டும் கேட்கலாமா?
ரொம்ப கேள்விகள் கேட்டு தபால்கள் போய்ச் சேர வேண்டியதை தாமதப்படுத்தி விடாதீர்கள் மிஸ்டர் கிர்பி!
வய்தான மிஸ்டர் பென்னுக்கு சொந்தக்காரர் ஒருவரை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். பென் இறந்து விட்டது உங்களுக்குத் தெரியுமல்லவா?
பக்கத்து வீட்டுக்காரர் சொன்னதன் பேரில் தெரியும். அங்கு கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து விட்டுத்தான் வருகிறேன்!
அவருக்குப் பொதுவா நிறையத் தபால்கள் வராது. ஆனால் வேடிக்கை என்னவென்றால், இப்போது அவருக்கு கடிதம் ஒன்று வந்துள்ளது!


செத்துப்போன மிஸ்டர் பென்னுக்குக் கடிதமா? அதை நான் பார்க்கலாமா?
இதை அனுப்பியவருக்கு பென்னின் சொத்து கொஞ்சம் கிடைக்கும் வாய்ப்பிருந்தால் நன்றாக இருக்கும் - இல்லையா?
ஓ.. ஆனால் நீங்கள் அதைத் தொடக் கூடாது! அனுப்பியவரின் விலாசத்தை வேண்டுமானால் பாருங்கள்!
காதரின் ஸ்டார். ரூரல் ரூட், நக ருக்கு வெளியே உள்ள கிராமப் பகுதியல்லவா?
காதரின் ஸ்டார்! தனது பெரிய மாமா பென் இறந் தது கூடத் தெரியாமல் கடிதம் எழுதுகிறாள் - அப்பாவிப் பெண்!
புதிரின் முதல் பகு திக்கு இது விடை யளித்து விட்டது!
Sale
பென்னுக்கு அதிக கடிதம் வராது. ஆனால், இதே பெயரை இதற்கு முன்பு வேறு சில தபால்கள் மீதும் பார்த்திருப்பதாக ஞாபகம்...!
இப்ப நான் போகலாமா?
பிரியமான மருமகளுக்கு பால்காரி சிலையை அனுப்பி விட்டு மற்ற எல்லா சிலைகளையும் ஏன் உடைக்க வேண்டும்?



சே.. முட்டாள்தனமாக சுத்தியலின் கைப்பிடி யில் இருந்திருக்கும் ரேகைகளை பாழாக்கி விட்டேன். பரவா யில்லை - உடைந்து கிடக்கும் மற்ற சிலை களில் ஏதாவது ஒன்றில் ரேகை கிடைக்கும்!
ஏதாவது அதிர்ஷ்டம் இருந்ததா சார்?
நாம் தேடிய வாரிசின் பெயர் காதரின் ஸ்டார். அவள் இந்த விலாசத் தில் உள்ள பண்ணையில் வாழ் கிறாள் டெஸ்மாண்ட்!
வாழ்த்துக்கள் சார்! கேஸ் இத்துடன் முடிந்து விட்டது!
அவ்வளவு வே
மாக முடியாது டெஸ்மாண்ட்!
நீ பியானோ மீது படிந்துள்ள தூசி களைத் துடை டெஸ்மாண்ட்! நான் கை ரேகையைத் தேடுகிறேன்!
இது கைரேகை சம் பந்தப்பட்டது... தூசி துடைத்து கைரேகையை எடுக்க வேண்டும்!
நீங்கள் துடைப்பத்தை லாவகமாகக் கையாளு கிறீர்கள் சார்! என்றைக் காவது ஒரு நாள் நம் வேலைகளை மாற்றிக் கொண்டால் என்ன?



ஒரு ரேகை கிடைத்து விட்டது! பார்த்தால் ஒரு பெண்ணின் ரேகை போலத் தெரிகிறது!
மன்னியுங்கள் சார்... யாரோ அழைப்பு மணியை அடிக் கிறார்கள்!
மிஸஸ் ஜென்னியாக இருக்கும். உடைந்த துண்டுகளை அவள் கண்ணில் படாதபடி மறைத்து வைப்பதுதான் நல்லது!
ஹலோ மிஸஸ் ஜென்னி ரீட்! உள்ளே வாங்க...
அவளேதான்! டெஸ் மாண்ட் ஒட்டிச் சேர்ந்த இந்த சிலை மூலம் ஏதா வது செய்ய முடியுமா எனப் பார்ப்போம்!
ஹலோ மிஸ்டர் கிர்பி. நம்முடைய புதிருக்கு விடை காண்பதில் ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா?
உங்களிடம் சொல்ல வேண்டிய சில தகவல்கள் இருக்கு என நினைக்கிறேன் மிஸஸ் ரீட்!
இந்த சின்ன பால்காரி பொம்மை எவ்வளவு அழகாக இருக்கு!
இந்தச் சிலை ஸ்டுடியோ வில் இருந்துதான் வந்த தென்றால், எனது அருமையான மாமா பெண் நினைவாக எனக்கு இது வேண்டும் மிஸ்டர் கிர்பி
இதுதான் காணாமல் போன சிலையாக இருக்க வேண்டும். இதில் தான் ஸ்டுவர்ட் வைரத்தை ஒளித்து வைத்திருக்கணும்!


மிஸஸ் ரீட், ஸ்டூடியோ வில் கிடந்த உடைந்த துண்டுகளை டெஸ் மாண்ட் இப்போதுதான் ஒட்டிச் சேர்த்து பொம்மையாக ஆக்கியுள்ளான்!
குட்! சிலை முழு வதும் ரேகை படும் படி நன்றாகப் பிடித்து வைத்து விட்டாள்!
ஓ அப்படியானால் இது எனக்கு வேண்டாம்!
மாமா பென் உருவாக்கிய பிசகில்லாத சிலை தான் எனக்கு வேண்டும். வேறு தகவல் உள்ளது என்று சொன்னீர்களே...
நீங்கள் தேடும் பெண்ணின் அக்கா மகள் பெயர் காதரின் ஸ்டார். இது அவளுடைய விலாசம்..
அபாரமாக முடித்து விட்டீர் கள் மிஸ்டர் கிர்பி. உங்களுக்குரிய 'செக்'கை அனுப்பி வைக்கிறோம்!
மிக்க மகிழ்ச்சி!
நான் என்ன செய்வதாக சொன்னேனோ அதைத்தான் செய்தேன்
மிஸஸ் ஜென்னி ரீட் போய் விட்டாள் சார். அவளிடம் மிஸ் காதரி னின் விலாசத்தை நீங்கள் கொடுத்தது ஆச்சரியமாக இருக்கு!


நான் தேடிய ஆதாரம் இங்கே இருக்கு டெஸ்மாண்ட்!
புரியும்படி சொல்லலாமா சார்?
நீ ஒட்டி வைத்த பால்காரி சிலையில் இருக்கும் மிஸஸ் ரீட்டின் கைரே கையும், ஸ்டூடியோவில் இருந்து நாம் எடுத்து வந்த துண்டுகள் மீதிருந்த கைரேகையும் ஒன்றுதான் டெஸ்மாண்ட்!
அதாவது இந்தச் சிலைகள் உடையும் முன்பு அவள் அவற்றை எடுத்துப் பார்த்திருக் கிறாள்! ஆனால் இது போன்ற சிலையை இதற்கு முன்னால் பார்த்ததில்லை என்று நம்மிடம் நடிக்கிறாள்!
இதில் ஏதோ விவகாரம் உள்ளது! காதரினை நேரில் போய் பார்க் கலாமென நினைக் கிறேன்!
பயணத்திற்கு பைகளை எடுத்து வை டெஸ் மாண்ட். நாம் காரில் காதரின் ஸ்டார் இருக்கும் பண்ணை வரை போய் வருவோம்!
ரொம்ப சந் தோஷம் சார்! சுத்தமான காற்றை சுவாசித்து ரொம்ப காலமாகிவிட்டது!
இதையும் பத்திரமாக சுற்றி என்னுடைய பையில் வை! இது நமக்குத் தேவைப்படலாம்!


ஜாக்பாட் கிடைத்து விட்டது ஸ்டூவர்ட் இனி நாம் பணக்காரர் களாகி விடலாம்!
அடி சக்கை! அதைக் கொண்டு வா பார்ப்போம் ஜென்னி!
அற்புதம் ஜென்னி! நமக்கு காதரின் விலாசம் தெரிந்து விட்டது... இனி போய் பால்காரி சிலையைக் கைப்பற்றி வருவோம்!
இதுதான் கடைசி யாக இருக்கும் பால்காரி சிலை. இதில் தான் நிச்சயம் வைரம் இருக்கும்!
மற்றொரு குழுவும் புறப் படத் தயாரானது...
உடனே கிளம்ப லாமே ஸ்டூவர்ட்!
ஓ யெஸ்...! ஜான்ஸிபார் வைரம் என் கண் முன்னால் ஜொலிக்கத் தொடங்கி விட்டது!
எந்த வித ஆர்ப்பாட்ட மும் இல்லாமல் காதரின் அந்தச் சின்ன சிலையை நம்மிடம் கொடுத்து விடுவாள் என்றே நான் நினைக்கிறேன் ஸ்டூவர்ட்!
அவள் என்ன செய்தாலும் எனக்கு கவலை இல்லை ஜென்னி! எனக்கு அந்த வைரம் வேண்டும்!
அதே சமயம்
கடிதம் கொண்டு வருவதற்கு நன்றி, மிஸ்டர் பாட்டர்!
இதில் ஒரு கெட்ட செய்தி இருக்கு என நினைக்கிறேன். உன்னு டைய கடிதங்களில் ஒன்று திரும்பி வந்து விட்டது!
STARR


இது என்னுடைய பெரிய மாமா பென்னுக்கு நன்றி சொல்லி அனுப்பிய கடி தமாச்சே! இதில்... ''இறந்து போனவர்'' என்றல்லவா முத்திரை குத்தப்பட்டுள்ளது!
ஓ மிஸ்டர் பாட்டர்... என் மீது அக்கறை காட்ட ஒருவர் மட்டுமே இருந்தார்! அவரும் இறந்து விட்டார்!
ஐ யம் சாரி காதரின்! உதவி தேவைப்பட்டால் என்னுடைய மனைவியைக் கூப்பிடு..!
இறப்பதற்கு முன்பு கடைசியாக எனக்கு அனுப்பிய பரிசு! பொக்கிஷம் போல் எப்போதும் இதைப் பாதுகாப்பேன்!
காதரின், ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?
ஓ. ஜிம் நான் பெரி தும் நேசித்த எனது ஒரே உறவினரும் இறந்து விட்டார்!
அந்தப் பண்ணை வீட்டில்தான் காதரின் ஸ்டார் இருக்கிறாள் டெஸ்மாண்ட்!
இங்கேயாவது இந்தப் பால்காரி சிலை மர்மத்திற்கு விடை கிடைக் கிறதா என்று பார்க்கலாம்!
நீ ஒட்டிச் சேர்த்த இந்தச் சிலையையும் கையில் கொண்டு செல்லப் போகிறேன். ஆனால்... இதை அவளிடம் காட்ட மாட்டேன்!


என் பெயர் கிர்பி மிஸ் காதரின். உன்னுடைய பெரிய மாமா பென் பற்றி நான் பேசலாமா?
ஆல் ரைட் - உள்ளே வாங்க!
என்னுடைய மாமா இறந்து விட்டது உங்களுக்குத் தெரிந் திருக்குமே மிஸ்டர் கிர்பி. துக்கம் விசாரிக்க வந்தீர்களா?
ஐ யம் சாரி, மிஸ் காதரின். அதற்காகவே வந்தேன். நான் அவருடைய ஸ்டூடியோவில் வேலை செய்தேன்!
இதுவும் அவர் செதுக்கிய சிலை தானே?
வாவ்! ரீட்ஸ் தம்பதியினர் வலைவீசித் தேடி வரும் உடையாத சிலை இது தானா?
கொஞ்சம் இருங்கள்... டெலிபோன் மணி சப்தம் கேட்கிறது...
நீ போய் வா. நான் இங்கேயே இருக்கிறேன்!
ஜென்னி அத்தையா? கிராமத் திலிருந்து பேசு கிறீர்களா?
உண்மையில் நீங்கள் யாரென்றே எனக்கு நினை வில்லை...
யெஸ்... பரவா யில்லை... நீங்கள் வீட்டுக்கு வாங்க
இது ரீட்ஸ் தம்பதி தான்! அவர்களும் இதே கிராமத்திற்கு வந்துள்ளனர்.


நான் விரைவில் செயல் பட வேண்டும் என்று ஏதோ உள்ளுணர்வு சொல்லுதே! இங்கே ஒரு "பொம்மை மாறாட்டம்" செய்ய வேண்டும்!
ரீட் தம்பதியினர் தான் மற்ற எல்லா சிலை களையும் உடைத்தார் களென்றால், காதரினுக்கு
பென் அனுப்பிய இந்தச் சிலையைப் பாதுகாக்க வேண்டும். இதற்குப் பதிலாக டெஸ்மாண்ட் ஒட்டிய சிலையை வைக்கலாம்!
என்னைப் பார்க்க இப் படி பல விருந்தினர்கள் ஒருபோதும் வந்த தில்லை! என்னுடைய அத்தையும் மாமாவும் இங்கு வந்துள்ளனர்!
அப்படியானால் நான் வெளியே போய் விட்டு அப் புறம் வருகிறேன் மிஸ் காதரின்!
தயவு செய்து நான் இங்கு வந்ததை அவர்களிடம் சொல்ல வேண்டாம்! நான் பின்னர் சொல்லிக் கொள்கிறேன்!
போன காரியம் ஜெயமா சார்?
போகும் போது சொல்கிறேன் டெஸ்மாண்ட்...
ரீட்ஸ் தம்பதியினர் எந்த நேரமும் இங்கு வந்து விடுவார்கள்!
உடையாத சிலை இப்போது என்னிடம் உள்ளது! ஒரு சிறிய சோதனைக்காக நாம் ஷெரீப் ஆபீசுக்குப் போக வேண்டும்!


அங்கே
காதரின் மை டார்லிங்! நீ சின்னக் குழந்தையாக இருந்த போது உன்னைப் பார்த்தது!
ஹ.. ஹலோ..., உள்ளே வாங்க அத்தை!
இதுதான் உன்னுடைய மாமா ஸ்டுவர்ட், அவரும் உன்னைப் பார்க்க ஆவலாக வந்துள்ளார்!
ஹலோ காதரின்!
உங்கள் இருவரை யும் சந்தித்ததில் ரொம்ப சந் தோஷம். உள்ளே வாங்க!
இருங்கள், நான் காபி கொண்டு வருகிறேன்:
அங்கே பாருங்கள்!
காணாமல் போன பால்காரி சிலை! ந ம் தேடும் படலம் முடிந்து விட்டது!
ஓ, காதரின் உனக்கும் பென் மாமா இந்தச் சிலையை அனுப்பினாரா?
யெஸ்.. கொள்ளை அழகு இல்லையா?
விளையாட்டுக் காக தெரிந்த வர்கள் எல்லோ ருக்கும் இதை அனுப்பினார் பென்!
அப்படியா? இதைப் பொக் கிஷம் போல் காப்பேன்...!


இதை நான் ஒரு போதும் பிரியப் போவதில்லை அத்தை!
இதுதான் என்னுடைய அடையாள அட்டை ஷெரீப் டெக்ஸ்டர். காதரின் ஸ்டாருக்கு உதவிட வந்துள்ளேன்!
தனியார் துப் பறிவாளரா?, காதரினுக்கு என்ன பிரச்சனை?
எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அவளுடைய உறவினர் ஒருவர் அனுப்பிய இந்த சின்ன சிலை விவகார
மாக இருக்கும் என நினைக்கிறேன்...
இந்தப் பால்காரி சிலைக்குள் ஒரு ரகசியம் உள்ளது ஷெரீப்!
அருகில் உள்ள டவுன் ஆஸ்பத்திரியில் தான் ஒரேயொரு எக்ஸ்ரே மெஷின் இருக்கிறது மிஸ்டர் கிர்பி. ஏன் கேட்கிறீர்கள்?
இந்தச் சிலையை எக்ஸ்ரே எடுப்பதற்கான சார்ஜை நான் கொடுத்து விடுகிறேன். உங் களுடைய சிபாரிசு இல்லாமல் இதைச் செய்வார்களா என்பது தான் சந்தேகம்!
அப்படியானால் நாமிருவரும் போவோம்!
எது எதையோ பட மெடுத்துப் பார்ப்பார்கள் என கேள்விப் பட்டிருக் கிறேன் ஷெரீப். ஆனால் இது புதிய அனுபவம்!
இந்தா பார் ஆர்டி, போன வருஷம் உன்னுடைய பாட்டியின் காணாமல் போன பசு மாட்டைக் கண்டுபிடித்துக்
கொடுத்தேன் அல்லவா? அதற்குக் கைமாறாக இதைச் செய்!


ஓ.கே. படம் எடுத்துத் தரு கிறேன். இங்கேயே இருங்கள்...
டெஸ்மாண்ட், இப்படிக் குறுக்கும் நெடுக்குமாக உலாற்ற வேண்டியதற்கு அவசியமில்லை!
அப்படியில்லை சார்.. சினிமாவில் எல்லாம் இந்த மாதிரி சந்தர்ப்பங் களில் இப்படித்தான் செய்வார்கள் சார்!
இந்தாருங்கள் எக்ஸ்ரே! ஆனால் தயவு செய்து டாக்டரைக் கூப்பிட வேண்டுமென்று சொல்லாதீர்கள்!
இங்கே பாருங்கள்! சிலைக்குள்ள ஏதோ ஒரு பொருள் இருக் கிறது!
மற்ற சிலைகள் எல் லாமே காலியாக இருந்ததே...!
சரி, சிலைக்குள் ஏதோ ஒன்று இருக்கு! இப்ப என்ன செய்வது ரிப்?
ஒரு பல் டாக்டரிடம் போவோம். அவர் தான் துளையிட்டு சேதமில் லாமல் எடுப்பார்!
அப்பாடி! இந்த ஒரு நோயாளியாவது நான் தோண்டி எடுப்பதை ஆர்ப்பாட்டம் பண் ணாமல் சகித்துக் கொண்டாளே!



ஆ! ஏதோ ஒன்று பஞ்சில் சுற்றி வைக்கப் பட்டுள்ளது!
அங்கே -
ஜென்னியின் மரு மகளான உன்னைச் சந்திப்பதில் ரொம்ப சந்தோஷம் காதரின். நாங்கள் புறப் படுகிறோம்!
எனக்கும் ரொம்ப சந்தோஷம் ஸ்டூவர்ட் மாமா!
அந்தச் சிலையை விட்டுக் கொடுக்க மாட்டாள் போல் தெரிகிறதே..! அடுத்து என்ன செய்வது?
அந்த வீட்டையே எரித்து சாம்ப லாக்கி விட்டாவது சிலையைத் திருடியாக வேண்டும்!
இன்று இரவு காதரினை வீட்டிலிருந்து வெளியே
எங்காவது கூட்டிப் போய் விடு ஜென்னி!
அப்போது சிலையை எடுக்க அங்கு போகிறீர் கள் - அப்படித் தானே ஸ்டூவர்ட்?
ஆனால் ஒரு துப்பறி வாளர் அவர்களை முந்திக் கொண்டிருந்தார்!
இந்தச் சிலை மீது ஏன் ஆர்வம் காட்டினாள் என்பது இப்போதல்லவா தெரிகிறது!


இதோ - பிரபல ஜான்ஸிபார் வைரம்!
ஐயோ! கண் கூசுகிறதே!
இதை மியூசியத்திற்கு மீட்டிக் கொடுத்தால் மிகப் பெரிய தொகை பரிசாகக் கிடைக்கும்!
ஆனால் எனக்குத் தெரிய வேண்டிய தெல்லாம், இதை யார் திருடி பொம் மைக்குள் மறைத்து வைத்தனர் என்பதுதான்!
அதைக் கண்டுபிடிக்கும் வரை இந்த வைரத் தையும், சிலையையும் உங்கள் பொறுப் பிலேயே விட்டுச் செல்கிறேன் ஷெரீப்!
காதரின் இந்த வைரத்தைத் திருடி யிருப்பாள் என நினைக்கிறீர்களா சார்?
இல்லை டெஸ் மாண்ட்...அப்படி இருந்தால் சிலையை சும்மா வெளியே போட்டு வைத்தி ருக்க மாட்டாள்!
ஆனால் எனக்கு ரீட்ஸ் தம்பதிகள் மீதுதான் சந்தேகம்! அவர்கள் ஏன் இங்கு அவசர அவசர மாக வர வேண்டும்?
டெஸ்மாண்ட், காரை கொண்டு போய் வைக்கோல் போருக்குப் பின்புறம் நிறுத்து. நான் காதரி னுடன் பேச வேண்டும். அவளுக்கு ஆபத்து ஏற்படலாம்!
ஓ யெஸ்!


எனக்கு ஆபத்தா? ஆனல் இப்போது தான் ஜென்னி அத்தை என்னை டவுனுக்கு வரும்படி போன் பண்ணினார்களே மிஸ்டர் கிர்பி! அவருடைய கணவர் அவசர வேலையாக நியூயார்க் போய் விட்டாராம்.. அத்தைக்கு உடல் நிலை சரி இல்லையாம்!
அவளிடம் போகாதே!
உன்னுடைய தோழி களுடன் வேறு எங்காவது தங்கி இரு. அவர்களுடைய போன் நம்பரை என்னிடம் கொடு. இந்த விஷயத் தில் என்னை நம்பு...!
சற்றைக்கெல்லாம் இருள் கவ்வியபோது புயல் மேகமும் சூழ்ந்தது!
ஸ்டுவேர்ட் ரீட் நேரத்தை வீணாக்கும் ரகமல்ல...
காதரின் வீட்டில் வெறும் சிலையை மட்டும் எடுக்கக் கூடாது... பயங்கரமான திருட்டு நடந்தது போலச் செய்ய வேண்டும்!
மழையும் பெய்யத் துவங்கி விட்டது
வீடு இருட்டாக இருக்கே... ஜென்னி கேட்டுக் கொண்டதன் பேரில் காதரின் டவுனுக்குப் போயிருக்க வேண்டும்...!
காலடிச் சப்தம்! யாரோ வருகிறார்கள்... பால் காரி சிலைக்காகத்தான் வருகிறார்களா எனப் பார்ப்போம்!


வீட்டில் யாரும் இருக்கிறார்களா இல்லையா? என்பதை முதலில் கதவைத் தட்டி உறுதி செய்யனும்!
இந்த கிராமத்து ஜனங்கள் சட்டு புட்டுன்னு தூங்கப் போய் விடுவாங்க!
அது ஸ்டூவர்ட் ரீட்டாகத்தானி ருக்கும்! பயல் நல்ல நோக்கத்தோடு வரவில்லை என்பது உறுதி!
பால்காரி சிலைக்காக வந்தவருக்கு புயல் ரூபத்தில் வரவேற்பு கிடைத்தது!
க்ராஷ்
வாவ்! எவ்வளவு பக்கத்தில் மின்னல் அடிக்கிறது...
இந்த கிராமத்து மக்கள் கதவைப் பூட்டாமல் செல்வதும் வசதியாகத் தான் இருக்கு! இதனால் என் வேலையும் எளி தாகி விட்டது...
கிளிக்
ஆனால் கரண்ட் இல்லை போல் தெரிகிறதே..!
இதை சாதாரண திருட்டுச் சம்பவ மாக்க ஏதாவது வெளிச்சம் வேண்டுமே...!


அதோ - ஒரு எண்ணெய் விளக்கு இருக்கு வெளிச்சத்தைக் கொடுக்க அது போதும்!
இந்தப் பகுதியில் அடிக் கடி கரண்ட் போய்விடும் போலத் தெரியுது. என் வேலைக்கு கொஞ்ச மாவது வெளிச்சம் இருக்கணும்!
பெரிய திருட்டு நடந்தது போலக் காட்டி விட்டு, சிலையும் தவறுதலாக விழுந்து உடைந்து விட்டதாகக் காட்டணும்!
எவ்வளவு நாளா உன்னைத் தேடிக் கொண்டிருக் கிறேன்...
'மடேர்'னு ஒரு போடு பேபி!
பயலிடம் துப் பாக்கி இருக்கிறது!


வைரமே வா! கமான்.. கமான்...
இதில் காணோமே.. ஆனல் இதில் தான் இருந்திருக் கணும்!
தவறி கீழே விழுந்திருக்கும்!
ரீட் தான் வைரத்தைத் திருடியவன் என்பது புரி கிறது! ஹம்ம்ம்.. துப் பாக்கியை மேஜை மீதல்லவா வைத்திருக் கிறான்!
இதுதான் அருமை யான சந்தர்ப்பம்! துப்பாக்கியை முதலில் அவனிட மிருந்து எடுக்கணும்!
யார் நீ? என்ன செய்கிறாய்..?
விளக்கு கீழே விழுந்து தீப்பிடித்த நேரத்தில் இருவருக்குமிடையே திடீர் சண்டை மூண்டது!




தீ வேகமாகப் பரவியது போலவே இருவரும் தீவிரமாக சண்டை போட்டனர்.
ஜன்னலில் ஏதோ வெளிச்சம் தெரியுதே! என்ன அது? குளிருக்கு இத்மாக மிஸ்டர் கிர்பி கணப்பு அடுப்பில் நெருப்புப் பற்ற வைத் திருக்கிறாரோ?
இந்தா பிடி, "கிராமத்து ஸ்பெஷல்!"
கனமாக விழுந்த கிர்பியின் குத்து ரிட்டை மண்ணைக் கவ்வச் செய்தது!
அருகில் போய் பார்ப்பதுதான் நல்லது!


நல்ல நேரத்திற்கு வந்தாய் டெஸ்மாண்ட்! தரை விரிப்பில் பிடித்துள்ள நெருப்பை... எதையாவது எடுத்து அடித்து அணை!
ரைட்! நீங்கள் செய்வது போலத்தானே சார்!
நெருப்பு அணைந்திருச்சு சார்!
தேங்க்ஸ் டெஸ்மாண்ட். ரீட் எழும் முன்பு ஒரு பொருள்ளைத் தேடியாக வேண்டும்!
இதோ - கிடக்கு துப்பாக்கி!
ஆ! கரண்ட் வந்துருச்சு சார்!
டெஸ்மாண்ட, ஷெரிப்பை கூப்பிடு! நமது நண்பரை நான் பார்த்துக் கொள்கிறேன்!
எப்போது வேண்டுமானாலும் நான் இங்கு வரலாம் என்று என் மருமகள் என்னிடம் சொல்லியுள்ளாள்!
சிலையை அடித்து நொறுக்கலாம் என்று சொன்னாளாக்கும்!
பயலை நான் உள்ளே தள்ளுகிறேன்!
யெஸ். மிஸ்டர் கிர்பி. இதோ - வீட்டுக்கு வருகிறேன்!



பார்க்க ரொம்ப மோசமாக இருக்கு! ஆனால் ஒழுங்கு படுத்தி விட முடியும்!
குட் - ஒரு மணி நேரத்தில் என்னை ஷெரீப் ஆபீஸில் வந்து சந்தி. உன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் சேதி ஒன்றை உனக்குச் சொல்வேன்.
இந்த அவசர அறுவை சிகிச்சைக்கு நீங்கள் ராத்திரி நேரத்தில் இங்கு வந்தது ரொம்ப சந்தோஷமாக இருக்கு டாக்டர்!
ஹம்ம்ம்.. டாக்டர் பட்டம் வாங்கி விட்டு என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கு?
பல் டாக்டர்களாகிய எங்களிடம் விரைவில் ஒட்ட வைக்கும் பசை இருப்பது உபயோகமாக இருக்கு!
ஓ. ஜிம். எனக்கு பென் மாமா அனுப்பிய சின்னஞ்சிறு பால்காரி சிலை உடைந்து கிடக்கு. இதை எப்படி மிஸ்டர் கிர்பி அனுமதித்தார்?
தவறி விழுந்து உடைந்திருக்கும் காதரின். இப்ப நாம் ஷெரீப் ஆபீசுக்குப் புறப்பட்டுச் செல்வோம்!
வீட்டை சரிப்படுத்தி விட்டோம் மிஸ்டர் கிர்பி. ஆனால் என்னிடமிருந்த அந்தச் சிலை உடைந்து கிடந்தது!
கவலைப் படாதே காதரின்! நல்ல சேதி வைத்திருக்கிறேன்!

F. 9.


புத்தம் புதிய சிலை போல இது இருக்கு!
வொண்டர்புல்!
அதுமட்டுமல்ல... ஸ்டார் ஆப் ஜான்ஸி பார் வைரம் இதனுள் இருந்தது... இதற்காக
உனக்குப் பெருந்தொகை வெகுமதியாகக் கிடைக்கும்!
கேஸ் முடிந்து ஊர் திரும்பினார் ரிப்!
அச்சச்சோ! எனக்குப் பிடித்தமான பைப் இப்படி பீஸ் பீஸாக வருதே!
டெஸ்மாண்ட், அந்த பால்காரி சிலை விவகாரத்தில் அற்புதமாக உன் கை வண்ணத்தைக் காட்டினாய்! திரும்பவும் ஒரு தடவை...
ஹெ! ஹெ!! ஐயா இல்லாமல் ஒரு வேலையும் நடக்காதே!
நீங்கள் சரியான ஆளிடம் தான் வந் திருக்கிறீர்கள் சார்!
முற்றும்





டேஞ்சருக்கு அந்த அறையில் திருடன் பதுங்கியிருப்பது எப்படித் தெரிந்தது? கண்டு பிடித்து எழுதி


க்ரைம் - க்விஸ் (9)
WANTED
அட.... ஒரு ரசிகர் கடிதம்!
''யோவ் டேஞ்சர், அடுத்த தடவை ப்ளூ மூன் ஹோட்டலுக் குள் அடியெடுத்து வைத்தீரானால் பிணமாகத் தான் வெளியே போவீர்...'' ஹ்ம்ம்ம்...
போட்டுத் தள்ளக் காத்திருப்பது யாரோ?
ஹ்ம்ம்ம்... பாரில் ஐந்து பேர் இருக் கிறார்கள்! என்னைப்
இவ்வளவு பிரியமாய் அழைத்த பின்னரும் போகாமல் இருப்பது சரியில்லை!
ஹோட்டலைச் சுற்றி மஃப்டியில் நம் ஆட் கள் நிற்கிறார்கள்!
கையெழுத்தில்லாத மொட்டைக் சடுதாசி!



நானாக வம்பில் போய் மாட்டிக் கொண்ட மாதிரி நடிக்கலாம்!
TOILET
ஆஹா! எதிர்பார்த்த மாதிரியே பயல் வேலையை ஆரம் பித்து விட்டான்!
லைட் போனது தற் செயலாக அல்ல...! துப்பாக்கியா? அதை இப்படிக் கொடு!
டும்!
ஆஆஆ!
பயல் நழுவி விட்டான்... ஆனால் அவனோட கண்ணாடி மட்டும் சிக்கிவிட்டது!
இனி கண்ணாடியின் சொந்தக்காரன் யாரென்று கண்டு பிடிப்பதில் சிரமம் இருக்கிறது!
அட... எல்லாப் பயல் களுமே கண்ணாடி போட்டிருக்கிறான் களே! ஆனாலும் குற்ற
வாளி யாரென்பதை கண்டுபிடித்து விட்டேன்!
நீங்களும் கண்டுபிடித்திருப்பீர்களே! எப்படி என்று எழுதி அனுப்புங்கள்!



# க்ரைம் க்விஸ் (4) விடைகள்



"வேங்கை வேட்டை" இதழில் வந்திருந்த இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் (4)க்கான விடைகளை ஏராளமான வாசகர்கள் அனுப்பியுள்ளனர்! குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி வாசகர்கள் இதோ:

1. **J. வேணி (வயது 11)**
   D/o. J. சுபத்ரா தேவி,
   303, 2-வது தெரு, காந்திபுரம்,
   கோவை - 12

2. **நா. குமரதரன் (வயது 15)**
   J / 42, ஜவகர் நகர்,
   பூமியான் பேட்டை, புதுவை - 5.

3. **திருமதி. சாந்தி கணேஷ் (வயது 25)**
   8, பதினைந்து மண்டப தெரு,
   திருவையாறு - 613 204.



***இவர்கள் மூவருக்கும் ரூ. 75/- மதிப்புள்ள Gift Set பரிசாக அனுப்பியுள்ளோம்***
***வெற்றி பெற்றவர்களுக்கு Congrats! மற்றவர்களுக்கு Better luck next time!***

## க்ரைம் க்விஸ் (4) சரியான விடை!

இரும்புப் பெட்டியை உடைத்தது பீட்டராகத்தானிருக்கும் என்ற சந்தேகத்தில் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் அவனது வீட்டிற்குச் செல்கிறார்! பீட்டரின் மனைவியோ 'அவர் குறட்டை போட்டு மணிக்கணக்கா தூங்கிக்கிட்டு' இருப்பதாகச் சொல்கிறாள்! தூங்கப் போகும் முன் யாராக இருந்தாலும் கண்ணாடியை நிச்சயம் கழற்றியிருப்பார்கள்! ஆனால் பீட்டரோ கண்ணாடியோடு தூங்குவதாக நடித்ததால் டேஞ்சர் கண்டுபிடித்து விட்டார்!

# க்ரைம் க்விஸ் (5)

வெற்றி பெற்ற வாசகர்கள் விபரம் :

| | |
|---|---|
| 1. **R. சரவணன் (வயது 18)**<br>86, நேரு தெரு,<br>காரைக்கால் - 609 602. | 2. **தி. திருமலை (வயது 14)**<br>228, தெற்கு உத்திர வீதி,<br>ஸ்ரீரங்கம், திருச்சி - 6. |

3. **M. தங்க லக்ஷ்மி (வயது 32)**
No. 1, சௌந்திரராஜன் தெரு,
தி. நகர், சென்னை - 11.



***மூவருக்கும் ரூ. 75/- மதிப்புள்ள Milton Flask அனுப்பப்பட்டுள்ளது. கன்கிராட்ஸ்!***

## சரியான விடை!

இடது காலில்லாத மருமான் டின்ஸ்டேல் பிரபுவைக் கொலை செய்து விட்டு ஜன்னல் வழியாகத் தப்பியிருக்கும் பட்சத்தில் பனியில் கால் தடங்கள் இடம் மாறி இருக்க வேண்டும். அதாவது கட்டைக் கால் ஏற்படுத்தும் தடம், இடது பக்கமாக வும், நிஜக் கால் தடம் வலது பக்கமாகவும் இருந்திருக்க வேண்டும்! ஆனால் ஒற்றைக்கால் மருமானை மாட்டிவிட வேண்டுமென்ற நோக்கத்தில் நிஜக் கொலை காரனான இன்னொரு மருமான் செயற்கையாகத் தடங்களை ஏற்படுத்தும் முயற்சியில் தவறு செய்து விட்டான்! அவனது பாச்சா இன்ஸ்பெக்டர் டேஞ்சரிடம் பலிக்குமா - என்ன?

## க்ரைம் க்விஸ் 8 & 9

### விடை அனுப்ப வேண்டிய கூப்பன்

க்ரைம் க்விஸ் (8) & (9)
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்
த. பெ. எண். 374,
சிவகாசி - 626 123.



**விடைகள் அனுப்பக் கடைசித் தேதி : 15-6-'94**


கண்ணுக்கு குளுமையான பச்சைப் பசேல் நிலப் பரப்பு... இதமான இளங் காற்று.. ரம்மியமான இந்த கிராமீய சூழலுக்கு ஈடு இணையே கிடையாது ஜானி! ஓய்வெடுக்க அருமையான இடம்! டாண்ணு ஏழு மணிக்கு இந்தப் பக்கமாக ஒரு 'வாக்' வந்து விடுவேன்! என்னை இந்த ஜனங்களுக்கு தெரிந்திருக்கிறதோ இல்லையோ.. இவர்களை நான் நன்றாக தெரிந்து வைத்திருக்கிறேன்.. அதோ பாரேன்.. அந்தக் கட்டிடத்தில்...
காற்றில் கரைந்த கொலையாளி!
..வரிசையாக இருண்டு கிடக்கும் அறைகளுக்கு இடையில் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சோதனைக் கூடம்.. - ஓ..! அங்கே -
கடவுளே! ஏதோ ஆக்ரோஷமாக சண்டை போட்டுக் கொண்டிருக் கிறார்களே!


ஜானி.. ஓடி வா..
போய்
என்னவென்று
பார்ப்போம்!
அமைதியான
இடம் என்று சற்று
முன்தான்
சர்ட்டிபிகேட்
கொடுத்தீர்கள்!
அடடா.. முன்
வாசல் கதவு
தாழிட்டிருக்கிறது!
டமில்!


ஜானி..
ஜாக்கிரதை!
என்னைப் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம் கமிஷனர்.. நான் உள்ளே போகிறேன்.. நீங்கள் இங்கே நின்று யாராவது வெளியேறுகிறார்களா என்று கவனித்துக் கொண்டிருங்கள்!
சோதனைக்கூடம் மறுபக்கம் இருக்கிறது!
கதவு பூட்டியிருக்கிறது!
கொல்லைப்புறமாக முயன்று பார்க்கலாம்!


சில வினாடி களுக்குப் பின் -
இதுவும் பூட்டியிருக்கிறது.. ஓ.கே.. பலப் பிரயோகம் செய்ய வேண்டியதுதான்!
மடீர்!
முடிவில் ஜானி சோதனைக் கூடத்தை சென்ற டைந்தபோது -
சே.. காலம் கடந்து வந்திருக்கிறேன்!
ஊஹூம்.. இவருக்கு நான் செய்யக் கூடியது எதுவுமில்லை! இதயத்தில் தோட்டா பாய்ந்திருக்கிறது! அந்த ஆசாமியையாவது காப்பாற்ற முடியுமா.. பார்ப்போம்!




ஐயோ.. புரபஸர் பாஸினுக்கு என்ன வாயிற்று?
பாவம் போய் விட்டார்! சரி.. இங்கே என்னதான் நடந்தது?
என் பெயர் ராபர்ட்.. புரபஸரின் அஸிஸ்டண்ட்! நாங்கள் வேலையில் மும்முரமாக இருந்தபோது முகமூடி அணிந்த யாரோ ஓர் ஆசாமி திடீரென்று பிரசன்னமானான்.. என் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான்.. அதன் பிறகு என்ன நடந்ததோ.. எனக்குத் தெரியாது!
குற்றவாளி இன்னமும் உள்ளேதான் இருக்கிறான்.. அவன் வெளியேற முயற்சித்திருந்தால் வெளியில் நிற்கும் என் நண்பர் - போலீஸ் கமிஷனர் - அதைக் கண்டு குரல் கொடுத்திருப்பார்!
இந்த பீரோ.. உள்ளே ஓர் ஆள் நிற்கிற அளவுக்கு பெரியதாக இருக்கிறது...
எங்களுடைய உடைகளும், புரபஸருக்கு சொந்தமான சில சாமான்களும் மட்டுமே உள்ளே இருக்கின்றன!


மற்ற அறைகளில் அல்லது மாடியில் ஒளிந்து கொண்டி ருப்பானே!
குகைகள் கூட உண்டு... இங்கே!
தள அறைக்குச் சென்ற ஜானிக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.
முதல் மாடியி லிருந்து அறைகளினுள் நோட்டம் விட்டான்...
..பிறகு குகைகளை ஆராய்ந்தான்..
யாரையும் காணோமே! எப்படி தப்பி வெளியேறி யிருப்பான்?
ஓ..!


என்ன தேடுகிறீர்கள்?
கறுப்பு டயரியை! இதில்தான் புரபஸர் தன் கண்டுபிடிப்பை எழுதி வைத்திருந் தார்.. திசுக்களின் தேய்மானத்தை குறைக்கும் பார்முலா.. மாயமாக மறைந்து விட்டது!
குற்றவாளியின் நோக்கம் அதுதான் என்கிறீர்களா?
ஆமாம்!.. அரிய கண்டு பிடிப்பு.. அது! சராசரி ஆயுட்காலத்தை 20 ஆண்டுகள் நீடிக்கக் கூடியது என்றால் பார்த்துக் கொள்ளேன்!
பிரமிப்பூட்டுகிறது..! அவனுடைய நோக்கம் புரிகிறது.. ஆனால் அவன் எப்படி மாயமாக மறைந்தான் என்றுதான் விளங்கவில்லை!
அதையடுத்து -
யாராவது வெளியேறியதை பார்த்தீர்களா.. கமிஷனர்?
இல்லை..! என்ன தான் நடந்தது?
எவனோ புரபஸரை கொன்றுவிட்டான்.. யாருமே வெளியேறவில்லை என்கிறீர் கள் நீங்கள்.. இருபுறமும் கதவுகள் உட் பக்கமே தாழிடப்பட்டிருக்கின்றன.. ஆனாலும் குற்றவாளி உள்ளே இல்லை - எப்படி?
வேறொரு இரகசிய வழி இருக்கலாம்.. குகைகளை பார்த்தாயோ?
புரட்சிப் படையினர் பதுங்கி வாழ அமைக்கப்பட்ட குகைகள் அவை... மறு பக்கம் வாயிலோ, கதவோ கிடையாது!



சரி.. முதலில் போலீஸுக்கு போன் செய் கிறேன்.. அப்புறம் வீட்டை அங்குலம் அங்குலமாக தேடிச் சலித்து விடுவோம்!
போலீஸ் வந்து அதிகாரபூர்வ சோதனை நடந் தும் பலனில்லை..
உங்கள் கருத்து என்ன டாக்டர்..
7 மணி முதல் 7.30க்குள் மரணம் சம்பவித் திருக்கிறது..
அப்போது மணி 7.05 என்று எங்களுக்கு துல்லியமாகவே தெரியும்!
கைரேகைகள் அகப்பட்டனவா?
புரபஸர் மற்றும் அவருடைய அஸிஸ் டண்டின் ரேகைகள் உள்ளன.. கொலை யாளி இங்கே தொட்ட பொருட்களில் படிந்திருந்த ரேகைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன.
தொழிலில் அனுபவசாலி போலிருக்கிறது!
அல்லது இந்த வீட்டை நுணுக்க மாக தெரிந்து வைத்திருக்கும் ஆசாமியாக இருக்கலாம்!
மிஸ்டர் ராபர்ட்... புரபஸர் தன் நண்பர்களை அடிக்கடி சந்திப்பதுண்டா?
அப்படி என்றில்லை.. சில வேளைகளில் ஓய்வாக இருக்க விரும்புவார்!
பார்ஜியன் என்ற அண்டை வீட்டுக் காரரையும் இந்த வீட்டை எங்களுக்கு வாடகைக்கு அமர்த்திக் கொடுத்த மாஸ்ஸே என்ற புரோக்கரையும் தவிர எங்களுக்கு வேறு எவரோடும் இங்கே பழக்கம் கிடையாது!
ஓ.கே.. அவர் களை சந்தித்து விசாரித்தால் ஏதாவது உருப் படியான தகவல் கிடைக்கலாம்!



பின்னர்...
புரபஸர் எதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார் என்று தெரியுமா மிஸ்டர் மாஸ்ஸே?
என்ன ஸார் இது.. கொடுமை!
அவருடைய முயற்சி வெற்றி யடைந்தால் அந்த பார்முலா பல மில்லியன் விலை போகும் என்று கேள்விப் பட்டேன்.
அந்த பார்முலாவை கைப்பற்ற தொழில் முறை உளவாளியோ அல்லது அப்படி வேறு யாரோ அவரை கொன்றிருக்கக் கூடும் என்பது எங்கள் யூகம்...
அப்படியும் இருக்குமா... என்ன?
அதுமட்டுமல்ல மிஸ்டர் மாஸ்ஸே.. கொலையாளி தடயமே இல்லாமல் மாயமாக மறைந்து போய் விட்டான் அவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசிய வழி ஒன்று இருப்பது போல்!
கதைகளில் வருகிற மாதிரி அல்லவா நிகழ்ந் திருக்கிறது!
சிந்தியுங்கள்.. யுத்தத்தின் போது பதுங்கி வாழும் இடமாக இருந்திருக்கிறது அந்த வீடு.. அங்கே, கொலையாளி மட்டுமே அறிந்த இரகசிய வழி இருக்கலாமில்லையா?
இது பற்றி நீங்கள் மிஸ்டர் பார்ஜியனை விசாரித்தால் ஏதாவது விபரம் கிடைக்கலாம்..
அதாவது... அண்டை வீட்டுக்காரர்!
ஆமாம்... யுத்தத் திற்கு முன் அந்த வீட்டை கட்டிய எஞ்சினீயர் அவர்தான்!


அதைத் தொடர்ந்து
அந்த வீட்டை வடிவமைத்த எஞ்சினீயர் நான்தான்..
யுத்தத்திற்குப் பின் புனர் நிர்மாணம் செய்யக் கோரினார்கள்... செய்தேன்.. ஆனால் நீங்கள் நினைக்கிற மாதிரி புதிரான அமைப்பு எதையும் நான் கட்டவில்லையே!
ஊஹூம்.. கொஞ்சம்கூட பிடிகிடைக்க வில்லையே ஜானி!
இருவரில் எவரேனும் பொய் சொல்லியிருந்தால்? வாருங்கள்.. கொலை நடந்த இடத்திற்கே திரும்பிச் செல்வோம்.
பத்து நிமிடங் களுக்குப் பின் -
ஜானி... ஆபத்து!


டயரை குறி வைக்க வேண்டும்
டுமீல் டுமீல் டுமீல்
சே.. தப்பி விட்டானே!
இப்படி அசுர வேகத்தில் போகிறவனை இவ்வளவு தொலைவிலிருந்து சரியாக குறி வைத்து அடிப்பது என்பது முடியக் கூடிய காரியமில்லை.. கமிஷனர்..
புதிருக்கு விடை கொலை நடந்த வீட்டில்தான் கிடைக்கும் - வாருங்கள் போவோம்!


மீண்டும் புலனாய்வு தொடங்கியது - முதலில் சோதனை கூடத்தில்..
நான் வேலை செய்து கொண்டிருப்பது ஒன்றும் உங்களுக்கு இடைஞ்சலாக இராதே.. என்னால் தூங்க முடியவில்லை - அதான்
புரிகிறது உங்களுடைய நிலைமை -
பின்னர் - குகைகளில்...
ணங்!
சே.. சுவரில் எந்த இடத்திலும் இடைவெளி இருப்பதான சப்தம் வரவில்லையே!
கதவு.. ஒரு.. உருவம் -
உருவம்.. உங்களையும் என்னையும் போல இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு கண்கள் ஒரு மூக்கோடு...
நீ சொல்வது.. -
ஜாக்கிரதை... கமிஷனர்..
காலடி சப்தம் கேட்கிறதா..? அந்த உருவம்தான் படிக்கட்டில் ஏறுகிறது..


டுமீல்! டுமீல்!
அடக் கடவுளே!
ராபர்ட்!
மறுநாள் பகலில் எதுவும் விசேஷமாக நிகழவில்லை.. ஜானி தொடர்ந்து புலனுய்வு நடத்திக் கொண்டிருந்தான்.. கமிஷனர் போர்டன் போலீஸ் ஸ்டேஷனில் ராபர்ட், பார்ஜியான் மற்றும் மாஸ்லேயிடமிருந்து வாக்குமூலம் வாங்கினார்
..நான்.. மும்முரமாக வேலையில் ஈடு பட்டிருந்தேன்.. அப்போது..
ஓர் உருவம் வந்து உங்களை தாக்கியது.. அப்படித்தானே? - குற்றவாளிகள் வாடிக்கையாக கடைப்பிடிக்கும் யுக்தி!
அன்று மாலையில் கமிஷனர் ராபர்ட் டோடு மீண்டும் கொலை நடந்த மாளிகைக்குப் போனார்..
ஸார்.. அங்கே ஏதோ கலாட்டா!



ஐயோ.. ஜானியை தாக்கு கிறார்களே !
ஓடி வா.. கொலையாளி மீண்டும் இங்கே வந்திருக்கிறான்.
உள்ளே தாழிடப் பட்டிருந்த கதவை உடைத்து தகர்த் தார் கமிஷனர்..
க்ராக்க்
டுமீல்!
..பின்னர் ஒரே ஓட்டமாக சோதனை கூடத்திற்கு ஓடினார்..
ஜானி!


பயப்படாதீர்கள் இன்ஸ்பெக்டர்.. ஒருவன் தன்னைத் தானே அடித்துக் கொள்ளும்போது வலிக்கவே வலிக்காது.. இது பற்றி ராபர்ட்டுக்கு நன்றாகவே தெரியும்!
ராபர்ட்.. விஷமத்தனமாக எதையும் செய்ய நினைக்க வேண்டாம்.. லேசாக அசைந்தாலும் கமிஷனரின் கைத்துப்பாக் கியிலிருந்து தோட்டா வெளிப்பட்டு உன்னை வீழ்த்தி விடும். இது ஒன்றும் சினிமா காட்சியல்ல.. ஜாக்கிரதை
குற்றவாளி இந்த ராபர்ட்தான் கமிஷனர்.. விலங்கைப் பூட்டுங்கள்!
உன்னைத் தாக்கிய இவனுடைய கூட்டாளி எங்கே, ஜானி?
இந்தப் பெட்டிக் குள்ளே.. - கமிஷனர்!
ஓ.. புரஜக்டர்!
ஆமாம்.. எதிரில் உள்ள வெள்ளை சுவரில் படம் விழச் செய்தது இதுதான்!


நீங்கள் சற்று முன் கண்ட காட்சி கூட படம்தான்!
நீங்கள் தினசரி சரியாக இரவு 7.05க்கு இவ்வழியாக வாக்கிங் போவதை ராபர்ட் கவனித்திருக்கிறான். அதற்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன் புரபஸரை கொன்று விட்டு, நாம் வந்தபோது மசாலா படம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட துண்டுப் படத்தை புரஜக்டர் மூலம் திரையிட்டிருக் கிறான்.
அடுத்து உடனடியாக புரஜக்டரை அலமாரியில் ஒளித்து வைத்துவிட்டு பின்னர் அகற்றியிருக்கிறான்.. அது அவன் செய்த தவறு.. எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்திய அம்சமே அதுதான்..
ஏதோ.. இரகசிய வழி இருப்பதாக ரீல் விட்டு நம் கவனத்தை பார்ஜியான் மற்றும் மாஸ்ஸே மீது திசை திருப்பி விட முயன்றான். நாம் உண்மையை வெளிக் கொண்டு வந்து விடுவோமோ என்ற பயத்தில் நம்மை கொல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன்.
இல்லையா.. ராபர்ட்?
ஆமாம்... புரபஸரின் கண்டு பிடிப்புக்கு ஏகப்பட்ட விலை கொடுத்து வாங்கிக் கொள்ள பலர் தயாராக் இருந்தனர்.. ஆராய்ச்சியில் எனக்கும் பங்குண்டு.. பார்முலாவை விற்று, கிடைக்கும் தொகையில் எனக்கு பங்கு கொடுக்கு மாறு புரபஸரை வற்புறுத்தினான்..
...மறுத்துவிட்டார்! எனவே, அவரை தீர்த்துக் கட்டிவிட்டு பார்முலாவை சொந்தமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டேன்..
ஸாரி.. ராபர்ட்., சிறைச்சாலை உனக்காக காத்துக் கொண்டிருக் கிறது...
..புறப்படு!
முற்றும்.


ஹப்பாடா... ஒரு வழியா கடைசிக் கணக்கும் முடிஞ்சுது!
வீட்டுப்பாடம் போட போக்கிக்கு உதவி பண்றீங்களாக்கும்...?
யா... கணக்குன்னா ஐயாவுக்கு உசிரு!
பாவம்... அடுத்த வருஷத்திலேர்ந்து அவனுக்கு நீங்க ஒத்தாசை பண்ண முடியாது!
ஏனும்?
அவன்தான் இரண்டாம் கிளாஸுக்குப் போயிடுவானே...!



வெனிஸ் நகரம் - கடலை ஒட்டிய ஆற்றின் மத்தியிலிருந்த சிறிய தீவு மொத்தத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது அந்த புராதன மாளிகை...
குட் மார்னிங் மரியோ... - மிஸ்டர் அக்புனே எங்கே இருக்கிறார்?
கட்டிட உச்சியில்.. மேடம்!
ஹலோ மாக்ஸ் - மதிய உணவுக்கு வீட்டுக்கு கிளம்புங்கள்!
ஹெல்மெட் அணியாமல் இங்கே வராதே என்று எத்தனை முறை சொல்வது?


...உன்னை அப்படியே கடித்து தின்ன வேண்டும் போலிருக்கிறது!
தின்ன வேண்டியதுதானே!
என்ன - உட்கார்ந்து விட்டீர்கள்?
ஒரு சின்ன குழப்பம்!
அவசர வேலை ஒன்று பாக்கி நிற்கிறது - ஒரு மணி நேரம் நீ பொறுத்திருப்பாயா?
அதுதானே வேண்டாம் என்கிறேன்!
சொன்ன நேரத்திற்கு என்றைக்கு நீங்கள் வந்தீர்கள்? - கிளம்புங்கள்!
ஆமாம்.. அது என் சுபாவத்தில் ஊறிப் போய் விட்டது!
அந்த ராட்சஸ ஜந்துவை எப்போது நொறுக்கப் போகிறீர்கள்?
ஓ.. அந்த ரெட் க்ரைபன்னயா?... அது - இன்னொரு தலைவலி!


[Gryphon (or) Griffin = கழுகின் தலையையும், இறக்கைகளையும் சிங்கத்தின் உடலையும் கொண்ட விநோதமான ஜந்து]
நானூறு வயதான பழைய மாளிகையை செதுக்கித் தள்ளி புனர் நிர்மாணம் செய்வதென்பது என்ன சாதாரண காரியமா?
இந்த கடுமையான பணிக்கு, அந்த ரோமானிய செல்வந்தர் ஏற்ற நபரைத்தான் தேர்ந்தெடுத் திருக்கிறார்!
என் மீது அவர் அப்படி நம்பிக்கை வைத்திருக்கும் போது நான் கடமையில் கவனம் செலுத்த வேண்டாமோ?
ஓ.கே.. உங்களுக்கு வேலைதான் முக்கியமாகி விட்டது - இல்லையா? என்னோடு உணவருந்த அங்கே காத்திருப்போர் ஏராளம்..
அவர்களில் யாரேனும் ஒருவரை நான் அழைத்துக் கொள்கிறேன்!
மாடஸ்டி..! அன்பே..! என் கண்ணே - என்னை விட்டுப் போகாதே! இன்னொருவ னோடு நீ உண வருந்துவதா.. ஊஹூம் - தாங்காதம்மா!
ஓய்.. கோமாளி! படகை கவிழ்த்து விடாதீர்!
அதைப் பற்றி எனக்கு அக்கறை யில்லை.. உன் கல் நெஞ்சம் உருக வேண்டும் - அவ்வளவுதான்!


சரியாக இரண்டு மணிக்கு ஹோட்டல் 'பாரினி'க்கு வந்து சேர முடியுமா - சொல்லுங்கள்?
நன்றி என் தேவதையே..! மதியத்தோடு வேலையை முடித்துக் கொண்டு 'டாண்' என்று வந்து சேருகிறேன்.. பார்!
ஆற்றின் குறுக்கே வெனிஸை நோக்கி படகை செலுத்தினாள் மாடஸ்டி!
கால்வாய்களினூடே புகுந்து அவள் தன் ஃப்ளாட்டை நோக்கி விரைந்த போது -
மேலே போலீஸ் தேடுகிறது.. கீழே பதுங்கி நிற்கிறான் ஒரு சிறுவன்..
அவனை காப்பாற்றத் தீர்மானித்தாள் மாடஸ்டி.
டேய்..! அங்கே நின்றால் போலீஸ் கண்டுபிடித்து விடும்!


நைஸாக படகினுள் குதித்து தள விரிப்பினுள் ஒளிந்து கொள்
நன்றி.. மேடம்!
உஷ்ஷ்.. எதுவும் பேசாதே!
இனி நீ வெளியே வரலாம்! உன் பெயர் என்ன..? போலீஸ் ஏன் உன்னைத் தேடுகிறது?
என் பெயர் ஆஞ்சலோ!
பழக்கடையிலிருந்து ஒரு மாதுளையை எடுத்தேன்!
திருடுவது தப்பில்லையோ?
தப்புத்தான் மேடம்... ஆனால் சில வேளைகள்லே அவசியமாயிடுது!
ஓ..! - ஏனோ என்னால் உன்னைக் கண்டிக்க முடியவில்லை!



பின்னர் -
ஷவரில் அழுக்குப் போக நன்றாக குளித்தாயா.. ஆஞ்சலோ?
ம்ம்..! இந்த ஃப்ளாட்டில் நீங்க மட்டும்தான் இருக்கீங்களா மேடம்?
ஆமாம்.. ஏன் கேட்கிறாய்?
இல்லை - இங்கே இன்னொருத்தரும் இருக்காப்பலே தோணுது... உள்ளே ஒரு ரேஸர் இருந்திச்சு!
என் நண்பர்தான் அவர்! நம்மோடு உணவருந்த அவரும் வந்து சேர்ந்து கொள்ள இருக்கிறார்.. கிளம்பு - போகலாம்!
சாப்பிடவா..? - ஹைய்..யா!
ஹோட்டலில் -
மேடம்! பொடியனின் உடை அசிங்கமாக இருக்கிறதே!
ஆனால் சுத்தமாக இருக்கிறான்!.. ரொம்ப பசி இவனுக்கு - ஒரு ஓரமாக சீக்கிரம் ஒரு மேஜையை ரெடி பண்ணு
ஆஞ்சலோ.. படிக்கத் தெரியுமா உனக்கு?
ஏதோ.. சுமாரா படிப்பேன் மேடம்!


அயிட்டங்களை இவனை சொல்ல விட்டால் நிச்சயம் வீட்டுக்கு வயிற்று வலியோடுதான் போவான்!
ஒரே ஒரு வேளை வயிறு முட்ட சாப்பிடுவதால் ஒன்றும் கெட்டு விடாது.. அவன் இஷ்டப்படியே சாப்பிடட்டும்!
சொன்ன நேரத்துக்கு அக்யுனோ வந்து விட்டான்!
ஓ.. இவன்தான் எனக்கு வில்லனு?
ஐயே.. - இவன் பெயர் ஆஞ்சலோ!
..நிஸி என்றொரு தங்கை இருக் கிறாளாம்.. பாவம் - அநாதைகள்!
அந்தப் பெண்ணை வெளியில் பார்த்தேன்.. ஜன்னல் வழியாக இங்கே நடப்பதை பார்த்து பொருமிக் கொண்டு நிற்கிறாள்..
..ஆசை காட்டி இவனை நீ கூட்டி கொண்டு போய் விடுவாயோ என்ற ஆத்திரம்!
ஹலோ.. குட்டி மேடம்! நீங்களும் இங்கே வரலாம்!
...முதலில் நீங்கள் ஒரு பிச்சைக் கார சிறுவனோடு வந்தீர்கள்.. இப்போது இவர் தன் பங்குக்கு ஒரு பிச்சைக்கார சிறுமியை கூட்டிக் கொண்டு வந்து நிற்கிறாரே?
என்ன ஒரு மனப் பொருத்தம்.. எங்களுக்குள் - பார்த்தாயா?


இவர்கள் பிச்சைக்காரர்கள் இல்லை.. சில்லறை திருட்டு நடத்தும் அறியா குழந்தைகள்.. கவலைப்படாதே.. ஸ்பூன், கத்தி எதுவும் இங்கிருந்து காணாமல் போய்விடாதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!
நிஸி..! அப்போ.. உன்னை போலீஸ் புடிச்சுக்கிட்டு போகலியா?
அந்த ஆள் குண்டா இருந்ததாலே ஓடி வர முடியலை - தப்பிச்சுக் கிட்டேன்!
இவங்களோட நீ போறதை பார்த்தேன் - பின்னாலேயே வந்தேன்
இந்த மேடம்தான் என்னை போலீஸ்கிட்டேர்ந்து காப்பாத் தினாங்க., அப்புறமா - அழகான ஃப்ளாட்டில் அருமையான ஷவர் குளியல்! பிறகு - சாப்பிட.. இங்கே கூட்டி வந்தாங்க!
உன் கிட்டேர்ந்து என்னை பிரிச்சுக் கொண்டு போயிடுவாங்கன்னு.. பயந்துட்டியா? இஷ்டத்துக்கு ஒரு வெட்டு வெட்டிட்டு வீட்டுக்கு ஓடி வந்திடலாம்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன்
பார்த்தியா.. உனக்கு கொண்டு வரலாம்னு உணவை நான் நைஸா எடுத்து ஒளிச்சு வச்சிருக்கேன்!


சாப்பிட்டானதும் -
இவர்களை நீ என்ன செய்வதாக உத்தேசம்?
குறிப்பாக எதுவுமில்லை!
ஏதாவது ஒரு அநாதை ஆசிரமத்திலே உங்களை சேர்த்துவிடட்டுமா..?
ஐயோ.. வேண்டாம் மேடம்! ஏற்கனவே, ஸாண்டா மரியா அநாதை இல்லத்திலே வச்சிக்கிறேன்னு சொன்னாங்க - ஆனா.. நாங்கதான் ஓடி வந்திட்டோம்!
வெள்ளை உள்ளம் படைத்த நல்ல பிள்ளைகள்.. ஆதரிக்கத்தான் ஆளில்லை..
ஆனால் ஒருவருக்கு மற்றவர் துணை இருக்கிறது! எதை மனதில் வைத்துக் கொண்டு நான் இதைச் சொல்கிறேன் என்று உங்களுக்கு புரிய நியாயமில்லை.. மாக்ஸ்!
காரணம்..?
பசங்களுக்கு தனி இல்லமாம்.. பொண்ணுங்களுக்கு தனி இல்லமாம்.. நாங்க சேர்ந்து ஒரே இடத்திலே இருக்க முடியாதாம் - அதான்!
பிரிந்து சுகமாக வாழ்வதை விட சேர்ந்து இருந்து பசி பட்டினியோடு கஷ்டப்படவும் இவர்கள் தயார் - ஆச்சரியம்தான்!
இப்படியொரு பாசப் பிணைப்பை நீங்கள் ... முடியாது மாக்ஸ்!

F-10


மேடம்.. இதுக்கு மேலே என்னாலே சாப்பிட முடியாது! நாங்க.. போறோம்!
ஏய்... நிஸி - இந்தா காசீப்... வாயை நன்றாக துடை!... அப்படியே அதை நீ வைத்துக்கொள்...
இந்தாருங்கள் பணம்.. செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்.. ஒருவரையொருவர் நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும் - என்ன?
நன்றி.. மேடம்
வரோம்.. மேடம்!
குட் பை.. மேடம்!
அவரோட பெட்டியை நீ எடுத்திட்டு வந்தது சரியில்லை ஆஞ்சலோ
ஒண்ணும் கொறைஞ்சு போயிட மாட்டார்! அந்த அம்மாவோட பெட்டியை எடுத்தாற முடியலை.. ரொம்ப ஜாக்ரதையா இருக்காங்க.
ஐயோ பாவம் பார்க்கிற ஆள் இல்லை நான்.. ஆனாலும் அவர்களுடைய கதை என் நெஞ்சை உருக்கிவிட்டது!
அட.. எங்கே போயிற்று என் ப்ரீப் கேஸ்?


ஓ..! ஆஞ்சலோ இருக்கிற இடத்திலே எதையும் கவனக் குறைவாக போட்டு வைக்கலாமோ?
ஆஞ்சலோ..? யார் அந்த பொடியளு..? நன்றாக இருக்கிறது கதை - உண்ட வீட்டுக்கே இரண்டகம் என்பார்கள் - அப்படியாகி விட்டது
திருடி வந்த ப்ரீப் கேஸை ஆராய்ந்தார்கள்..
சில கடிதங்கள்.. காகிதங்கள்.. வரைபடங்கள்தான் இருக்கு.. சே - நாம வித்து காசாக்கிற மாதிரி - எதுவுமே இல்லை..!
பழுப்பேறிப்போன அந்த காகிதம் என்னது?
தெரியலை எனக்கு!
ரொம்ப நாளைக்கு முன்னாலே எழுதியிருக்காங்க.. தேதி இருக்கு.. அல்போரினின்னு பேர் இருக்கு..
அந்த ஆளு பெரிய பணக்காரர்... ஆத்து நடுவிலே இருக்கிற பங்களாவிலே இருக்கார்.


பிற்பகலில் -
என் பெட்டியை தூக்கிக் கொண்டு போன தறுதலைகளைவிட இன்றிரவு விருந்துக்கு அழைத் திருக்கிற நபரை நான் அதிகமாக வெறுக்கிறேன்.
அப்படியிருக் கையில் அழைப்பை பெற்று நாம் போகத் தான் வேண்டுமா?
உன்னை கூட்டிச் சென்று அவன் கண்ணில் காட்டி பொறாமைத் தீயில் அவன் கருகுவதை கண் குளிர காணப் போகிறேன்!
நீங்கள் போக இது காரணம்.. ஆனால் அவர் உங்களை அழைத் திருப்பதற்கான காரணம்?
வெனிஸ்வாசிகள் எப்போதுமே எதிராளிகளிடம் அதிக அன்பு காட்டி அருகே வைத்துக் கொள்வார்கள்.
அப்போது தானே சமயம் வாய்க்கும் போது முதுகில் கத்தியை பாய்ச்ச சௌகரியமாக இருக்கும்!
உங்கள் இருவருக்குமிடையே மனக் கசப்பு வரக் காரணம்?
தன் பங்களாவை மொத்தமாக என்னுடைய ரோமானிய வாடிக்கையாளருக்கு அல்போர்னி விற்றார்...
பேரத்தை நடுவிலிருந்து முடித்துக் கொடுத்தவன் நான்.. விலையை கூட்டுவதற்கு நான் ஒத்தாசை புரிந்தால் லஞ்சம் தருவதாக ஆசை காட்டினார்.


என்னருமை சமர்த்து ஆர்க்கிடெக்ட் அதற்கு என்ன பதில் சொன்னாராம்?
இங்கிலாந்தில் பள்ளி நாட்களில் நான் கற்ற சில கெட்ட வார்த்தைகள் அப்படியே மொழி பெயர்த்தேன் அவரிடம். அதற்கெல்லாம் வேறு ஆளைப் பார் என்று மூஞ்சியில் அடிக்காத குறையாக சொன்னேன்.
தன் இரண்டாவது மாளிகையை விற்க வேண்டிய நெருக்கடி அவருக்கு ஏன் வந்தது?
முதல் மாளிகையை பராமரிக்க நிறைய பணம் தேவைப்பட்டது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்தைய டாம்பீக வாழ்க்கையை இப்போது வாழ நினைத்தால் எப்படி கட்டுபடியாகும்?
மகாப் பிரபு மாதிரி ஆடம்பரமாக சுகபோகங்களோடு வாழ நினைக்கிறார். இன்றிரவு விருந்தில் நேரடியாகவே அதை நீ பார்த்து புரிந்து கொள்ளலாம்!
மோட்டார் போட்டில் போவது அவ்வளவாக எனக்கு பிடிக்கவில்லை
கண்டோலாவுக்கு சொல்லியிருக்கிறேன்!
நீங்கள் கோட்டை விட்ட ஃப்ரீப் கேஸில் முக்கியமானது ஏதாவது இருந்ததா?
முக்கியமானது ஒன்று இருந்தது.. ஆனால் அதை இழந்ததால் ஒன்றும் கெட்டு விடாது.



என்ன புதிர் போடு கிறீர்கள்..
உன் ஆர்வத்தை தூண்டவே அப்படிச் சொன்னேன்..
மாளிகையின் உச்சியிலிருந்த குவிந்த கூரையை பிரிக்கையில் நூறாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒரு கடிதத்தை கண்டெடுத்தேன்.
அதில் என்ன எழுதி யிருந்தது..?
அவசரப்படாதே... பொறு! மாளிகையை விற்கும் போது ''அதனில் மற்றும் அதனோடு இருக்கும் அனைத்தையும்'' சேர்த்து தருவதாக வாசகம் இருக்கிறது.
மாளிகையோடு சேர்த்து வேறு சில 'விஷயங்களையும்' விற்கதான் சம்மதித்து இருப்பதை அல்போரினி தெரிந்து கொள்ள நேர்ந்தால் பெரிய மனித வேடத்தைக் கலைத்து விட்டு தெருச்சண்டைக்கு இறங்கி விடுவார்!
சஸ்பென்ஸ் தாங்க வில்லை எனக்கு!
சஸ்பென்ஸ் அப்படியே இருக் கட்டும்.. அந்த ரெட் க்ரைபனை நாங்கள் நொறுக்கும் போது வெளியில் எடுத்துக் காட்டு கிறேன்.. நீயே பார்த்து தெரிந்து கொள் அது என்னவென்று!


ஒரு சிறு குறிப்பு கூட தரமாட்டீர்களா?
அது இன்னதுதான் என்று இப்போதைக்கு எனக்குக் கூட நிச்சயமாகத் தெரியாது என்பது தான் நிஜம்! உன்னைப் போலவே அதுவும் புதிரான சங்கதியாக இருக் கிறது - இன்னமும்!
என்னைப் போலவா? இன்னமும் என்னிடம் உங்களுக்குத் தெரியாத ரகசியம் என்ன இருக்கிறது?
உண்மைதான்..! ஆனால் உன் கடந்த கால வாழ்க்கை? நீ யார்? எங்கே நீ வளர்ந்தாய்? எப்படி இவ்வளவு பெரிய பணக்காரி ஆனாய்? எப்போது மணம் புரிந்து கொள்ளப் போகிறாய்? அவ்வப்போது உனக்கு போன் செய்யும் அந்த கார்வின் யார் - உனக்கு என்ன உறவு?
வில்லி கார்வின் யாரென்று தெரிய வேண்டும் உங்களுக்கு அவ்வளவு தானே? வரச் சொல்கிறேன் - பழகிப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்!
எனக்கு பொதுவாக இங்கிலீஷ் காரர்களை பிடிப்பதில்லை.. அதனால்தான் -
உண்மைக் காரணம் எனக்குத் தெரியாதா... என்ன? இதோ.. மாளிகை வந்துவிட்டது


அல்போரியின் ஆடம்பர மாளிகையில்...
சொன்னேனில்லையா..? எப்படி ஒரு டாம்பீகம்.. பார்த்தாயா!
வாஸ்தவம்தான்!
மேலோட்டமாக மினுக்கிறது.. ஆனால் உள்ளுக்குள் புரையோடிப் போயிருப்பதாக தெரிகிறது!
நொடியில் சரியாக புரிந்து கொண்டு விட்டாயே!
விருந்தாளிகளிடையே சுற்றிக் கொண்டு வந்தார் அல்போரினி..
மிஸ் பிளைஸியையும் நீங்கள் அழைத்துக் கொண்டு வந்தது எனக்கு சந்தோஷத்தை அளிக் கிறது.. அக்யுனோ!
ராஜா - ராணி காலத்துக்குள் நுழைந்துவிட்ட பிரமிப்பை ஏற்படுத்துக்கிறது மிஸ்டர் அல்போரினி!
இக்கால ஆடம்பரங்கள் ஏனோ எனக்கு ரசிக்கவேயில்லை!


அக்யுனேவோடு கொஞ்சம் தனியாக பேச வேண்டும் - அழைத்துப் போகிறேன்..! நீ கோபித்துக் கொள்ள மாட்டாயே!
தாராளமாக அழைத்துப் போங்கள்!
விருந்து முடியும் போது பொழுது நள்ளிரவையும் தாண்டி விட்டது...
அல்போரினி ஏன் அப்படி நொந்து காணப்படுகிறார்?
நான்தான் காரணம் என்று நினைக்கிறேன்!
மாளிகையை விற்றபோது அறியாமலேயே அரிய சிலவற்றையும் தான் இழந்து விட்டதை அறிந்து கொண்டுள்ளார்.
ரெட் க்ரைபன் பற்றிய இரகசியம் அவருக்கு எப்படியோ தெரிந்து விட்டிருக்கிறது.. இல்லாவிடில், அந்த ராட்சஸ ஜந்துவை விலைக்கு வாங்க அவர் ஏன் ஆர்வம் காட்ட வேண்டும்?
அந்த இரகசியம் தான் என்ன?
இப்போது சொல்ல மாட்டேன்..! திடீரென்று உன்னை பிரமிப்பில் ஆழ்த்தப் போகிறேன்!


ரெட் க்ரைபனை விற்க மாட்டேன் என்று அல்போரினியிடம் மறுத்து விட்டீர்களாக்கும்?
ஆமாம்.. மில்லியன் டாலர் கொடுத்தாலும் தரமாட்டேன் - அது என்னுடையதாக இருந்தாலும்!
ஹலோ..! யார்.. மிஸ்டர் அல்போரினியா..? என்ன விஷயம் - இப்போதுதானே பிரிந்தோம்.! ஒருவேளை என் தொப்பியை அங்கே மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டேனு..?
தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும்.. நாம் உடனடியாக பேசித் தீர்க்க வேண்டிய அவசர காரியம் ஒன்று!
ரெட் க்ரைபன் பற்றியா?...
..அதைப் பற்றி என் முடிவைத்தான் சொல்லி விட்டேனே!
வேறு விஷயம்! இந்த தீவுக்கு உரிய அடிப்படை உரிமை பற்றியது..
..உங்களுடைய வாடிக்கையாளரின் உரிமை சட்டப்படி கேள்விக் குறியாகி விடும் போலிருக் கிறது!
இது என்ன புது விவகாரம்.. இதோ பத்தே நிமிடத்தில் நான் அங்கே வந்து சேருகிறேன்!


மோட்டார் போட்டில் போய் விட்டு நொடியில் வந்து விடுகிறேன் - டார்லிங்!
இந்த அகால வேளையில் அங்கே போகத்தான் வேண்டுமா?
விற்பனை செல்லாது என்று புதிதாக பிரச்னையை கிளப்பு கிறார் அல்போரினி.. அவருடைய விஷமத்தனம்தான் என்ன என்று தெரிந்து கொள்ளாமல் என்னால் தூங்க முடியாது..
எங்கே போயிற்று என் சாக்ஸ்?
இந்தாருங்கள்! - சீக்கிரம் திரும்பி விடுங்கள்!
ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன் - காப்பியோடு நீ ரெடியாக இரு.. வரட்டுமா!
மாக்ஸ் சென்று ஒரு மணி நேரம் கழித்து போன் மணி அடித்தது..
அல்போரினி பேசுகிறேன்! அகால வேளையில் தொந்தரவு பண்ணுவதற்கு ஸாரி மிஸ் பிளைஸி!
அப்போது நான் போன் செய்த போது உடனே கிளம்பி வருவதாக அக்யுனே சொன்னார்.. ஆனால் இன்னமும் வந்து சேரக் காணோம்
அப்படியா..? அவர் உடனடியாக கிளம்பிச் சென்றாரே.. ஐம்பது நிமிடங்களுக்கு முன்பே அவர் அங்கே வந்திருக்க வேண்டுமே!


ஆச்சரியமாக இருக்கிறதே..! வழியில் ஏதேனும் விபத்து..? சேச்சே அப்படி எல்லாம் இராது..
மாடஸ்டியின் ஃப்ளாட்டிலிருந்து அல்போரினியின் மாளிகை வரை நீண்ட குறுகிய கால்வாயில்..
நிறுத்து.. அங்கே படித்துறையில் ஏதோ கிடக்கிறது.
மோட்டார் படகு கவிழ்ந்து கிடக்கிறது! கால்வாயில் இப்படியொரு விபத்து எப்படி சாத்தியம்? இது - உங்களுடைய நண்பருடைய படகா.. மேடம்?
ஆமாம்!
கடவுளே..!
படகை அப்படியே போலீஸ் தலைமையகத்துக்கு விடு!
விடிகாலை வேளையில் - போலீஸ் தலைமையகத்தில்..
படகு கவிழ்ந்த இடத்தை நாங்கள் வலை போட்டு தேடியதில், அதற்கு சற்று முன் உயிர் பிரிந்த இந்தப் பிரேதம் சிக்கியது மிஸ் பிளைஸி..


பிரேதத்தை அடையாளம் காட்ட வேண்டிய வேதனையை உங்களுக்கு கொடுக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்.. வேறு யாராவது நண்பர்களை -
அவசியமில்லை.. நானே பார்க்கிறேன்.
ஆமாம்.. இவர் மாக்ஸ் அக்யுனோவேதான்!
நன்றி.. மேடம்!
என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக!
நன்றி...!
.... மாக்ஸ் - நிம்மதியாக துயிலுங்கள்!
இங்கிலாந்தில் ட்ரெட் மில்லி லிருந்த வில்லி கார்வினோடு தொலைபேசியில் உடனடியாக தொடர்பு கொண்டாள் மாடஸ்டி..
இளவரசி..! நீண்ட இடைவேளைக்குப் பிறகு உன் குரலை இப்போது கேட்க சந்தோஷமாக இருக்கிறது.. நிலைமை நன்றாக உள்ளதா?
இல்லை.. வில்லி! விபத்து ஒன்றை ஜோடித்து மாக்ஸை யாரோ கொன்று விட்டார்கள்!
இதென்ன ாடுமை.. இதோ - அடுத்த ஃப்ளைட்டில் புறப்பட்டு அங்கே வந்து சேருகிறேன்!
நன்றி.. வில்லி! ஆனல் வரும் போது சில விசேட உபகரணங் களை நீங்கள் சேகரித்துக் கொண்டு வரவேண்டும் - விபரமாக சொல் கிறேன்.. கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்!



மாடஸ்டி தீவு மாளிகைக்குப் போனாள் -
வியாபார விஷயமாக மிஸ்டர் அல்போரினி பாடவ் போயிருக்கிறார்.. ஏதாவது தகவல் சொல்ல வேண்டுமா.. மிஸ் பிளைஸி?
இல்லை.. பிறகு வந்து பார்த்துக் கொள்கிறேன்.!
தோட்டத்தில் கிடந்தது இந்த கைக்குட்டை... உங்களுடைய இனிஷியல் பொறித்திருக்கிறது! - இந்தாருங்கள்!
ஆமாம்.. என்னுடையதுதான்! நேற்றிரவு விருந்தின் போது தவற விட்டு விட்டேன் போலிருக்கிறது!
நிஜம் அதுவல்ல! நிஸியிடம் நான் கொடுத்த கைகுட்டை இது! ஆஞ்சலோவோடு அவள் இங்கே வந்திருக்கிறாள்..
ரெட் க்ரைபன் பற்றிய இரகசியத்தை அல்போரினி தெரிந்து கொண்டது எப்படி என்று இப்போது விளங்கி விட்டது..
ஸாண்டா மரியா அநாதை இல்லத்தில் -
ஆமாம்.. மேடம்.. ஆஞ்சலோ, நிஸி என்ற இருவரையும் இங்கே சேர்த்துக் கொள்ள நாங்கள் எவ்வளவோ பிரயத்தனப் பட்டோம்.. ஆனல் - ஓடி ஓடிப் போய்விடுவார்கள்.
அவர்களை இப்போது நான் எங்கே பார்க்கலாம்.. மதர்?
ஊர் கோடியில் பாழடைந்த ஒரு கிடங்கின் மூலையில் வசிக்கிறார்கள் - நான் வழி சொல்கிறேன்!


அவர்களுக்கு அறிவுரை கூறி அழைத்து வந்து எங்கள் இல்லத்தில் சேர்த்து விட்டீர்கள் என்றால் புண்ணியம் கிடைக்கும் உங்களுக்கு
பிரிந்து வாழ அவர்கள் பிரியப்படவில்லை - ஆனாலும் முயன்று பார்க்கிறேன்!
சிதில மடைந்து கிடந்தது அந்த கிடங்கு..
ஆஞ்சலோ..? ..நிஸி?
மேடம்.. காப்பாத்துங்க.
இவங்க எங்..களை.. கொல்ல.. பார்..க் கிறாங்க
அந்த பொம்பளையை கவனி - போ..
அஹ்..!
ஜாக்கிரதை..!
முரடன் தன்னை நோக்கி பாய்ந்து முன்னேறிய நொடியில் தன் மேலாடையின் ஜிப்பை சர்ரென்று இழுத்து விட்டுக் கொண்டாள் மாடஸ்டி..


தன் காலணியை உதறி எறிகையில் ஸ்கர்ட்டை கவசமாக விரித்துப் பிரித்துக் கொண்டாள்..
மின்னல் வேகத்தில் கைப்பிடி குழாயின் கீழாக பாய்ந்தாள்..
சத்!
எதிரி வெட்டுண்ட மரம் போல் சரிந்தான். ஆஞ்சலோவும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு மற்றவனை கடித்தான்..
ஆவ்வ்..
ஆஞ்சலோ.. - ஓடு!
கூர் முனை கொண்ட ஸ்டிலெட்டோ அங்கே சூழ்ந்திருந்த இருட்டினூட பளபளத்தது.


ஸ்டிலெட்டோ - வீசி எறிய பயன்படாது!
ஆனால்.. அதை கையாள திறமை பெற்றவனாக தெரிகிறது.
ஆஞ்சலோ.. உன்னை ஓடிவிட சொன்னேனே!
நிஸியை இப்படியே விட்டுப் போக மனமில்லை.. மேடம்!
ஆஞ்சலோ.. என்ன நடக்குது - இங்கே?
மேடம் ஒருத்தனை தலையிலே உதைச்சு விழவச்சிட்டாங்க.. ஆனா - மத்தவன் கையிலே கத்தி இருக்கு!
அங்கிருந்த கம்பத்தின் பின்னே போய் நின்று கொண்டாள் மாடஸ்டி
இனி அவன் பளிச் சென்று என் மீது பாய முடியாது.. மெள்ள நெருங்கி என்னை பின்னுக்கு விலகச் செய்ய முயற்சிப்பான்.. - வரட்டும்!



இதுதான்.. தருணம்!
முனையில் சகடை பிணைக்கப் பட்ட முரட்டுக் கயிற்றை லாவகமாக வீசினாள் மாடஸ்டி - அவனைச் சுற்றி மாலையாக விழும் வகையில்!
மறுகணம் அவள் அதை சுண்டி இழுத்த போது -
ஙங்!
ஐ..யோயோ..!
அவன் தடுமாறிப் போன அதே கணத்தில் கத்தி இருந்த கையில் ஓங்கி விட்டாள் ஓர் உதை..
சத்!


அடுத்து - காங்கோ அவனுடைய கபாலத்தில் இடியென தாக்கியது
அடிச்சு நொறுக் குங்க.. மேடம்!
ஒரு பொண்ணு இவ்வள்வு புத்தி சாலித்தனமா, ஆக்ரோஷமா சண்டை போட்டு நான் பார்த்ததே இல்லை..
பாராட்டு.. இருக் கட்டும்! நான் கேட்கிற கேள்வி களுக்கு மளமள வென்று பதில் சொல்லுங்கள்..!
என் நண்பருடைய பெட்டியை திருடிய நீ அதனுள்ளே ஒரு கடிதம் இருந்ததை பார்த்தாயா.. அதை ஏன் அல்பேரரினிடம் கொண்டு போய் கொடுத்தாய்?
அவருடைய பெயர் அதிலே இருந்திச்சு.. கொண்டு போய் கொடுத்தா காசு தருவார்னு நெனைச்சோம்!
நாங்க நெனைச்ச மாதிரியே பணம் தந்தார் - இதோ.. ஆயிரம் லிரா!
கடிதத்தில் என்ன வெல்லாம் எழுதி யிருந்தது?
எப்பவோ ஒரு சிலைக்கு அடியிலே பொதைச்ச தங்கம், வைரம் பத்தி எழுதியிருந்திச்சு.. இந்தாங்க மேடம் உங்க ஸ்கர்ட்!
ரெட் கிரைபன்! ஓ.. என்னை ஆச்சரியத் தில் ஆழ்த்தப் போவதாக மாக்ஸ் சொன்ன இரகசியம் இதுதானா!


இந்த பொட்டியை நாங்க திருடிட்டதுக்கு உங்க ப்ரண்ட் கோபமா இருக்காரா?
அவர் இறந்து விட்டார்! இங்கே உங்களை கொல்ல ஆட்களை அனுப்பிய அதே நபர்தான் அவரையும் கொன்று விட்டான்.
அச்சச்சோ..! நாங்க அந்த லட்டரை அவர்கிட்டேர்ந்து திருடிட்டதாலே அவரை கொன் னுட்டாங்களா?
ஹூம்.. நிஜம் அதுதான்.. பீற்றல் காசுக்காக அதை இந்தப் பிள்ளை கள் அவரிடம் விற்றதால் வந்த வினைதானே இத்தனையும்!
அந்த பழியை இவர்கள் மீது நான் சுமத்தப் போவதில்லை..
இல்லை.. நிஸி! - எப்படியும் இந்த அநியாயம் நிகழ்ந்து தானிருக்கும்!
செத்துப் போயிட்டானுகளா.. மேடம்?
இல்லை - வெறும் மயக்கம்தான்!
இங்கே என்ன நடந்தது என்று இவர்கள் திரும்பிப் போய் தங்கள் பாஸிடம் தெரிவிக்க வேண்டும்
போலீஸுக்கு இப்போ சொல்லு வீங்களா?


உங்க நண்பரை கொன்ன மாதிரி அந்த ஆள் உங்களையும் கொன்னு போட்டிட மாட்டாரா?..
முயற்சிக்கலாம்.. ஆனால் மாக்ஸ் மாதிரி இல்லாமல் நான் உஷாராகி விட்டேன் அல்லவா..?
அனாதை இல்லத்தில் -
மதர்.. இவர்கள் இருவரையும் குறைந்த பட்சம் அடுத்த ஒரு வார காலத்திற்காவது, பிரித்து வெவ்வேறு இல்லங்களுக்கு அனுப்பமாட்டீர்கள் என்று இவர்களுக்கு உத்தரவாதம் கொடுத்து அழைத்து வந்திருக்கிறேன்!
கவலை வேண்டாம்.. அப்படியே செய்கிறேன் மேடம்!
ஒரு வாரத்திற்குள் நிச்சயம் திரும்பி வந்துவிடுவேன்.. அதற்கிடையில் ஓடிப் போய்விட முயற்சிக்கக் கூடாது, வெளியே கூட தலை நீட்டக் கூடாது.. உங்களை கொல்ல எதிரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் - புரிந்ததா?
ஆனால் அவர்களோடு எப்படி தனித்து போராடுவீர்கள் மேடம்?
ஆனால் நான் தனித்து மோதப் போவதில்லை - விவேகமான நண்பர் ஒருவர் உதவிக்கு வந்து கொண்டிருக்கிறார்.
அல்போரினி என் மீது அக்கறை காட்டி ஆட்களை அனுப்பி வைக்கக் கூடும்.
ஃப்ளாட்டிலிருந்து போய்விட வேண்டும்.. விமான நிலையத்தில் வில்லிக்கு செய்தி விட்டுச் சென்றால் போதும் - அந்த மாளிகையை இன்றிரவே ஒரு நோட்டம் விட்டால் நல்லது!


பன்னிரண்டு மணி நேரம் கழித்து காரிருளில் ஒரு சிறு படகு அந்த தீவை சென்றடைந்தது...
இங்கே நான் தனித்து இல்லை என்று தோன்றுகிறது.. யாரோ மும்முரமாக ஏதோ காரியம் பண்ணிக் கொண்டிருப்பதான அரவம் கேட்கிறது.
விசேட பைனாகுலர் மூலமாக மாளிகை யின் முகப்பை நுணுக்கமாக ஆராய்ந்தாள் மாடஸ்டி..
தட்டைப் படகு ஒன்று.. பளு தூக்கி இயந்திரம்.. ஒரு டஜன் ஆட்கள்
ஓ.. ரெட் கிரைபனை அப்புறப்படுத்த அல்போரினி
உடனடி நடவடிக்கையில் இறங்கி விட்டானா?
ஆனால் அவன் இப்போது இங்கே இருப்பானா..? - சந்தேகம்தான்! எதற்கும் கீழே போய் பார்த்து விடலாம்!
சிலை முக்கியமல்ல..! அதன் பீடம் முழுமையாக அகற்றப்பட வேண்டும் - மிகுந்த கவனத்தோடு!


தரையில் ஆழமாக அமைக்கப் பட்டிருக்கிறது. துளைப்பான் இல்லாமல் அதை அகற்றுவது கடுமையான காரியமாக இருக்கும் பிரபு!
கூலிக்கு அமர்த்தப் பட்டவர்கள் போலும்! அதிகமாக பலாத்காரத்தை
பிரயோகிக் காமல் அவர்களை முடக்கிப் போட வேண்டும்!
ஒரு டஜன் ஆட்கள் இருக்கிறார்கள். விடிய வெகு நேரம் இருக்கிறது - இருக் கிறதை வைத்து சாதிக்க முயற்சி செய்!
ஒரு தள்ளு வண்டி நிறை சம்மட்டி களும், உலோகத்தை வெட்டும் உளிகளும் படகிலிருந்து இறங்கின..
கொக்கி போட்டுத் தூக்க முதலில் நாம் பாறைகளை வெட்ட வேண்டும்!
பின்னர் கிரேனின் கொக்கிகளை -
அங்கே மேலே ஏதோ தீப்பற்றிக் கொண்டு எரிகிறது..
தீயா..?
மாளிகையின் மேல் தளத்தில் -
நம் தோழர்களின் கவனத்தை தற்காலிகமாக திசை திருப்பி வைக்கவே இந்த யுக்தி..


ஓடுங்கள் எல்லோரும் - போய் தீயை அணையுங்கள்
மாத்யூஸ்! என்ன கலாட்டா.. அங்கே?
மேல் தளத்தில் தீ.. கொஞ்சமாகத் தான் எரிகிறது.. ஆனால் அது பரவினால் பிரதான நிலத்திலிருந்து போலீஸ் படகு வந்து சேரக் கூடும்!
வேகமாக ஏறுங்களடா.. சோமாறிகளா..
துரதிர்ஷ்டவசமாக அல்போரினி இங்கில்லை.. இல்லையேல், மாக்ஸுக்கு நேரிட்டது போல் இவனுக்கும் ஒரு 'தற்செயலான' விபத்தை இங்கே நிகழ்த்தி விடலாம்!
இரண்டு நிமிடங்களுக்குப் பின் -
மேலே ஒருவன் மட்டும் தனித்திருக்கிறான் - ஆஞ்சலோ, நிஸா இருவரின் கதையை முடிக்க முயன்ற ஜோடியில் ஒருவன்!


காங்கோவினுல் மா்ம அடி ஒன்று கொடுத்தாள் மாடஸ்டி.
கொஞ்ச நேரம் மயங்கிக் கிடந்தால் போதும்.. பிறகு இவனுல் ஒரு காரியம் ஆக வேண்டியிருக் கிறது..
மேல் தளத்தில் தீயை மிகச் சுலபமாக அணைத்து விட்டார்கள்.
பழைய நியூஸ் பேப்பர்கள்தான் - விசாரப்பட ஏதுமில்லை!
ஆனுல்.. அவை எப்படி தானுக தீப்பற்றிக் கொண்டன?
அப்போது
அங்கே உங்களுடைய ஆள் கிரேனைக் கொண்டு எங்களுடைய உபகரணங்களை அள்ளி படகில் சேர்க்கிறானே - ஏன்?
ஆனால் கிரேனை இயக்கிக் கொண்டிருந்ததோ மாடஸ்டி!
எ..ன்..ன..து?
மாத்யூஸ் ஏணிப் படிகளில் மளமள வென்று கீழே இறங்கினான்
அடேய்.. முட்டாள்! நிறுத்து - என்ன சேஷ்டை இது?



உபகரணங்கள் இருந்த தள்ளு வண்டியை பற்றிக் கொண்ட கிரேனை உயர்த்தி அரை வட்ட மடிக்கச் செய்தாள் மாடஸ்டி
ஐயோ.. போ ச்சு.. அத்தனை உபகரணங்களையும் கடலில் கொட்டிவிட்டான்.. சண்டாளன்.
லூஜி மயக்கம் தெளிந்து எழுந்தான்..
என்ன ஆயிற்று எனக்கு?
பைத்தியக்காரா.. நீ செய்த காரியத்தை பிரபு கேள்விப் பட்டால் தோலை உரித்து விடுவார்!
ஹே..? நான்.. எ..ன் தலை.. ஏன் இப்படி வலிக்கிறது.. எனக்கு என்ன ஆயிற்று?
செய்வதையும் செய்துவிட்டு நாடகமா ஆடுகிறாய்..? முட்டாளே அத்தனை உபகரணங் களையும் கிரேனைக் கொண்டு அள்ளி ஆழ்கடலினுள் போட்டு விட்டாயேடா.. பாவி!


உபகரணங்களை அள்ளி நான் கடலினுள் போட்டேனு... இது என்ன புதுக் கதை?
நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம் - இங்கே உன்னைத் தவிர வேறு எவரும் இல்லையே!
இல்லை.. யாரோ இங்கே வந்திருக்க வேண்டும் - என் தலையில் அடித்தது அந்த நபராகத் தான் இருக்கும்!
இதை ரசிக்க மாக்ஸ் இங்கில்லையே!
உபகரணங்கள் கடலுக்குள் போய் விட்டன.. எங்களுக்கோ மூழ்கத் தெரியாது -
ரெட் கிரைபனை இன்றிரவுக்குள் அகற்றுவது என்பது முடியாத காரியம் என்றாகிவிட்டது.. ஸார்!
மாத்யூஸும், லூஜியும் அல்போரினியிடம் போய் நடந்ததை விவரித்தனர்.
மீண்டும் கோட்டை விட்டு விட்டீர்களா?
தப்பு எங்கள் மீது இல்லை.. பிரபு! தீவில் பில்லி சூனிய ஆதிக்கம் இருக் கலாம் என்று சந்தே கிக்கிறோம்..
முட்டாள்.. எங்கேயாவது பேய் கிரேனை இயக்கியதாக கேட்டி ருக்கிறாயா? இது நேற்று உங்களை உதைத்து அனுப்பிய அந்தப் பெண்ணின் வேலையாகத் தானிருக்கும்!



மாடஸ்டி பிளைஸி அவள் பெயர்.. அவள் எங்கே இருந்தாலும் தேடிப் பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்.
ஒரு சிறிய ஹோட்டலில் நன்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் மாடஸ்டி..
உதய வேளைக்கு சற்று முன் அங்கே எழுந்த சிறு சலசலப்பைக் கேட்டு விழிப்புற்றாள்.
நான்தான்.. இளவரசி!
நீ விமான நிலையத்தில் விட்டு வைத்திருந்த குறிப்பை பெற்றுக் கொண்டு நேராக இங்கே வந்துவிட்டேன்.
ஹாய்ய்.. வில்லி - உங்களை பார்க்கும் போது எவ்வளவு உற்சாகமாக இருக்கிறது தெரியுமா?
ரெட் க்ரைபனின் பீடத்தின் கீழே பொக்கிஷம் புதைக்கப் பட்டிருப் பதை மாக்ஸ் எப்படி தெரிந்து கொண்டான் பின் எவ்வாறு கொல்லப்பட்டான் என்ற விபரங்களை மாடஸ்டி வில்லி கார்வினிடம் விவரித்தாள்..
பாவம்.. மாக்ஸ்!
நல்ல மனிதர்


மதியூகி.. திறமைசாலி.. கடின உழைப்பாளி - யாருக்கும் தீங்கு நினைக்காதவர்.. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எளிய கொள்கையுடையவர்..
அல்போரினியை நான் விடப்போவதில்லை!
உன் கோபம் நியாயமானது!
நாம் என்ன செய்யப் போகிறோம்.. இளவரசி?
அந்த பொக்கிஷங்கள் மீது அல்போரினி கை வைக்க அனுமதிக்கக் கூடாது - முடிந்தால் அவனை பழி வாங்க வேண்டும்.
ஓ.கே.. மாக்ஸின் மரணத்தினால் நீ மனம் நொந்து போயிருக்கிறாய்.. பொறுப்பை என்னிடம் விட்டு விட்டு நீ வீட்டிற்குத் திரும்பிச் சென்று ஓய்வெடுத்துக் கொள்.. அல்போரினியை உண்டு இல்லை என்றாக்கிவிட்டு பொக்கிஷங்களை மீட்டு வந்து சேருகிறேன்!
நன்றி.. வில்லி! ஆனால் அனைத்தையும் நான் ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருக்கிறேன்.. அத்தோடு அந்தக் கயவனை என் கையாலேயே பழி தீர்த்தால்தான் என் நெஞ்சக் குமுறல் அடங்கும்!


மாடஸ்டியின் திட்டப்படி, மதிய வேளையில் கார்லின் அல்போரினி பிரபுவை தேடிப் போனான்.
இங்கிலீஷ்காரனா? என்ன வேண்டுமாம்?
ஸ்பெஷலிஸ்ட்? - எதில்?
தகர்ப்பதில்! விசேட சூட்டுக் கோல் வைத்திருக்கிறானாம்! எவ்வளவு உறுதியான கான்கிரீட்டாக இருந்தாலும் வெண்ணையை கத்தி அறுப்பதுபோல்.. தகர்த்து விடுமாம்!
ஓ..! இப்படியொரு அதிர்ஷ்டமா..? ஆனால்.. - இவன் அக்யுனோ வின் ஃப்ளாட்டுக்கு போயிருப்பானே? அங்கே மாடஸ்டி பிளைஸியை சந்தித்து பேசியிருப்பானே?
சாத்தியமில்லை பிரபு! அவள் ஃப்ளாட்டை காலி செய்து விட்டுப் போய்விட்டாள்! மாத்யூஸும், லூஜியும் இன்னமும் அவளை தேடியலைந்து கொண்டிருக் கிறார்கள்!
குட் மார்னிங் மிஸ்டர் ஷா! மிஸ்டர் அக்யுனோ விபத்து ஒன்றில் துர்மரணம் எய்தியதை கேள்விப் பட்ட பிறகும் என்னைத் தேடி நீங்கள் வந்த காரணம்?
வேலை முடிந்து விட்டதா.. இல்லை பாக்கி நிற்கிறதா என்று தெரிந்து கொள்ள!
இங்கிலாந்திலிருந்து எனக்கு அக்யூனோ போன் செய்யும் போது உங்கள் பெயரையும் குறிப்பிட்டான்.. உங்களுக்காகத்தான் அவன் பணியாற்றுகிறான் என்று நினைத்து வந்தேன் - ஒரு வேளை என் யூகம் தவறாக இருக்கலாம்


இல்லை.. இல்லை.. உங்கள் யூகம் சரிதான்.. தேவையான உபகரணங்களோடு வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்!
ஆமாம்.. விசேட குட்டுக்கோல் ஒன்று - விமான நிலையத் தில் விட்டு வந்திருக்கிறேன்!
நல்லது மிஸ்டர் ஷா! அக்யுனோ அகால மரணமடைந்து விட்ட போதிலும் உங்களுடைய பயணம் வீணாகிப் போகாது!
ஊதிய விஷயம்?
கொஞ்சம் கூடுதலாக பணம் எதிர் பார்ப்பேன் - அவ்வளவுதான்!
நமக்குள்ளே ஒரு ஒப்பந்தம் ஏற்பட அது ஒரு தடையாக இராது..! சரி - சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன்.. இரவில் நீங்கள் வேலை செய்ய முடியுமா?
ஓ.கே.! மாடஸ்டி பிளைஸி என்றொரு பெண்ணைப் பற்றி கேள்விப் பட்டிருக் கிறீர்களா?
ம்ம்.. மாடஸ்டி.. மாடஸ்டி...? இல்லையே.. சற்று விநோதமான பெயர்.. கேள்விப் பட்டிருந்தால் மறக்கக் கூடிய பெயரல்ல!


ஏன்.. அவளுக்கென்ன?
எனக்கு அவள் எதிரி - ஆபத்தானவள்! அவள் என் கையில் சிக்காத பட்சத்தில், இன்றிரவு நாம் மேற்கொள்ளப் போகும் பணி நல்லவிதமாக நடந்து முடியுமா என்ற கிலேசம் எனக்கு இருக்கிறது!
என் ஆட்கள் அவளுக்கு வலை வீசிக் கொண்டிருக் கிறார்கள்!
ஆக்ஸிஜன் ஏற்பாடு செய்து தர வேண்டியது உங்கள் பொறுப்பு.. 300 கன அடி ஸிலிண்டர்கள் பதினைந்து தேவைப்படும்!
உங்களால் செய்து முடிக்க முடியுமா மிஸ்டர் ஷா?
ஏகப்பட்ட சூட்டுக் கோல்களை எரிக்க வேண்டி வரும்.. பரவாயில்லை - என் கைசவம் 250 அடி இருக்கிறது!
அஸ்தமனத்திற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கையில்
மேடம்.. திரும்பிப் பாருங்கள்
சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி அது! கூச்சல் போடாமல் மரியாதையாக எங்களோடு வந்து விடு - இல்லையேல் இங்கேயே பிணமாகி விழுவாய்!



பிடித்து வந்து விட்டோம் ..பிரபு! இவள் தன் படகை கட்டிப் போட்டிருந்த இடத்தில் மறைந்து காத்திருந்தோம்.. வந்தாள் - அகப்பட்டுக் கொண்டாள்!
ஓ.. நீங்கள் என்னிடம் விசாரித்த மாடஸ்டி பிளைஸி என்ற பெண் இவள் தானா?
ஆமாம்... மிஸ்டர் ஷா!
எங்கே அந்த இரண்டு பிள்ளைகளும்?
பத்திரமாக இருக்கிறார்கள்! ஆனால் இப்போதைக்கு உன் கவலை வேறொன்றை பற்றியதாக இருக்க வேண்டுமே!
கவலைப்பட வேண்டியவள் நீதானே யன்றி நானல்ல பெண்ணே
இருக்கலாம்.. ஆனால் எனக்கு விபரீதமாக ஏதாவது சம்பவித்தால் வெளியில் எடுத்துப் படிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விவகாரம் மொத்தத்தையும் விலாவரியாக எழுதி பாங்க் பெட்டகத்தில் வைத்துவிட்டு வந்திருக்கிறேன் - தெரிந்து கொள்


ஓ.. அப்படியா சமாச்சாரம்! சமர்த்துத்தான் நீ! அந்த வாக்கு மூலத்தை என்னிடம் ஒப்படைக்கக் கோரி நீ விண்ணப்பம் எழுதித் தரும்வரை உன்னை உயிரோடு விட்டு வைக்கிறேன்! இதைப் பற்றி நாளை சாவகாசமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் போதுமானது!
அடேய்.. வில்லி - சற்று பொறுமையாக இரு!
அன்று நள்ளிரவு வேளையில் - ரெட் க்ரைபனின் பீடத்தைச் சுற்றி அடுக்கப்பட்டிருந்த மணல் மூட்டை வளையத்திற்குள்ளாக தண்ணீர் நிரப்பப்பட்டது.
பீடத்தை தகர்க்க முனைப்பாக காரியத்தில் இறங்கினார் கார்வின்..
உதவிக்கு யாராவது வருவார்கள் என்று கனவு காணாதே பிளைஸி. அவர் தண்ணீருக்கு கீழே இருந்து செயல்படப் போவதால் வெளிச்சம் பிரதான நிலத்தில் இருப்போருக்கு தெரிய வாய்ப்பில்லை!
மாக்ஸ் அக்யுனே கையில் அகப்பட்ட கடிதத்தில் அப்படி என்னதான் எழுதி யிருந்தது..?
இப்போது உன்னிடம் சொல்வதற் கென்ன? அந்நாளில் இந்த எஸ்டேட்டுக்கு உரிமையாளரும் என் மூதாதையர்களில் ஒருவருமான லியோ அல்போரினி எழுதிய கடிதம் அது.. யாரோ அவரை கொல்ல சதி செய்திருக்கிறார்கள்..



உடனே அவர் தன் செல்வங்களை நவரத்தின கற்களாக்கி பெட்டியில் வைத்து பூமியில் புதைத்து அதன் மேல் உறுதி யான காங்கிரீட் பீடத்தோடு கூடிய ரெட் க்ரைபனை நிர்மாணித்தார். என் கொள்ளுப் பாட்டனார்..
அவரைக் கொன்று எஸ்டேட்டுக்கு வாரிசானார்... ஆனால் செல்வம் அனைத்தும் எங்கே எப்படி மாயமாக மறைந்து போனது என்ற விஷயம் புதிராகவே இருந்து விட்டது.
அந்த புதையல் சமாச்சாரம்தான் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது..
எனவே நீ மாக்ஸை தீர்த்துக் கட்டினாய்.. - அப்படித்தானே!
இது முடிய எவ்வளவு நேரம் பிடிக்கும் மிஸ்டர் ஷா?
சில மணி நேரம்! கீழே ஆழமாக போகப் போக பணி கடுமையாகி விடும் என்பதால்தான் தாமதம்!
முதலில் தரை மட்டத்தில் சில துளைகள் போடப் போகிறேன்.. பின்னர் வெடிகளை வைத்து இடையில் உள்ள காங்கிரீட் பகுதிகளை தகர்க்க வேண்டும்..
வெடிகளா..?
சின்னச் சின்ன வெடிகள்தான் - அதிகமாக ஓசை எழாது!



சூட்டுக் கோலின் முனையை பற்ற வைத்தார் கார்வின்
பின்னர் தண்ணீர் தேக்கத்தினுள் மண்டியிட்டு அமர்ந்தார்.
வில்லி காரியத்தை முடிக்கும் வரை பொறுமையாக இருந்துவிட்டு அப்புறம்தான் எங்களுடைய கைவரிசையைத் தொடங்க வேண்டும்..
காங்கிரீட் பொல பொலவென்று விட்டுக் கொடுத்தது...
அந்தக் காலத்து காங்கிரீட்! இந்தக் காலத்து காங்கிரீட் மாதிரி உறுதியோடு இல்லை..!
சூட்டுக் கோலை மாற்ற மூன்றாவது முறையாக கார்வின் மேலேறி வந்தபோது -
மிஸ்டர் ஷா..! காங்கிரீட் அமைப்பின் மத்தியில் ஏதாவது மறைத்து வைக்கப் பட்டிருந்தால் அதை இந்த அதீத சூடு பாதிக்குமா?
பாதிக்காது! காங்கிரீட்டை ஊடுருவி சூடு உள்ளே பரவாது - அத்தோடு தேங்கி நிற்கும் தண்ணீர் குளிர்ச்சியூட்டிக் கொண்டேயிருக்குமில்லையா?



வேலை எதிர்பார்த்த மாதிரி நடைபெறு கிறதா?
நான் கணித்ததை விட இருமடங்கு வேகத்தில் நடக்கிறது!
பீடத்தைச் சுற்றி சங்கிலியால் பிணைந்து கிரேனோடு இணைத்தார் கார்வின்..
அம்மாடியோவ். இந்த தண்ணீர் அவ்வளவு சூடு!
இன்னும் எவ்வளவு நேரம் பிடிக்கும்?
தன் இடை பெல்ட்டிலிருந்த சிறு கருவியை இரகசியமாக வெளியில் எடுத்து கை விலங்குகளை அகற்ற முயன்றாள் மாடஸ்டி
முடிந்த மாதிரிதான்! முட்டுக் கொடுத்து நிற்கும் நான்கு மூலைகளிலும் கொஞ்சம் விட்டு வைத்தேன். இப்போது அதை தகர்க்கப் போகிறேன்!
ார்வின் கடைசி முயற்சியாக நீரினுள் போயிருந்தார்.
இந்தக் கட்டத்தில் நீ கை விலங்கை அகற்றி சுதந்திரம் பெற்று உன் சகாவோடு சேர்ந்து எங்கள் மீது பாய முயற்சிப்பாய் என்பது என் கணிப்பு - சரிதானா.. பிளைஸி!
அடப்பாவி..!


இன்று பிற்பகலில் நான் ரோமில் எனக்குத் தெரிந்த ஒரு பத்திரிக்கை யாளருக்கு போன் செய்தேன். அவர் உன்னைப் பற்றி நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்.. அத்தோடு அவர் விவரித்த உன் சகாவின் அங்க அடையாளங்கள் அப்படியே மிஸ்டர் ஷாவுக்கு கச்சிதமாக பொருந்தின..
எனவே, சில மணி நேரத்திற்கு முன்பே நீங்களிருவரும் எனக்கு எதிராக சதியில் ஈடுபட்டிருக்கிற உண்மை எனக்குத் தெரியும்.
மேலே ஆபத்து உருவாகிவிட்ட உண்மை இன்னமும் கார்வினுக்குத் தெரியாது!
ஆயிற்று.. இனி கிரேனை ஏற்றலாம்!
மாடஸ்டி, அல்போரினி மற்றும் அவனுடைய கையாள் மீது பாய் வேண்டிய வேளை இது...
மாத்யூஸ்.. அவனை தீர்த்துக் கட்டு!
பலமாக கூச்சலிட்டாள் மாடஸ்டி -
வில்லி... தண்ணீருக்குள் பாயுங்கள் - நம் சதி அம்பலமாகி விட்டது!


சைலன்ஸர் பொருத்தப்பட்ட
துப்பாக்கி ஒரு தோட்டாவை
உமிழ்ந்தது.
டுப்!
வில்லி.. கடலுக்குள்
பாயுங்கள் - சீக்கிரம்!
பாய்ந்து முட்டித் தள்ளினாள்
மாடஸ்டி - அடுத்த தோட்டா
கார்வினைவிட்டு வேறெங்கோ
போனது..
கார்வின் கடலுக்குள் பாய்ந்தார்..
காயம்பட்ட தோளில் எரிச்சல்!
மாடஸ்டிக்கு என்னவாகுமோ
என்ற கவலை வாட்டினாலும்,
அவளுடைய கணிப்பு
என்றைக்குமே தவறானதில்லை
என்ற நம்பிக்கை தெம்பூட்டியது..
விலங்கிடப்பட்ட நிலையிலும்
முட்டியால் மாத்யூஸின் வயிற்றில்
இடித்து அவனை விழச் செய்த
மாடஸ்டி, மின்னல் வேகத்தில் ஓர்
உதை கொடுக்க, துப்பாக்கி எகிறிப்
போய் கடலுக்குள் விழுந்தது..
அவளை என்னிடம்
விடுங்கள்.. பிரபு!
அஹ்..!



மாளிகையை நோக்கி ஓட்டம் பிடித்தாள் மாடஸ்டி..
சுடாதேடா.. முட்டாள்! அந்த துப்பாக்கியில் சைலன்ஸர் இல்லை, தோட்டா முழக்கம் பிரதான நிலத்துக்கு எட்டினால் போலீஸ் பறந்தோடி வந்து சேருவது நிச்சயம்!
தப்பியோடி விட்டாள்.. பிரபு!
சைலன்ஸர் பொருத்தப்பட்ட ஒரே துப்பாக்கியும் கடலுக்குள் போய் விட்டது..! பரவாயில்லை - கைவிலங்கிடப்பட்டிருக்கும் அவளைக் கொல்ல நமக்கு துப்பாக்கி அவசியமில்லை.. உன் பிச்சுவாவை இப்படிக் கொடு.. மாத்யூஸ்!
கார்வினையும் கவனிக்க வேண்டும்.
அவனுடைய தலை தெரிந்தால் கட்டையால் ஓங்கி ஒரு போடு போட்டு தீர்த்துக் கட்டு.. நான் போய் அந்த பிடாரியை கவனிக்கிறேன்.
ஓகோ..! மாடஸ்டி தப்பித்துக் கொண்டு விட்டாள்!
விலங்கை அகற்ற இப்போது அவகாசமோ வசதியோ இல்லை.. ஆனால் இப்படிச் செய்து கைகளை முன் பக்கமாக கொண்டு வந்துவிட்டால் வசதி கூடுதலாக இருக்கும்!


என்னைத் தேடி இருவர் வருகிறார்கள்..
தோட்டா பாய்ந்த கார்வின் தலைமறைவாகி தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே
இவர்களோடு கண்ணா மூச்சி ஆட நேரம் இல்லை... சட்டென்று ஒழித்துக் கட்டிவிட்டு வில்லியின் உதவிக்கு நான் போக வேண்டும்!
மாக்ஸ் அக்யுனேவோடு அங்கே பல நாட்கள் சுற்றித் திரிந்திருந்ததால் அந்த மாளிகையின் அமைப்பு மாடஸ்டிக்கு அத்துபடி...
மிஸ் பிளைஸி... வெளியேறி வா - பிரச்னையை நமக்குள் சமரசமாக பேசித் தீர்த்துக் கொள்வோம்!
நான் இங்கே மேலே இருக்கிறேன்... அல்போரினி!



பிரபு... அவளை நாம் இப்போது கொன்றால் சிக்கல் வரலாம்.. பாங்க் பெட்டகத்தில் அவள் விட்டு வந்துள்ள வாக்கு மூலத்தை மறந்து விடாதீர்கள்..
அது நிஜமாக இராது...
திட்டமிட்டு வலிய நம்-பிடியில் அகப்பட்டிருக்கிறாள்.. அவளை நாம் கொல்லாதிருக்க அவள் விட்ட ரீல் அது! இவளைப் போன்றவர்கள் நேரடியாக பிரச்னையை எதிர் கொள்ளும் ரகம்...
என்னோடு சமரசப் பேச்சு நடத்த நீ விரும்பினால் இங்கே வா.. அல்போரினி!
கடலோர சுவரின் மீது நின்றவாறு நீரில் கார்வினின் தலை தென்படு கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தான் லூஜி
படகின் மறைவில் தலை நீட்டிய கார்வின் அருகில் தென்பட்ட தாரை கொஞ்சம் பிய்த்தெடுத்து தோள் காயத்தின் மீது அப்பிக் கொண்டார்..


மாளிகையினுள்ளே மாடஸ்டியின் குரல் எதிரிகளை அழைத்தது
இங்கே.. பிரதான படுக்கையறையில் நின்று கொண்டிருக் கிறேன்!
படுக்கையறையை நெருங்கிய அல்போரினியும், மாத்யூஸும் உள்ளே நுழையத் தயங்கினர்.
கதவை படீரென்று தள்ளித் திறந்து விட்டு ஒதுங்கிக் கொள் - உள்ளே நாம் நுழையும் போது அதிரடியாக நம்மைத் தாக்க அவள் தயாராக நின்று கொண்டிருக்கக் கூடும்.
ஆனால் தாக்குதல் பின்னாலிருந்து வந்தது...
தடுமாறி விழுந்த அல்போரினியின் கையிலிருந்த பிச்சுவா மாத்யூஸின் முதுகில் ஆழமாகப் பாய்ந்தது.
தன் காலணியில் மறைத்து வைத்திருந்த கத்தியை வெளியில் எடுத்தார் கார்வின்.
இரத்தப் போக்கை நிறுத்தியாயிற்று.. இனி நான் விரைந்து செயல் பட வேண்டும்..



தலை தெரியக் காணோம்... நிச்சயம் செத்துப் போயிருப்பான்...
அந்த உடல் மெள்ள அசைந்தாடி படித்துறையை நெருங்கியது..
அதோ.. அவன்! உயிர் போய் விட்டதா என்பதை உறுதி செய்து கொண்டுவிட வேண்டும்.
சுட்டால் ஓசை எழும் - பிரபு கோபித்துக் கொள்வார்.
எனவே, கையிலிருந்த கோடரி யால் கார்வினின் மண்டையில் ஓங்கி அடிக்க முயன்றான் லூஜி..
இளவரசி எங்கே என்று தேட வேண்டும்.. இரண்டு முரடர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாள்
- கைகள் இன்னமும் விலங்கிடப்பட்ட நிலையில்..! இவன் போட்ட துப்பாக்கி எங்கே கிடக் கிறது..? - ஆங்... இதோ!
ஆனல்.. முந்திக் கொண்டு பறந்து வந்த கத்தி அவனுடைய குரல் வளையில் பாய்ந்தது..
சதக்!


அல்போரினியும் மாடஸ்டியும் எதிரும் புதிருமாக சந்தித்துக் கொண்டார்கள்.
உன் மூதாதையர்கள் தங்களுடைய எதிரிகளை தீர்த்து கட்டியது இந்த இடத்தில்தான் - இல்லையா.. அல்போரினி? மாக்ஸ் அக்யுனே எனக்கு காட்டியிருக்கிறார்..
இரகசிய திறப்பு விலகியதும் அடியில் தென்படும் கிணறு போன்ற குழி இருநூறு அடி ஆழம் உடையது.. ஹூம் - கீழே எத்தனை எலும்புக் கூடுகள் மௌனமாக துயின்று கொண்டிருக் கின்றனவோ?
விரைவில் - அதாவது இன்னும் சற்று நேரத்தில் அந்த எண்ணிக்கை மேலும் ஒன்று கூடப்போகிறது...
நிச்சயமாக!
கையிலிருந்த கழியினால் அல்போரினி விலாச முயன்ற போது மாஸ்டி பாய்ந்து விலகினாள்.
இளவரசி!


வில்லி கார்வின்! அப்படியானால் லூஜியும் காலி!
எஞ்சியிருப்பது நீ மட்டும்தான்!
மாக்ஸ் அக்யுனே நேர்மையானவர்.. கண்ணிய மானவர்.. பீற்றல் பொக்கிஷங் களுக்காக அவரை நீ கொன்று விட்டாய்
நான் கொன்றதில் நியாயம் இருக் கிறது.. அந்த பொக்கிஷம் புதைக்கப்பட்டது என் மூதாதை யர்களால்... அது எனக்குச் சொந்த மாக வேண்டும்!
அனைத்தையும் விலை பேசி விற்ற பின் அதை நீ சொந் தம் கொண்டாடுவது என்ன நியாயம்... பேராசைக்காரன் நீ - உன்னை நான் விடப் போவதில்லை!
உனக்கு நான் பயப் படும் நிலையில் நீ இல்லை இப்போது!
சத்!
கழியின் பாதையிலிருந்து மீண்டும் மின்னல் வேகத்தில் விலகிக் கொண்டு விட்ட மாடஸ்டி அல்போரினியின் கையில் ஓங்கி ஓர் உதை விட்டாள்


கழி எங்கோ பறந்து போய் விழுந்தது.. ஆனல் அந்த முயற்சியில் மாடஸ்டி தரையில் விழுந்து விட்டாள்.. வெற்றிக் கொக்கரிப்போடு அவள் மீது பாயத் தயாரானான் அல்போரினி..
நெருங்கி வந்த அவன் கழுத்தில் கத்தரிப் பிடியாக விழுந்து இறுகியது மாடஸ்டியின் கால்கள்.. உடம்பை தரையில் அழுத்தி பலத்தை முழுவதுமாக கால் களுக்கு கொண்டு வந்து ஒரு சுழற்று சுழற்றினாள் மாடஸ்டி..
அல்போரினி தற்காத்துக் கொள்ள எந்த உபாயத்தையும் கையாள அவகாசம் இருக்கவில்லை...
ஐ..யோ..!
அல்போரினி செத்தொழிந்தான்..
காட்சியின் கடைசிப் பகுதி மட்டும்தான் என் பார்வையில் பட்டது.. ஏதோ மாயா ஜால
வித்தையை பார்ப்பது போலிருந்தது.. இளவரசி!


ஹலோ.. வில்லி - உங்களுக்கு ஆபத்தில்லையே?
தோளில் தோட்டா உராய்ந்து கொண்டு போனதை நீயும் தான் பார்த்தாயே.. வேறு எந்த காயமும் படவில்லை..
தற்காலிகமாக தாரை அப்பி வைத்திருக் கிறேன்..
அது சரி... அல்போரினியை நீ அனுப்பி வைத்த இடம் எது?
புராதன வெனிஸியன் சாவுப் பட்டறை! எதிரிகளை நரகத்துக்கு அனுப்பி வைக்கும் பழைய ஏற்பாடு!
படிகளைப் போல் நீட்டிக் கொண்டிருக்கும் கற்கள், உள்ளே விழும் ஆட்களை பதம் பார்த்து சாவை உறுதிப்படுத்தும் - இருநூறு அடி ஆழத்தை சென்றடையும் சடலம் பிறகு எவர் கண்ணிலும் படாது! அல்போரினிக்கு ஏற்ற முடிவுதான் இது!
என் காலனியில் உள்ள கருவியை எடுத்து முதலில் உன் கை விலங்கை திறப்போம் - இதை... கொஞ்சம் பிடி... இளவரசி!
லூஜியின் துப்பாக்கி!
இதைக் கொண்டு அருகில் உள்ள யானையை கூட உங்களால் குறி வைத்து சுட முடியாதே.. பின்னே எதற்காக இதை கையில் வைத்துக் கொண்டு அலைகிறீர்கள்?



ம்ம்.. முப்பது அடி தூரம் வரை இதைக் கொண்டு கச்சிதமாக என்னால் குறி வைத்து அடித்துவிட முடியுமே - எறிவதன் மூலம்!
நல்ல தமாஷ்! யாரும் கேட்டால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்!
மாத்யூஸையும் தூக்கி கிணற்றுக்குள் போட்டு விடலாம் - லூஜியை?
படித்துறை அருகில் மிதக்கிறான். ஏதாவது பளுவை கட்டி ஆழத்திற்கு அனுப்பி விடலாம்!
சீக்கிரம் இங்கே நிலவரத்தை நாம் சீர் செய்ய வேண்டும்.. விடிவதற்கு இரண்டு மணி நேரம் முன்பாக ஒரு நபரை நாம் சந்திக்கப் போகிறோம்..
அதன் பின் உங்களுடைய தோள் காயத்தை நான் கவனிக்க வேண்டும்,.
பொக்கிஷம் அடங்கிய காங்கிரீட் அமைப்பு தூக்கப்பட்டு மெதுவாக படகின் தளத்தில் இறக்கப்பட்டது...



படகு அசைந்தாடி நகரத் தொடங்கியது...
லாம்சன் தன் சொகுசுக் கப்பலில் ரிமினி அருகே இருப்பதாக எனக்குத் தெரியுமாதலால் நேற்று அவருக்கு போன் செய்தேன்
அடுத்து...?
விடிகாலை மூன்று மணிக்கு மாலமோக்கா அருகே நம்மை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பார்.
மாடஸ்டி..? உன் படகில் என்ன அது... ராட்சஸத்தனமாய்?
ரெட் க்ரைபன்.. கேள்விப்பட்ட தில்லையா லாம்சன்! இதை உங்கள் கப்பலுக்கு மாற்ற வேண்டுமே!
ஐந்து நிமிடங்களுக்குப் பின் -
சிலை அம்சமாக இருக்கிறது - சரிதான்!.. ஆனுல் பீடத்தையும் சேர்த்து ஏன் எடுத்து வந்தாய்?
அதை மிக கவனமாக உடைக்க வேண்டி யிருப்பதால்!
ஓகோ..
அந்தப் படகை என்ன செய்யப் போகிறோம்?
விடியப் போகிறது சற்று நேரத்தில் - மீட்டுக் கொண்டு போய்விடுவார்கள்!


உங்களுடைய டாக்டர் வந்திருப்பாரே - கொஞ்சம் கூப்பிடுங்கள்!
டாக்டர் இப்போது இங்கில்லை... மிகக் குறைந்த பணியாளர்களே கப்பலில் இருக்கின்றனர்..
நீ அவசரமாக அழைத்ததால் அப்படியே கிளம்பி வந்துவிட்டேன்..
என் மனமார்ந்த நன்றிகள்..
ஓ.கே.. வில்லி.. காயத்தை நானேதான் கவனிக்க வேண்டும் போலிருக்கிறது!
நல்லது.. டாக்டரை விட கனிவாக நீ என்னை கவனித்துக் கொள்வாய்!
கைவசம் மயக்க மருந்து எதுவும் இல்லையே
தூக்க மருந்து இருந்தால் அதுவே போதும்!
வில்லி... எது வேண்டும் உங்களுக்கு - விஸ்கியா.. வோட்காவா?
வோட்கா..! விஸ்கி - அப்புறம்!



ஓ.கே.. அப்படியே சற்று நேரம் கண்ணயர்ந் திருங்கள் வில்லி...
காயத்தை நன்றாக சுத்தம் செய்து கட்டுப் போட்டாயிற்றா?
விடியப் போகிறது லாம்சன்! பணிவிடை செய்ய உங்களால் ஆகாது.. நான் இங்கே படுத்துக் கொள்கிறேன்!
ஓ.கே..! அந்தச் சிலையை உடைக்கப் போவதாக
சொன்னாயே எதற்காக?
அந்த பீடத்தின் கீழ் பொக்கிஷம் புதைக்கப்பட்டிருக்கிறது லாம்சன்!
ஓ.கே.. காலையில் சந்திப்போம்.. குட் நைட்!
இரண்டு தினங்களுக்குப் பின்
ரிமினிக்குத் திரும்பவும் போய்ச் சேர்ந்தது அந்த சொகுசுக் கப்பல்
அங்கே தீவில் நான் பயன்படுத் தாத சிறு வெடிகளை இப்போது பயன்படுத்தப் போகிறேன்.. இளவரசி


விரிசல் விழச் செய்யும் ஆற்றலுடையவை.. மிச்சத்தை நாம் வேறுவிதமாக தகர்த்துக் கொள்ளலாம்.
கப்பலில் ஓட்டை போட்டுவிடாம லிருந்தால் சரி!
கவலை வேண்டாம் பிளைஸி.. கப்பலில் லைஃப் போட்டுகள் நிறைய் இருக்கின்றன..
அத்தோடு, புதிதாக ஒரு சொகுசுக் கப்பல் வாங்குவது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்
சரியான அசடு.. நீங்கள்! வில்லிக்கு வரம்பு தெரியும்!
மூன்று மணி நேர கடுமையான முயற்சிக்குப் பின்
இங்கே ஏதோ இருக்கிறது மிஸ்டர் கார்வின்..
அதுவேதான்!
தோண்டியெடு - சீக்கிரம்!
ஓ... அட்டகாசமாக ஜொலிக்கிறது.. இதை நீ கைப்பற்று முன் யாருக்கு சொந்தமாக இருந்தது பிளைஸி?
இது எனக்கு சொந்த மானதில்லை லாம்சன்... மாக்ஸ் அக்பூனோவை பணிக்கு அமர்த்தியவரின் கைக்கு போய்ச் சேர வேண்டிய பொக்கிஷம்!


தீவு பங்களாவை வாங்கி அதை மாக்ஸிடம் ஒப்படைந்து புனர் நிர்மாணம் செய்யச் சொன்ன இத்தாலிய மில்லியனரை ரோமில் போய் பார்த்தாள் மாடஸ்டி..
குட் ஆப்டர் நூன்.. மிஸ் பிளைஸி
உன்னைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன்.. மாக்ஸின் சிநேகிதி நீ என்ற முறையில் உனக்கு என் அனுதாபங்கள் உரித்தாகுக. துரதிர்ஷ்டவசமாக நிகழ்ந்துவிட்ட அந்த விபத்து துடிப்பான இளைஞனின் உயிரை குடித்து விட்டது..
அது தற்செயலாக நிகழ்ந்த விபத் தில்லை ஸார்.. அது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை..
என்ன... கொலையா?
தகராறான தகவல்களை சென்ஸார் செய்துவிட்டு மிச்சத்தை கோர்வை யாக அவரிடம் எடுத்துரைத்தாள் மாடஸ்டி..
ஓ..! பொக்கிஷம் புதைக்கப் பட்டிருக்கிற விஷயத்தை அறிந்த மாக்ஸ், அல்போரினி கொடுக்க முன் வந்த லஞ்சத்தை மறுத்திருக் கிறான்.. அதன் காரணமாக கொலை செய்யப்பட்டிருக்கிறான்.. இப்போது அல்போரினி எங்கோ கண்காணாமல் போய் விட்டான்.. நீ பொக்கிஷத்தை மீட்டு என்னிடம் ஒப்படைக்க வந்திருக்கிறாய் - அப்படித்தானே?


அல்போரினி மாதிரி ஒரு கிராத கனிடமிருந்து உயிரை பணயம் வைத்து மீட்ட பொக்கிஷங்களை பிரதியுபகாரம் எதிர் பாராமல் என்னிடம் கொடுத்து விட்டுப் போக வந்திருக்கிறாயா?
இல்லை - உங்களை ஒன்று கேட்கப் போகிறேன்!
ஸாண்டா மரியா அநாதை இல்லத்தில் ஒரு சிறுவனையும் ஒரு சிறுமியையும் அடைக்கலமாக விட்டு வைத்திருக்கிறேன். மாக்ஸை கொன்றவர்கள் அவர்களையும் தீர்த்துக் கட்ட முயன்றதுதான் காரணம்..
இந்த பொக்கிஷத்தில் பாதி, ஆஞ்சலோவும், நிஸாவும் பிரியாமல் வாழ, சிறுவர் சிறுமியர் சேர்ந்து வாழும் இல்லம் ஒன்றை தொடங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஸாண்டா மரியா அநாதை இல்லத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கை.. மாக்ஸ் உயிரோடு இருந்தால் அவருடைய விருப்பமும் இதுவாகத் தானிருக்கும்!
நான் ஏற்கனவே பெரும் பணக்காரன்.. பாதி என்ன மொத்தமாகவே வழங்கிவிட தயார்.. ஆனால் ஒரு வேண்டுகோள் - நடந்ததை ஒளிவு மறைவு இல்லாமல் உள்ளது உள்ள படி நீ எனக்கு சொல்ல வேண்டும் - சஸ்பென்ஸ் தாங்க வில்லை!
மாடஸ்டி அங்கிருந்து கிளம்ப நேரம் பிடித்தது!
அந்த பிரமுகர் என்ன சொன்னார்?
நினைத்ததை சாதித்துக் கொண்டு விட்டேன்.. உட்கார வைத்து நிறைய பேசினார்..


உங்களுக்கு பொறாமையாக இல்லையா.. வில்லி!
அந்த ஆள் தோட்டா காயம் பட்டுக் கிடந்து அவருக்கு நீ இப்படி பணிவிடை செய்ய நேர்ந்தால் ஒரு வேளை நான் பொறாமைப் படலாம்!
வெனிஸுக்குப் போய் அந்தக் குழந்தைகளை பார்க்கப் போகிறாயா
நிச்சயம் திரும்பி வருவேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்
மாக்ஸின் நினைவை தூண்டும் என்பதால் வெனிஸுக்கு நீ திரும்பவும் போக பிரியப்பட மாட்டாயோ என்பதால் கேட்டேன். நானும் கூட வரட்டுமா?
இல்லை.. வில்லி! அநாதை ஆசிரமம் போன்ற இடங்கள் உங்களுக்கு அலுப்பூட்டக் கூடும்!
என்ன அப்படிச் சொல்லி விட்டாய்! எனக்கு ஒரு வயதாக இருக்கும் போது அநாதை இல்ல இசைக் குழுவில் என் குரல் தான் உரத்துக் கேட்கும்.. ஹூம் - அதெல்லாம் இனிய நினைவுகள்.. திரும்பவும் வாய்க்கப் போவதில்லை!
முற்றும்




"முகமில்லா மாயாவி" இதழில் சில கேள்விகள் கேட்டிருந்தோம்-

சமீப காலமாய் நமது லயனில் வரும் கதைகள்; கதாநாயகர்கள்; இதழின் அமைப்பு பற்றியெல்லாம் உங்கள் அபிப்ராயங்களை கோரியிருந்தோம்.

உற்சாகமாய் வந்து குவிந்த உங்கள் பதில்களை சுருக்கமான முறையில் போன மாதத்து இதழில் (பிணம் காத்த புதையல்) வெளியிட்டிருந்தோம். அதைப் பற்றி கொஞ்சம் விபரமாய்...

| | | |
|---|---|---|
| 1. முதலில் சைஸ் பற்றி: | □ பாக்கெட் சைஸ் | : 47% |
| | □ பெரிய சைஸ் | : 53 |

நமது இதழ் அவ்வப்போது சைஸ் மாறிக் கொண்டேயிருப்பது நீங்கள் அறியாத தல்ல...! விலையை அதிகரிக்காமல் இருப்பதற்காக நாங்கள் செய்து வந்த 'ஸ்டண்ட்' அது! கடந்த 3 வருடங்களாகத் தான் நமது லயன் நிலையானதொரு சைஸில் வந்து கொண்டிருக்கிறது! தற்சமய சைஸ் நிறைய வாசகர்களுக்குத் திருப்தியாக இருக்கும் போதிலும், பாக்கெட் சைஸ் மோகம் இன்னும் போய்விடவில்லை என்பது தெரிகிறது! 10 வருடங்களுக்கு முன் நமது லயன் காமிக்ஸ் ஆரம்பித்த போது, முதல் இரண்டு இதழ்களும் (மாடஸ்டி க்தைகள்) பெரிய சைஸில் தான் வந்திருந்தன! முதல் இதழ் அருமையாக விற்பனையான போதிலும், இரண்டாவது இதழில் டெப்பாஸிட் காலி! 'ஏதாவது மாற்றம் அவசியமே' என்ற குழப்பத்தில் பிறந்த் புதிய சைஸ் - அதாவது 'பாக்கெட் சைஸ்'- புது ஹீரோவான ஸ்பைடர் Combination - ல் மிக நன்றாகவே ஒர்க்அவுட் ஆனது! அதைத் தொடர்ந்து வந்த் இதழ்களுக்குக் கிடைத்த உங்கள் அமோக ஆதரவே இன்று லயனை இத்தனை தூரம் கொண்டு வந்திருக்கிறது! ஆகையால் என்னைப் பொருத்தவரை Pocket Size ஒரு Lucky size தான்! இருந்த போதிலும், தற்சமய கதையமைப்புகளுக்கு பாக்கெட் சைஸ் ஒத்துவராது என்பதால் பெரிய சைஸே Continue ஆகும்! திடீர் திடீரென பாக்கெட் சைஸ் தலைகாட்டினாலும் ஆச்சரியப்படாதீர்கள்!

2. ரிப் கிர்பி கதைகளுக்கு சர்டிபிகேட்?



| | |
|---|---|
| □ வெரிகுட் | - 44% |
| □ சுமார் | - 44% |
| □ போர் | - 12% |



நிஜத்தை சொல்வதானால் இந்த ரிசல்ட் எனக்கு ஆச்சர்யத்தையே தந்தது! Personally speaking - நான் ஒரு ரிப் கிர்பி ரசிகன்! அடிக்கடி இவரது கதைகள் வந்து கொண்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்! மிக மிகத் தரமான சித்திரங்கள்; யதார்த்தமான, நம்பும்படியான கதையமைப்பு; ப்ளஸ் வித்தியாசமானதொரு துப்பறியும் ஜோடி (ரிப் கிர்பி + பட்லர் (தாத்தா) டெஸ்மாண்ட்) இந்தக் கதை வரிசைக்கு ப்ளஸ் பாய்ண்ட்! ஆனால் பெரும்பாலான நமது ரசிகர்களுக்கு இந்தக் கதைகளின் விறு-விறுப்பு மிகவும் குறைவாக இருப்பதாக அபிப்ராயம்! வாசகர்களின் கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். இனி மேற்கொண்டு விறுவிறுப்பான கிர்பி கதைகளையே தேர்வு செய்ய முயற்சி செய்கிறேன்; ரிப் கிர்பி கதைகள் வெளியிடுவதையும் சுருக்கிக் கொள்கிறோம்!

3. காரிகன்...?
- வெரிகுட் - 60%
- சுமார் - 35%
- போர் - 5%



No surprises here! எதிர்பார்த்தபடியே காரிகன் கதைகளுக்கு நிறைய மார்க்குகள்! ஆகையால் - இனி காரிகனை அடிக்கடி சந்திக்கலாம்! அதற்கான ஏற்பாடுகளை செய்து விடுகிறேன்!

4. டெக்ஸ் வில்லர் கதைகளை 2 பாகமாகப் பிரித்துப் போடலாமா?
- யெஸ் - 100%
- நோ -



No Comments!

5. தற்போதைய அட்டைப்பட Standards எப்படி?
- பளிச் ரகம் - 38%
- இன்னும் கவனம் தேவை - 62%

திரும்பவும் மண்டையில் ஒரு குட்டு! அட்டைப்படங்கள் நன்றாகவே இருப்பதாக நான் நினைத்து வந்தேன்! ஆனால் பாஸ் மார்க் தான் வாங்குகிறது என்பதைப் பார்க்கும்போது இன்னும் சுறுசுறுப்பாக செயல்பட வேண்டுமென்பது புரிகிறது! "வேங்கை வேட்டை", "பிணம் காத்த புதையல்" அட்டைப் படங்கள் வழக்கத்தை விட கொஞ்சம் better என்று கடிதங்கள் வந்துள்ளன! இன்னும் கவனம் கட்டாயம் செலுத்துகிறேன்!

6. புக்கை எடுத்தவுடன் முதலில் படிப்பது எதை?



- கதை - 32%
- ஹாட்-லைன் - 48%
- க்ரைம்-க்விஸ் - 13%
- மற்றது - 7%



குட்டுக்கள் வாங்கிய மண்டைக்கு கொஞ்சம் ஆறுதல்! 'தலையெழுத்தே' என்று இல்லாமல் 'ஹாட்-லைனை' ரசித்துப் படிப்பதற்கு - thanks a lot!

7. ராணுவக் கதைகள் அடிக்கடி போடலாமா?
- தாராளமாக - 69%
- வேண்டவே வேண்டாம் - 31%

'மின்னல் படையினர்', பெருச்சாளிப் பட்டாளம் தோன்றும் சுவாரஸ்யமான கதைகளை மட்டுமே அவ்வப்போது வெளியிடுகிறோம்! நிச்சயம் அனைவரும் ரசிக்கும் விதத்தில் இருக்கும்! ஆண்டு மலரில் வரயிருக்கும் "மரண மண்டலம்!" ஒரு 70.mm ஹாலிவுட் த்ரில்லரைப் பார்த்த திருப்தியைக் கொடுக்கப் போகிறது!

8. கார்டூன்கள் சேர்க்கலாமா?



- யெஸ் - 100%
- நோ - Nil

இந்த இதழிலேயே கொஞ்சம் கார்டூன் சேர்த்திருக்கிறோம்! அடுத்த இதழ் முதல் தரமான - அருமையான கார்டூன்களுக்கு 4-பக்கங்கள் ஒதுக்கியுள்ளோம்! படிப்படியாக பக்கங்கள் கூட்டப்படும்!

9. லயனின் ப்ளஸ் பாய்ண்ட்ஸ்



1. நல்ல கதைகள்
2. தத்ரூபமான படங்கள்
3. ஹாட்-லைன்
4. மொழி-பெயர்ப்புத் தரம்
5. க்ரைம் க்விஸ்

Thank you! Thank you! Thank you!

10. மைனஸ் பாய்ண்ட்ஸ்

a) தாமதம்

b) சரியாக எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை

இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொள்கி றோம். இதில் எங்கள் தவறு பெரும்பகுதி - ஏஜெண்டுகளின் குறை சிறு பகுதி.

பல்வேறு காரணங்களால் தயாரிப்பில் தாமதம் ஆகி வரு வது நிஜமே. அதைத் தவிர்த்து லயனை மாதம் முதல் தேதி நிச்சயமாய் கடைகளுக்கு வரவைக்க நிஜமான முயற்சிகள் எடுத்து வருகிறோம். உரிய சமயத்தில் முன்பணம் அனுப்பி, விற்பனையாளர் நண்பர்களும் ஒத்துழைத்தால் இந்த இரு பிரச்சனைகளுமே தீர்ந்து விடும்!

c) விலை ஜாஸ்தி :

மற்ற இதழ்களைப் போல நமது லயனில் விளம்பரங்கள் வருவதில்லை! விளம்பர வருவாய் கிடையாதென்பது ஒரு காரணம். மற்ற செலவினங்கள், கட்டுக்கடங்காமல் அதிக ரித்து வருவது இன்னொரு காரணம். இந்தக் குற்றச்சாட் டுக்கு எங்கள் பதில் "Not guilty Your Honour"

d) பழைய ஹீரோக் களை மறந்தது :



நிஜமான வாஸ்தவமான குறைபாடு. அதை நிவர்த்தி செய் யும் வகையில் தான் மாடஸ்டி பிளைஸி; ஸ்பைடர் ஆகி யோரை திரும்பக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியி ருக்கிறோம். ஆனால் இரட்டை வேட்டையர்; ஜான் மாஸ் டர்; இரும்புக் கை நார்மன்; C. I. D. லாரன்ஸ் போன்றோரின் கதைகளைக் காணோமே என்று வருந்தும் வாசகர்களுக்கு ஒரு bad news! நமது கதைகள் அனைத்துமே அயல்நாடுக ளில் உருவாக்கப்படுபவை என்பது நீங்கள் அறிந்ததே! பொதுவாக அங்குள்ள இளைஞர்களின் taste க்கு ஏற் பவே கதைகள் உருவாக்கப்படுகின்றன! அங்குள்ள Younger set க்கு இப்போதெல்லாம் வழக்கமான துப்பறியும் கதைகள் பிடிப்பதில்லை. மாறாக வெளி கிரகத்துவாசிகள் பற்றிய 'சயன்ஸ் பிக்ஷன்' கதைகளையே ரசிக்கின்றனர்! ஆகையால் நிறைய துப்பறியும் தொடர்களுக்குக் 'கல்தா' கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் நமது ஹீரோக் கள் சிலரும் அடங்குவதால் அவர்களை கொஞ்ச காலத்திற் குப் பார்க்க முடியாது! இது பற்றி படைப்பாளர்களிடம் தெரியப்படுத்தியுள்ளேன்! அதற்கான பலன் இருக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

e) விலையில் அடிக்கடி மாற்றங்கள் :

கதையின் நீளத்திற்கேற்ப விலையும் மாறுகிறது! விலையை மனதில் நிலையாகக் கொண்டு கதையில் கத் திரி போடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் இந்த விலை மாற்றங்கள் - ஏற்றங்கள்! மற்றபடிக்கு வேறு காரணம் கிடையாது!

ஸ். விஜயன்

- ஆசிரியர்




- **S. ஜெய்ஷங்கர், திருவண்ணாமலை.**

"பிணம் காத்த புதையல்" படித்தேன்! அருமையான கதை - அட்டைப்பட சூப்பர்ப்! "கதை சொல்லும் படங்கள்" கட்டுரைத் தொடர் எதிர்பார்த்தேன் - ஏமாற் விட்டீர்கள்!

- **A. அருண் கார்த்திக், பாளையங்கோட்டை.**

உலகம் முழுவதிலுமுள்ள காமிக்ஸ்களைப் பற்றி கட்டுரையாக எழுதப் போ தாக அறிவித்துள்ளீர்கள். இதை மனமுவந்து பாராட்டுகிறேன்!

- **H.N.M. ரம்ஸி,நுகவேலா, கடுகஸ்தோதா, இலங்கை.**

காரிகன், ஆர்ச்சி, கிர்பி, மாண்ட்ரேக், மின்னல் படையினர் ஆகியோரின் சாகஸ படு சூப்பர். ஒரே மூச்சில் வாசித்துவிட வேண்டும் - இல்லையேல் மன அரிப்புதா

- **செ. கமலநாதன், வவுனியா, இலங்கை.**

ரூ. 20/- விலையில் லயனின் 100வது இதழ் வருவது குறித்து மகிழ்ச்சி! அ இதழிற்கு நீங்கள் சூட்டியிருக்கும் பெயர் மிக அட்டகாசமாக உள்ளது!



## TOP 10!

1 - 100 வரையிலான லயன் லிஸ்ட் அனுப்பும்போதே - உங்களுக்குப் பிடித்தமான 10 லயன் காமிக்ஸ் இதழ்களைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்!

ஏகோபித்த ஆதரவு பெற்றுள்ள முதல் 10 கதைகளையும் இடையிடையே மறுபதிப்பு செய்கிறோம்! ஓ.கே. யா?

– ஆசிரியர்

| உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள... | வாசக நண்பர்களே,<br>பொறுமையாக இந்தக் கேள்விகளுக்கு பதில் எழுதி அனுப்புங்களேன்! குலுக்கல் மூலம் 101 அதிர்ஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுக்கவிருக்குறோம்! அவர்களுக்கு ஒரு ''லயன் கீ செயின்'' பரிசு! |
|---|---|

1. உங்கள் பெயர் : ____________ வயது ______
2. உங்கள் குடும்பத்தில் மொத்தம் எத்தனை பேர்? : ______
3. உங்களைத் தவிர உங்கள் குடும்பத்தில் வேறு யாரேனும் இந்த புக்கை படிக்கிறார்களா? :
   - ☐ அப்பா
   - ☐ அம்மா
   - ☐ சகோதரிகள் / **சகோதரர்கள்**
4. இந்த இதழ் உங்கள் கைக்கு எப்படி வந்து சேர்ந்தது? :
   - ☐ நான் வாங்கினேன்
   - ☐ பெற்றோர் வாங்கிக் கொடுத்தது
   - ☐ இரவல்/லெண்டிங் லைப்ரரி
   - ☐ வேறு விதமாய் : ____________
5. இந்த இதழைப் படித்து முடிக்க எத்தனை நேரம் ஆனது? : ______
6. ஒரு முறை படித்த இதழை சில நாட்கள் கழித்து திரும்பவும் படிப்பதுண்டா? : ______
7. நீங்கள் டி.வி. விரும்பிப் பார்ப்பீர்களா? :
   - ☐ யெஸ்
   - ☐ நோ
8. உங்கள் வீட்டில் கேபிள் டி.வி. இருக்கிறதா? :
   - ☐ யெஸ்
   - ☐ நோ
9. டி.வி.யில் கார்டூன் பார்ப்பதுண்டா? :
   - ☐ யெஸ்
   - ☐ நோ



காமிக்ஸ் வாங்குவதற்கென்று பணம் ஒதுக்குவதுண்டா - அல்லது அப்படி Planning எதுவும் கிடையாதா? : ______

உங்கள் வீட்டிற்கு வந்து போகும் இதர பத்திரிக்கைகள்? : ____________ : ____________ : ____________

இதற்கு முன்னர் நமது இதழில் வெளியாகும் போட்டிகளில் கலந்து கொண்டது உண்டா.. அல்லது வாசகர் கடிதம் போன்றவை எழுதியதுண்டா? ____________ ____________

கடந்த நாலைந்து மாதத்தில் நமது இதழில் ஏதேனும் மாற்றம் தெரிகிறதா? :
- ☐ யெஸ் ____________
- ☐ நோ ____________


லயனின்
10 வது ஆண்டு மலர்!
அட்டகாசமாய் வருகிறது!
மரண மண்டலம்!
மின்னல் படையினரின் ஆக்ஷன் திரில்லர்!
லயன் காமிக்ஸ்
விலை ரூ. 5/-


'ஸ்பைடர்'
செஞ்சுரி
ஸ்பெஷல்!
ரூ. 1001/-
பரிசுப் போட்டிகள்!
க்ரைம் க்விஸ்!
ரூ.20/-